இதழ் 221


# மண்

ஜேர்மனி / 2023
புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct




70வது பிறந்தநாள் (31.08.2023)
ஊடாகப்பணியில் 50வருடங்கள் (1973 - 2023)
"மண்" சஞ்சிகை

ஆசிரியர் வைரமுத்து சிவராசா - ஜேர்மனி









யேர்மனியில் அமரத்துவம் அடைந்த திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன் அவர்களின் 31ம் நாள் நினைவாக துணுக்காய் ஒளிரும் இல்ல மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோருக்கு 02.07.2023 அன்று உணவு வழங்கப்பட்டது. நிதி அனுசரணை திருமதி பிங்கலை செந்திலன்- யேர்மனி.










யேர்மனியில் அமரத்துவம் அடைந்த திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன் அவர்களின் 31ம் நாள் நினைவாக வவுனியாவிலுள்ள எழுச்சியின் கரங்கள் அமைப்பு உடாக வறியவர்களுக்கும் மற்றும் முதியோருக்கு 02.07.2023 அன்று உணவு வழங்கப்பட்டது. நிதி அனுசரணை திருமதி பிங்கலை செந்திலன் - யேர்மனி

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de



**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

தெற்காசியப் பிராந்தியத்தில் சிறந்த சுகாதார சேவை வழங்கும் நாடுகளில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கின்றது இலங்கை. இங்கு சுகாதார சேவையின் தரம் உயர் மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது. அதன் பயனாக இந்நாட்டு மக்கள் ஆரோக்கிய ரீதியில் பல்வேறு விதமான பிரதிபலன்களை அடைந்து கொண்டுள்ளனர்.

எதிர்பார்க்கப்படும் வயதெல்லையில் அதிகரிப்பு, போலியோ, சின்னமுத்து, மலேரியா, யானைக்கால் நோய் போன்றன முற்றாக ஒழிப்பு, அதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அங்கீகாரம், இன்னும் பல நோய்கள் கட்டுப்பாடு, நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்து வழங்கல் 95 வீதத்திற்கும் மேல் நடைமுறை உள்ளிட்ட பல முன்னேற்றங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவை. இவை மாத்திரமல்லாமல் ஆரோக்கிய ரீதியில் இன்னும் பல முன்னேற்றங்களும் எட்டப்பட்டுள்ளன. இதற்கு இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் இலவச சுகாதாரக் கொள்கைகள் பாரிய பங்களிப்பு நல்கியுள்ளன.

இந்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே இலவச சுகாதார சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கென பாரிய சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் ஆளணி வசதிகளை இந்நாடு ஏற்படுத்தி இருக்கின்றது. இச்சேவைக்கென வரவு செலவு திட்டத்தின் ஊடாக கோடிக்கணக்கான ரூபா நிதி வருடா வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படுகின்றது.

இவ்வாறான ஏற்பாடுகளின் ஊடாக நாட்டு மக்கள் ஆரோக்கிய ரீதியில் பாரிய முன்னேற்றங்களை அடைந்து கொள்ள இந்நாட்டு மருத்துவர்களின் பங்களிப்பும் அளப்பரியதாகும். இது எவ்விதத்திலும் குறைத்து மதிப்பிட முடியாத பங்களிப்பு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

கடந்த ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இந்நாடு முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் நாட்டை விட்டு வெளியேறுவதில் மருத்துவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த வருடத்தில் மாத்திரம் 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமே குறப்பிட்டிருக்கிறது. ஆனால் மருத்துவர்கள் அவ்வாறான முடிவை எடுக்க முன்னர், தாம் மருத்துவராக வருவதற்கு இந்நாட்டு மக்களின் வரிப்பணம் எவ்வளவு தூரம் பயன்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கையில் இலவசக்கல்வியால் பல்லாயிரம் எழை, விவசாய, கூலி மக்கள் மட்டுமன்றி பணக்கார மக்களும் பெரும் பயனை அடைந்துவருகிறார்கள். சிறுவயது தொடக்கம் பல்கலைககழகப் பட்டம்வரை மட்டுமல்ல உயர் தொழில் பெறுவதற்கான கல்வியையும் இந்த நாட்டு அரசு பெருங்கோடி பணத்தை ஒவ்வொரு பிரசைக்கு செலவழித்து வருகின்றது. அத்தோடு அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சி பெற வைத்து அனைத்தையும் அரசு செலவழித்து முன்னேற்றமடைய வைத்துவிட இவர்கள் நாட்டைவிட்டு ஓடிச்செல்வது எவ்வளவு துரோகத்தனம்தான்.

இந்நாடானது சுகாதார சேவையை மாத்திரமல்லாமல் கல்வியையும் முற்றிலும் இலவசமாக மக்களுக்கு பெற்றுக்கொடுத்து வருகின்றது. இலவச சுகாதார சேவைக்கு போன்று இலவச கல்விக்கும் இந்நாட்டு மக்களின் வரிப்பணம் தான் செலவிடப்படுகின்றது. அதனால் தாம் மருத்துவராகப் பங்களித்த இந்நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய தார்மீக பொறுப்பு ஒவ்வொரு மருத்துவருக்கும் உள்ளது. அவர்கள் இந்நாட்டின் இலவச கல்வி கொள்கையில் கற்று மருத்துவர்கள் ஆனவர்களாவர். அதனால் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியைக் காரணமாகக் கொண்டு நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாததாகும்.

இந்நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் மருத்துவர்கள் மாத்திரமல்லாமல் நாட்டில் உள்ள எல்லா மக்களும் முகம் கொடுக்கவே செய்தனர்.அப்படி இருந்தும் 1500 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், மேலும் 5000 மருத்துவர்கள் வெளியேற இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், இது நாட்டின் இலவச சுகாதார சேவை பாரிய நெருக்கடிக்கு வழிவகுக்கும் என்றும் கூறியுள்ளது.

நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது சுமார் 20 ஆயிரம் வைத்தியர்கள்தான் கடமையாற்றுகின்றனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் நாட்டை விட்டு வெளியேறினால் இலவச சுகாதார சேவையின் நிலைமை என்னவாகும் என்பதை ஒரு தரம் எண்ணிப் பார்க்கத் தவறலாகாது.

இந்தப் பின்புலத்தில் தான் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறாது தக்க வைத்துக் கொள்வது அவசியம் என வலியுறுத்தி இருக்கிறது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம்.ஆகவே நாட்டின் சுகாதார சேவையின் தரத்துக்கும் மக்களின் நலன்களுக்கும் முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டிய பொறுப்பு மருத்துவர்கள் முன்பாக உள்ளது. அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர்கள் செயற்படுவார்களாயின் இந்நாட்டு சுகாதார சேவையின் தரமும் மக்களின் நலன்களும் பேணிப் பாதுகாக்கப்படும். அதுவே இந்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும். - ஆசிரியர் -

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி....

### வஞ்சகம் பேசேல்..

மனதில் ஒன்றை வைத்துக்கொண்டு வாயினால் அதற்கு நேர்மாறான ஒன்றைச் சொல்வது கபடமான செயலாகும். இதை வஞ்சகம் என்று கூறுவார்கள். நல்லவர்களைப் போல நடந்துகொண்டு கெடுதல் செய்வார்கள். சில கயவர்கள் இப்படியான வஞ்சகமான செயல் புரிவோரை, கபடமாக நடந்துகொள்வோரை யாரும் மதிக்கமாட்டார்கள். நம்பமாட்டார்கள். உள்ளத்தில் என்ன நினைக்கிறோமோ அதன்படியே பேசவேண்டும்.. நடக்கவேண்டும். இத்தகையவர்களையே மக்கள் மதிப்பார்கள். நம்புவார்கள். இல்லாதவர்களை ஒதுக்கிவிடுவார்கள். ஆகவே பிறர் மதிக்கும்படி, நம்பும்படி நீ வாழவேண்டாமா?.. அப்படி வாழ நீ வஞ்சகம் பேசக்கூடாது. இதையே வஞ்சகம் பேசேல் என்று அறிவுறுத்துகிறார் ஔவைப்பாட்டி.

### அழகு அலாதன செய்யேல்..

நீ பள்ளியிலிருந்து வந்துகொண்டிருக்கிறாய் வழியில் ஒரு கைமணிக்கூடு கிடைக்கின்றது.. அது விலை மதிப்புடையது. நீ அதை எடுக்கிறாய். நீ எடுத்ததை யாரும் பார்க்கவில்லை. அதை நீ உனதாக்கிக் கொள்ளலாம். ஆனால் ஒரு பெரியவர் அங்கு தேடுகிறார். தன் கை மணிக்கூடு தொலைந்து போய்விட்டது என்கிறார். இந்த நிலையில் நீ அதை அவரிடம் நீட்டுகிறாய். அவரின் கவலை தோய்ந்த முகத்தில் களிப்பு மலருகின்றது.. உன் செயல் கண்ணியமானது, அழகானது, சிறப்பானது. கை மணிக்கூட்டைத் தராமல் நீயே வைத்துக்கொண்டிப்பாயானால் அது இழிவான செயலாகும் என்கிறார் ஔவைப்பாட்டி.

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## ஆத்திரத்தில், ஆபத்து அதிகம்.

- ஆழமான சிந்தனைகள், அவசியமானதும் அவசரமானதும் கூட.
- ஆர்வத்துடன் அனைத்தையும் அறியும்போது, அதிக ஆற்றல்கள் பெறுகிறோம்.
- ஆய்வுகள் அனுதினம் தேவை, அது ஆபத்துக்கள் அணுகாமல் காப்பாற்றும்.
- ஆபத்தான ஆலோசனைகளை அகற்றி,ஆக்கபூர்வமானசெயல்திட்டங்கள் தேடு.
- ஆபாரமான புலனுணர்வுகள் மூலம், புரிந்துணர்தல் பலம்பெற்று புத்துயிர் பெறுகிறது.
- ஆற்றல்கள் அதிக சக்தியுள்ளது, கஷ்டத்தின் மத்தியிலும் அரிய சாதனை படைக்கும்.
- ஆழ்ந்து ஆராய்ந்து, அவதானத்துடன் பயிலும் பாடங்கள், பெரும் பலனைக் குவிக்கும்.
- ஆலோசனைகளை செவிசாய்க்காதவர்கள், ஆபத்திற்குள் சிக்கித் தவிக்கிறார்கள்.
- ஆற்றல்மிக்க அறிவை வளர்ப்பவர்கள், வரலாற்றைப் படைக்கும் வல்லவர்களாகிறார்கள்.
- ஆற்றில் இறங்குமுன், ஆழத்தை அறிந்துகொள், ஆபத்து அணுகாமல் தவிர்க்கலாம்.
- ஆசைகளை அதிகரித்து அவதியுறும் மனிதன், விலங்கு நிலைக்குத் தள்ளப்படுகிறான்.
- ஆசை நிறைந்த எச்சங்களால், அவா புகுந்து அதிருப்தி நிலையை அடைகிறோம்.
- ஆசை உள்ளவரை அந்தரமும் தொந்தரவும், கூடவே வந்து குடியிருக்கும்.
- ஆசையில் அலைபவர்களுக்கு, அமைதி அழிந்து ஆனந்தம் அறவே அற்றுப்போகிறது.
- ஆசையும், நிராசையும் அவரவர் அறிவின் ஆற்றலுக்குள் அடங்குகிறது.
- ஆசையைக் குறைத்துக் கொண்டால், ஆயுள் முழுவதும் ஆனந்தம் அமையும்.
- ஆத்திரத்தில் அதிகம் சாதிக்க ஏலாது, அனுசரிப்பதில் அதிகமாய்ப் பெறலாம்.
- ஆத்திரத்திற்கு அடிமையாகும்போது, ஆபத்துக்களும் அருகில் உட்காருகிறது.
- ஆத்திர ஆவேசங்கள், அதிக தவறுகளைப் புகுத்தி அழிவுக்குள் தள்ளுகிறது.
- ஆத்திரத்தை அடக்கும்போது, அழிவைத் தடுக்கும் பாதையும் கூடவே திறக்கப்படுகிறது.
- ஆத்திரத்திற்குள் அன்பு நுழையும்போது, அடக்கி அமர்ந்து ஆனந்தம் பெருக்கும்.
- ஆணித்தரமான நம்பிக்கையின் நீச்சலில் இருந்து, அழகான வாழ்வு பூத்து மலர்கிறது.
- ஆவலின் தூண்டுதலில், அறிவு ஆழமாய்ப் பதிந்து அர்த்தமுள்ள வாழ்வைத் தருகிறது.
- ஆரோக்கியத்துடன் நகரும் ஆனந்த வாழ்வு நீடிக்க, அவரவர் கையில் ஆர்வம் வேண்டும்.

# மூத்தோருக்கு மரியாதை கொடுப்போம்!..




மூத்தோருக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்க வேண்டும். மரியாதை செய்ய வேண்டும். உதவிகள் புரியவேண்டும். பெற்றோர்கள், வயதில் மூத்தவர்கள், அயலவர்கள் எல்லோருக்கும் எம்மால் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

தந்தை எவ்வளவோ கஸ்டப்பட்டு உழைத்து எமக்குத் தேவையானவற்றைத் தந்து வளர்க்கிறார். தாய் பல துன்பங்களைச் சுமந்து பெற்றெடுத்து கண்ணும் கருத்துமாகப் பராமரிக்கிறார். தாய், தந்தையர் எம்மைக் கற்றோர்களாக்க முயற்சி செய்கிறார்கள. எங்கள் நன்மைகளில் கரிசனையுள்ள அவர்களின் நல் வாழ்வுக்காக நாம் எந்நாளும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.பெற்றோர்களுக்கு மன வேதனை ஏற்படுத்திய எவருக்கும் இறைவனின் தண்டனை இவ்வுலகத்திலும் மறு உலகத்திலும் கிடைத்தே தீரும்.

ஆசிரியர்கள் எங்களுக்குக் கல்வியைப் போதிக்கிறார்கள். அன்பாக நடந்துகொள்கிறார்கள். புத்திமதி சொல்கிறார்கள். நல்ல பழக்கவழக்கங்களைச் சொல்லித் தருகிறார்கள் அவர்களுடன் மரியாதையுடனும் அன்புடனும் நடந்துகொள்ள வேண்டும். அவர்களின் மனம் நோக நடக்கக்கூடாது. நாம் அவர்களின் சொற்படி நடந்து நல்லபிள்ளைகளாகப் பெயர் எடுக்கவேண்டும். பெற்றவர்கள் மட்டுமன்றி உறவினர்களையும் நாம் மதிக்க வேண்டும். அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுவாக எங்களைச் சூழ்ந்துவாழும் மூத்தவர்கள் எல்லோரிடமும் இனிமையாகவும் பணிவாகவும் மகிழ்ச்சியாகவும் பழகிக்கொள்வது சிறுவர்களாகிய எங்களது கடமையாகும். வயதில் முத்தோர் யாரையாவது கண்டால் சிறியோராகிய நாம் முதலில் வணக்கம் சொல்லல் வேண்டும். மூத்தவர்களின் அறிவுரைகளை எந்நாளும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்..

**சாஹிப் பரீதா - சிலாபம்**




**முல்லாவின் கதைகள்...**

# கல்விமானுக்கு எழுந்த சந்தேகம்

ஒரு நாள் அயல்நாட்டில் இருந்து வந்த இரண்டு கல்விமான்கள் முல்லாவைச் சந்தித்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்தக் கல்விமான்களில் ஒருவர் முல்லாவை நோக்கி முல்லா அவர்களே! உலகத்தில் பொய்யைக் காட்டிலும் உண்மையின் மதிப்பு அதிகமாக இருக்கிறது, அது ஏன்? என ஒரு சந்தேகத்தைக் கேட்டார்.

நானும் உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன் உலகத்தின் இரும்பைவிடத் தங்கத்துக்கு அதிக மதிப்பு இருக்கிறதே. அது ஏன்? என்று பதில் கேள்வி கேட்டார் முல்லா.

உலகத்தில் இரும்பு தாரளமாக எங்கம் கிடைக்கிறது. அதனால் இரும்பின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. தங்கமோ உலகத்தில் மிகவும் அரிதாகத்தான் எங்காவது ஒரிடத்தில் கிடைக்கிறது. அதனால்தான் தங்கத்தின் மதிப்பு அதிகமாக இருக்கிறது என்றார் கல்விமான்.

பொய்க்கும் உண்மைக்கும் இந்த உதாரணமும் பொருந்தும். பொய் உலகத்தில் யாரிடமும் தாராளமாக் கிடைக்கிறது. ஆனால் உண்மை பேசுபவர்களைக் கண்டுடிபிடிப்பதுதான் அரிதாக இருக்கிறது. இவ்வாறு உண்மை எளிதில் கிடைக்காத பொருளாக இருப்பதால்தான் அதற்கு அதிகமான மதிப்பு இருக்கிறது என்று முல்லா பதில் சொன்னார்.

அந்த விளக்கத்தைக் கேட்டு கல்விமான்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

# யேர்மனி தமிழ்க் கல்விச் சேவை - ஐரோப்பா ஆதரவில் டோட்முண்ட் வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை நடத்தும் 17ஆவது வருடாந்தத் திருக்குறள் மனனப் போட்டி 2023

---

திருக்குறள், மனித வாழ்விற்கு வழிகாட்டும் உலகப் பொதுமறை. தமிழர் வாழ்வின் இலக்கணம் திருக்குறள். பெரும் சிறப்புவாய்ந்த திருக்குறளை, நம்பிள்ளைகள் அறிந்தும்,படித்தும் பயனடைய வழிகாட்டும் நோக்கில் நடாத்தப்படும் போட்டியே, திருக்குறள் மனனப் போட்டியாகும். இப்போட்டியில் பிள்ளைகளைப் பங்குகொள்ளச் செய்து, திருக்குறள்வழி வாழ வைப்பதற்கும், தமிழ்க் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பெற்றோர்களும், பெரியோர்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

ஒவ்வொரு பிரிவில் பங்குபற்றும் பிள்ளைகளில் கூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு , முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும்.பங்குபற்றிய யாவருக்கும் பதக்கங்கள் வழங்கப்படும்.

2023 11 11ந் திகதி டோட்முண்ட் நகரத்தில் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இடம் பின்பு அறியத்தரப்படும்.

முடிவுகள் யாவும் அத்தினமே அறிவிக்கப்பட்டு பரிசுகளும், பதக்கங்களும் வழங்கப்படும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி போட்டிக்கான அனுமதிக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். ( ஒருவருக்கான கட்டணம் 1 12 ஒயிரோ. குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக் கூடுதலானவர்கள் பங்குபற்றும்போது, முதலாவது விண்ணப்பத்தாரர் தவிர்ந்த மற்றவர்களுக்கு முறையே 8 ஒயிரோ

போட்டிக்கான விபரங்களையும், விதிமுறைகளையும் நன்கு கவனித்து கொள்க. பிரிவுகளுக்கான வயதுக்கணிப்பை, போட்டியின்போது உறுதிப்படுத்த வேண்டும். வயதுக்கவனிப்பு மிக முக்கியம். அந்தந்தப் பிரிவுகளுக்குரிய குறட்பாக்களையே மனனம்செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி 2023 10 14ந் திகதிக்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.அனுப்ப வேண்டிய முகவரி:

Valluvar Tamilische Schule
Dortmund
P.Srijeevaghan
Kuhlmannsfeld 49
45355 Essen

பணம் அனுப்ப வேண்டிய வங்கி விபரம்:
Tamilischer Bildungsverein Deutschland e.V
Bank:- Sparkasse UnnaKamen
IBAN:- DE914435 0060 0005 0533 35
Verwendungszweck: Thirukkural Pooddy

மேலதிக விபரங்களுக்கு
தொலைபேசி இல: 0201 46932106 கைத்தொலைபேசி இல: 015757565305
மின்னஞ்சல் - E-Mail: jeevaghan08@gmail.com

# நகுலின் குட்டிக் கதைகள்...

## நன்றி மறப்பது

ஒரு நாள் பிள்ளையும் அம்மாவும் விளையாடும் இடத்திற்கு போனார்கள்.அங்கு அம்மாவும் பிள்ளையும் சில விளையாட்டுப் பொருட்களை வீட்டில் மறந்துவிட்டுவிட்டு வந்துவிட்டனர். அம்மா பிள்ளையிடம் நீங்கள் மற்றவர்களிடம் இருந்து கேட்டு விளையாடு எனக் கூறினார்.பிள்ளை மற்றவர்களிடம் பொருட்களைக் கேட்டு வாங்கி சேர்ந்து விளையாடியது.

அப்போ சேர்ந்து விளையாடும் பிள்ளை அழுதது.அம்மாவுடன் வந்த பிள்ளை கோபப்பட்டு மற்றவர்களின் பொருட்களை எடுத்து தான் மட்டும் விளையாட வேண்டும் என்றது. அதற்கு அம்மா மற்றவர்களுடன் அன்பாக இருப்பதுடன் நன்றியுடன் இருக்க வேண்டும் எனக்கூறினார். இத்துடன் மற்றவர்கள் பிழை செய்தால் மன்னிக்கும் பழக்கமும் வேண்டும் என்றார். பின்னர் பிள்ளை மற்றவர்களிடம் மன்னிப்புக்கேட்டு நன்றியும் கூறியது.

" நன்றி மறப்பது நன்று அன்று"

**செல்வன் நகுல் துரையரங்கன்**
**எசன்-யேர்மனி**

# அம்மாப்பாட்டு...

அம்மா..அம்மா இங்கே வா
ஆசை முத்தம் தா...தா..
இலையில் சோறு போட்டு
ஈயைத் துார ஓட்டு
உன்னைப் போன்ற நல்லாள்
ஊரில் யார்தான் உள்ளார்
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இங்கே இல்லை
ஐயம் என்று சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதுதல் என்றும் நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அ.்.தே எனக்கு வழியாம்...

**செல்வன் சுஜித் தர்மசீலன்**
திருஞான சம்பந்தர் குருகுலம்
மட்டக்களப்பு

# நம்நாடு...

இலங்கை நாடு நம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வதும் எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்,தேயிலை,தென்னை, பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு
பல இனமக்கள் நண்பர்களாய்
பழகியே வாழ்வது நம்நாடு.....

**செல்வன் டக்ஸயன்**
**உதயகுமார்**
திருஞான சம்பந்தர் குருகுலம்
மட்டக்களப்பு

## நூல்களை இயற்றியவர்கள்......

01- திருக்குறள் - திருவள்ளுவர்
02- ஆத்திசூடி - ஔவையார்
03- மகாபாரதம் - வேதவியாசர்
04- சத்தியசோதனை - மகாத்மாகாந்தி
05- பகவத்கீதை - பகவான் சிறீ கிருஷ்ணர்
06- சிறாப்புராணம் - உமறுப்புலவர்
07- மகாபாரதவம்சம் - மகாநாமதேவர்
08- பெரியபுராணம் - சேக்கிழார்
09- கம்பராமாயணம் - கம்பர்
10- கீதாஞ்சலி - ரவீந்திரநாத்தாகூர்

**செல்வன் எஸ் கோபிதன்**
யாழ் இந்துக்கல்லூரி

### மரபுத்தொடர் விளக்கம்...

01- கண்வைத்தல் - விருப்பம் கொள்ளுதல்
02- கண் வளர்த்தல் - நித்திரை செய்தல்
03- கண்ணெறிதல் - கடைக்கண்ணால் பார்த்தல்
04- கண் மூடுதல் - இறத்தல்
05- கண் திறத்தல் - அறிவு உண்டாதல்
06- கழுத்துக்கொடுத்தல்பிறர்துன்பத்தில்உதவுதல்
07-கழுத்தறுத்தல் - நம்பிக்கைத் துரோகம் செய்தல்
08- கழுத்திற் கட்டுதல் - வலிந்து திணித்தல்

### எதிர்ப்பொருட் சொற்கள்...

01- இரகசியம் - பரகசியம்
02- இணக்கம் - பிணக்கம்
03- இணை - தனி
04- இகழ் - புகழ்
05- இன்னார் - இனியார்
06- இன்சொல் - வன்சொல்
07- இம்மை - மறுமை
08- இயற்கை - செயற்கை
09- இல்லறம் - துறவறம்
10- இலாபம் - நட்டம்
11- கீர்த்தி - அபகீர்த்தி
12- கீழோர் - மேலோர்
13- கீழ்த்திசை - மேல்த்திசை
14- குறுக்கம் - விரிவு
15- குடியரசு - முடியரசு
16- குறைவு - நிறைவு
17- கோடை - மாரி
18- கோழை - வீரன்
19- கோபம் - சாந்தம்
20- கோலம் - அலங்கோலம்

### விடுகதைகள்...

1- முள்ளுக்கோட்டைக்குள் முத்துக் குவியல் அது என்ன..
2- கண்ணுக்குக் கருப்பழகி நாவிற்கு இனிப்பழகி அது என்ன..
3- கீழே விழுந்தால் கருப்பு வாயில் போட்டால் சிவப்பு அது என்ன..
4- உச்சியிலே கிரீடம் உடம்பு எல்லாம் கண்கள் அது என்ன..
5- காயில் ஒட்டியவள் பழத்தில் பிரிந்துவிடுவாள் அது என்ன..

( பலாப்பழம், நாவல்பழம், திராட்சைப்பழம், அன்னாசிப்பழம், புளியம்பழம் )

# சிலேடைப் பழமொழிகள்...

1 - குழந்தை அழுவதேன்?..குப்பை தேங்குவது ஏன்?.. - எடுப்பாரற்று..
2 - குடி கெட்டுப் போவதேன்?..பூவை வண்டு நாடுவது ஏன்?... - மதுவால்..
3 - இரத்தம் பெருகுவது எதனாலே?.. ரசம் மணப்பது எதனாலே?.. பெருங்காயத்தால்...
4 - பாழுங்கிணறு இடிவது ஏன்?..பாம்பு ஓடுவது ஏன்?...- அடிப்பாரற்று.
5 - சுவர் வெளுப்பது எதனால்?.. வெற்றிலை சிவப்பது எதனால் - சுண்ணாம்பினால்..

## தபாற்பெட்டிக்கதை...

- 1653ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் முதன்மறையாக தெரு ஓரங்களில் தபாற்பெட்டிகள் நிறுவப்பட்டன.
- 1860ம் ஆண்டு விக்ரோரியா மகாராணியின் கிரீடம் போன்ற தோற்றத்தில் வடிவமைக்கப்பட்டது.
- 1860ம் ஆண்டு பச்சை நிறத்திலிருந்த தபாற்பெட்டிகள் சிவப்பு நிறத்திற்கு மாற்றப்பட்டன.
- 1857ம் ஆண்டில் சுவர்களில் பதிக்கப்பட்டு தபாற்பெட்டிகள் அறிமுகமாயின.

## உலகில் மிகப்பெரியவை...

01- உலகில் உயரமான மிருகம் - ஒட்டகச்சிவிங்கி.
02- உலகின் மிகப்பெரிய விலங்கு - திமிங்கிலம்
03- உலகில் உயரமான மலை - இமயமலை.
04- உலகில் மிகப் பெரிய நகரம் - லண்டன்.
05- உலகின் மிகப்பெரிய பாலைவனம் - சஹாராப்பாலைவனம்.
06- உலகில் பெரிய தீவு - கிறீன்லாந்து.
07- உலகின் மிகப்பெரிய கண்டம் - ஆசியா
08- உலகில் சனத்தொகை கூடிய நாடு - இந்தியா
09- உலகின் நிலப்பரப்பில் பெரிய நாடு - ரஷ்ஷியா
10- உலகின் மிக ஆழமான ஆழி - மரியான் ஆழி.

## பொன்மொழி..

மிகவும் கடினமான வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு அதைத் திறமையாகச் செய்யும் மனிதனுக்கு எல்லாப் பரிசுகளும் தானாகவே வந்து சேரும்..

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 39

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | | | 6 | 5 | | | 7 |
| | | 6 | | | 7 | 4 | 8 | |
| 2 | | 7 | 4 | 9 | | | | 6 |
| | 6 | | | 7 | | 1 | | |
| 3 | | 1 | 5 | | | | 7 | 2 |
| | 9 | | | 4 | 2 | 3 | | 8 |
| 1 | | 8 | 6 | | | | 2 | 9 |
| | 2 | | | 1 | 8 | 6 | 4 | |
| 6 | | | 3 | | | | 1 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 132
## (புரட்டாதி-ஐப்பசி 2023)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 தமிழர்களின் திருநாட்களில் ஒன்று.

09-11 வழிபாட்டிடம் ஒன்று.

வ-இ

08-06 கிழமை என்றும் சொல்லலாம்.

14-13 கண்ணில் ஒரு பகுதி.

கீ-மே

08-04 நம்நாட்டிலும் இது ஒரு பாவனைப் பொருள்.

15-11 ஊட்டச் சத்துள்ளது.

மே-கீ

01-13 பறவை இனங்களில் ஒன்று.

08-16 மணம் என்பதன் ஒத்த சொல்

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## பழமொழிகளின் அர்த்தம்...

1- கடுகு சிறிதானாலும் காரம் பெரிது.
( சிறிதானாலும் அதற்குச் சிறப்பு உண்டு )
2- காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
( ஒவ்வொருவருக்கும் அவரவர் பிள்ளைகளே பெறுமதி மிக்கவர் )
3- குப்பையில் கிடந்தாலும் குன்றுமணி மங்காது.
( ஏழ்மையில் வாடினாலும் உயர்ந்தோர் புகழ் குறைவதில்லை )
4- கழுதை அறியுமா கற்பூர வாசனை.
( உயர்வான விடையங்களை அறிவீனர் புரிந்துகொள்ளமாட்டார்கள் )
5- நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.
(ஒன்றின் அருமையை மற்றொரு சந்தர்ப்பத்திலேயே உணர முடியும் )
6- மின்னுவதெல்லாம் பொன் அல்ல.
( கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல )
7- சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
( அனுபவத்தின் மூலம் ஆபத்துவராமல் தடுக்கலாம் )
8- கிட்டதாயின் வெட்டென மற.
( கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நன்று )

## திரிபுபட்ட பழமொழிகள்...

1. ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம் - பிழை
ஆயிரம் பேருக்குப் போய்ச்சொல்லி ஒரு திருமணத்தை நடத்தலாம் - சரி
2. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே - பிழை
நல்லவை ஆவதும் பெண்ணாலே தீயவை அழிவதும் பெண்ணாலே - சரி
3. களவும் கற்று மற. - பிழை
களவும் கத்தும் மற. - சரி
4. சோழியன் குடுமி சும்மா ஆடுமா - பிழை
சோழியன் குடுமி சும்மாடு ஆடுமா - சரி
5. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் - பிழை
ஆடிக்காற்றில் அம்மையும் பறக்கும் - சரி
6. ஆத்துல போட்டாலும் அளந்து போடணும் - பிழை
அகத்தில் போட்டாலும் அறிந்து போடணும் - சரி
7. வக்கத்தவனுக்குவாத்தியார்வேலைபோக்கத்தவனுக்குப்பொலிஸ்வேலை-பிழை
வாக்குத்தெரிந்தவனுக்கு வாத்தியார்வேலை போக்குத்தெரிந்தவனுக்கு பொலிஸ்வேலை - சரி
8. கல்லக்கண்டால் நாயைக்காணும் நாயைக் கண்டால் கல்லக்காணும் -பிழை
கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம் நாயகனைக் கண்டால் கல்லைக் காணோம் - சரி

# மரம் இல்லாத உலகினிலே...

- கவி மீனா -

வகையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே நீட்டு ஓலை வாசியாக நின்றான் குறிப்பு அறிய மாட்டாதவன் நன் மரம்--

இதன் பொருள் காடுவழியே செழித்து நிக்கும் மரங்கள் அல்ல மரம்ஒரு சபைதனிலே வாசிக்க தெரியாமல் நிக்கின்ற படிப்பு அறிவு இல்லாதவனே மரம் என்று மூதுரையில் ஔவையயார் சொல்லியிருக்கிறார் மரங்களின் சிறப்பு அறிந்து ஒவ்வொரு நாடுகளிலும் மரங்களை நடச்சொல்லி அரசாங்கம் ஒரு பக்கம் சொல்லிவர, இன்னொரு பக்கம் மரங்களை வெட்டி எறிந்து உயர் மாடிகளைக்கட்டி காற்று இல்லாமல் மழை இல்லாமல் காய் பழங்கள் இல்லாமல் பறவைகளுக்கு வாழுமிடம் இல்லாமல் நிழல் இல்லாமல் செய்வோரே அதிகம் பேரு..

நீங்கள் வெட்ட நினைத்தால் இந்த ஔவையார் சொன்ன அறிவில்லாது நட்ட மரம் போலே நிற்கின்ற மனிதர்களை அழியுங்கள் அறியாமை ஆணவம் பொறாமை போன்ற கொடிய குணம் கொண்ட மனிதர்களை அழியுங்கள் மரங்களை வளருங்கள் அன்பு பாசம் மனிதநேயம் உலகமெங்கும் நிலைக்க பாடு படுங்கள். பழங்களை தருகிற மரங்கள் மட்டுமல்ல ஓங்கி வளர்ந்து நிற்கின்ற மரங்களால்தானே மழை பூமிக்கு வரக்காரணமாக இருக்கு அதை விட நிழல் கோடை காலங்களில் ஒரு பெரிய ஆறுதல் மனிதர்களுக்கு மரங்கள் இல்லையேல் வெறும் பாலை வனமாகதானே உலகம் மாறிவிடும் பசுமை இல்லாத உலகத்திலே உயிரினங்கள் எப்படி வாழ்வது? வெய்யில் காலங்களில் மரநிழல் கிடைத்தால் எம்மட்டு ஆனந்தம் இதை உணர்ந்தவன் மரங்களை தறிக்க நினைக்க மாட்டான்..

மரங்கள் இல்லா உலகத்தை நினைத்து பாருங்கள் பச்சை நிறமே கண்ணுக்கு தெரியாத ஒரு உலகத்திலை எப்படித்தான் வாழ்வது? காயில்லை பூவில்லை இலை இல்லை என்றால் உண்ண உணவுதான் இருக்குமா?சிறிய தாவரங்கள் முதல் பெரிய மரங்கள்வரைதான் எமது உணவுக்கு ஆதாரம்ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு பயனையும் பழங்களையும் தருவது மட்டமல்லாமல் சுத்தமான காற்று கிடைக்கவும் உதவுகிறது. வளவுக்குள்ளை இருக்கிற புளியமரத்தை வெட்டி எறிந்து போட்டு கடையிலை தினமும் பழப்புளியை காசு கொடுத்த வாங்குற சனங்கள் ஊரிலை..

இருக்கிற காணிக்குள்ளை மரங்களை நட்டு காய் கறிகளை அறுவடை செய்யாமல் வெளிநாட்டிலை இருந்து காசு வருவதால் எல்லாம் கடையிலை வாங்குற சனமும் ஊரிலை இருக்கத்தானே செய்கிறார்கள் ஆனால் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை அவர்களை போலவே மற்றவர்களும் நினைத்தால் கடையில் காசை கொடுத்த வாங்கக்கூட காய்கள் பழங்கள் இருக்காது என்பதை! மரங்கள் இல்லாமல் பசுமை இல்லாமல் வெறிச்சோடி போன நிலங்களை நினைத்து பாருங்கள்

காய்கள் பழங்கள் இல்லாமல் மனிதர்கள் பசியால் துடிக்கப் போவதை எண்ணி பாருங்கள் போற போக்கிலை எதிர்காலம் இப்படித்தான் மாறப்போகிறதுசிந்தித்து பார்த்து செயல்படுங்கள் மரங்களைத் தறிபதா?.. மரங்களை வளர்ப்பதா என்று?

# கணனியின் பயன்பாட்டுச் சொற்கள்.. (தமிழ் - ஆங்கிலம்)

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட நுட்பவியல் கலைச் சொற்கள்...

1 WhatsApp -புலனம்
2. youtube -வலையொளி
3. Instagram -படவரி
4. WeChat -அளாவி
5.Messanger - பற்றியம்
6.Twtter -கீச்சகம்
7.Telegram - தொலைவரி
8. skype - காயலை
9.Bluetooth - ஊடலை
10.WiFi - அருகலை
11.Hotspot - பகிரலை
12.Broadband - ஆலலை
13.Online - இயங்கலை
14.Offline -முடக்கலை
15.Thumbdrive -விரலி
16.Hard disk -வன்தட்டு
17.GPS -தடங்காட்டி
18.cctv -மறைகாணி
19.OCR -எழுத்துணரி
20 LED -ஒளிர்விமுனை
21.3D -முத்திரட்சி
22.2D -இருதிரட்சி
23.Projector -ஒளிவீச்சி
24.printer -அச்சுப்பொறி
25.scanner -வருடி
26.smart phone திறன்பேசி
27.Simcard செறிவட்டை
28.Charger -மின்னூக்கி
29.Digital -எண்மின்
30.Cyber -மின்வெளி
31.Router -திசைவி
32.Selfie -தம்படம்-சுயஉரு-சுயப்பு
33 Thumbnail சிறுபடம்
34.Meme -போன்மி
35.Print Screen திரைப் பிடிப்பு
36.Inkjet -மைவீச்சு
37.Laser சீரொளி

மாணவமணிகளே ஏனை மாணவ நட்புக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்...
தமிழுணர்வு கொண்டோர் இதை நண்பர்களுக்குப் பகிரலாம்...

.........................................................................................................................................

## தகவல்துளிகள்...

1- சுமார் 34 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் மண்ணில் புதையுண்ட பற்பல மாற்றங்களுக்கு உட்பட்டு நிலக்கரியாக மாறுகின்றது. அதுதான் பின்னாளில் பெறுமதி மிக்க வைரமாக மாறுகின்றது.

2- ஒரு மோட்டார் வாகனத்தில் 30 சதவீதம் எரிபொருள் மட்டும்தான் வண்டி ஓடுவதற்குப் பயன்படுகின்றது. மீதமுள்ள 70 சதவீதம் எரிபொருள் காபன்மோனோ ஆக்சையிட் என்கின்ற ஒரு நச்சு வாயுவாக வெளியேறுகின்றது.


# கணக்குப் புதிர்கள்...

**கணக்கு:-**

| | | | | |
|---|---|---|---|---|
| | 28 | | | 49 |
| | 40 | 27 | 44 | |
| | 47 | | 31 | |
| 42 | | | | 30 |
| 29 | | 33 | | 37 |

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 195 வரவேண்டும் 27 தொடக்கம் 51 வரையிலான எண்களைப் பயன்படுத்தலாம். ஒரு முறை எழுதிய எண்ணை மீண்டும் எழுதக்கூாது..

**படம்:-**




இந்தப் பிரமிட்டில் வரவேண்டிய எண்களைக் கண்டுபிடிக்க வேண்டும்..

**முயற்சிசெய்து பாருங்கள் முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்..**

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## ஒழுங்கு..

தலைமை எறும்பு கூறியது "ஒழுங்காகச் செல்லுங்கள் பரிசு உங்களுக்குக் காத்திருக்கிறது." ஓர் எறும்பு..."என்பாட்டில் நான் போவேன் " என்று வரிசையை உடைத்துக்கொண்டு தனிவழி போனது. கொஞ்ச நேரத்தில் வரிசை குலையாமல் போன எறும்புகள் எல்லாம் வாயில் அரிசியோடு திரும்பி வந்தன. ஒற்றை எறும்பின் முகம் ஒடுங்கியது. நிரை குழப்பாத எறும்புகளில் ஒன்று சொன்னது..

**" வரிசை பிளப்பான் பரிசை இழப்பான் "**

## சூடு..

இரவு நேரம்..புற்றிலிருந்து வெளியே வந்த ஈசல் வெளிச்சத்தைத் தன் உடலில் தூக்கிப் பறந்த மின்மினியைப் பார்த்தது. அதன் அழகைப் புற்றீசலால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. " மின்மினியைப்போல் வெளிச்சத்தைத் தூக்கிப் பறக்க என்னால் முடியும்" என்று கூறிக்கொண்டே குடிசையில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கின் வெளிச்சத்தைத் தூக்கப் போனது புற்றீசல். பாவம்...ஒரு நொடியில் அது எரிந்து கருகிப் போனது. குப்பி விளக்கு சொன்னது...

**" பொறாமை எரிந்து போகும் புற்றீசல் கரிந்து போகும்"**

# குறளும் பொருளும்...

## வினைத்தூய்மை:-

651. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாத் தரும்.

652. என்று மொருவுதல் வேண்டும் புகழோடு
நன்றி பயவா வினை.

653. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

654. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

655. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று.

656. ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

657. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

658. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதா
முடிந்தாலும் பீழை தரும்.

659. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.

660. சலத்தாற் பொருள்செய்தே மார்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

# குறளும் பொருளும்...

## சொல்லும் செயலும் தூயதாதல் :-

651. நல்ல நண்பனால் செல்வம் ஒன்றே கிடைக்கும். செய்யும் செயல் தூய்மையால் எல்லா நன்மைகளும் கிடைக்கும்.

652. புகழையும் நன்மையையும் தராத செயல்களை எக்காலத்திலும் ஒருவன் செய்யாமல் விட்டுவிட வேண்டும்.

653. மேல் நிலைக்குச் செல்லக் கருதுபவர் தமது புகழ் குன்றுவதற்குக் காரணமான செயல்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

654. அசைவற்ற தெளிவான அறிவுடையோர் துன்பத்தில் அகப்பட்டாலும் அதை நீக்க இழிவான செயல்களைச் செய்யார்.

655. யான் செய்தது எத்தகையதென்று பின் தானே இரங்கும் செயலைச் செய்யக்கூடாது. தவறிச் செய்துவிட்டாலும் மீண்டும் செய்யாதிருப்பது நல்லது..

656. வறுமையால் தன் தாய் பசித்துன்பத்தால் வருந்தினாலும் அறிவுடையவர் பழியெனக்கூறிய காரியத்தை ஒருவன் செய்யக் கூடாது..

657. பழியை ஏற்று இழிதொழில் செய்து பெறும் செல்வத்தைவிடச் சான்றோர் தூய்மையோடிருந்து அனுபவிக்கும் வறுமை உயர்ந்தது.

658. கற்றவர் கடிந்து நீக்கிய செயலைப் பொருளாசையால் செய்து முடித்துக் கொண்டாலும் பின் துன்பத்தையே கொடுக்கும்.

659. பிறரை அழச் செய்து பெற்ற செல்வம் பெற்றவன் அழும்படி விட்டு நீங்கும். நல்வழியில் சேர்த்த செல்வம் நீங்கினாலும் பின் வந்துசேரும்.

660. பிறரை வஞ்சித்துச் சேர்க்கப்பட்ட செல்வம் பச்சை மண்பாத்திரத்துள் தண்ணீரைச் சேகரிப்பதற்கு ஒப்பாகும்.

# குறுக்கெழுத்துப்போட்டி-195
## (புரட்டாதி- ஐப்பசி- 2023)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-06 தாய்நாட்டில் இதன் அதிக புழக்கத்தால் வாழ்வு சீரழிகின்றது.
19-21 உரிய காலத்தில் நாம் இதைப் பெறாவிடின் கேடுகள்தான் அதிகம்.
24-26 சின்னத்திரைகளில் இந்தப் பாத்திரம் கட்டாயம் இருக்கும்.
30-33 தமிழர்களின் திருநாட்களில் ஒன்று.
46-48 திசை என்று பொருள்படும்.
வ-இ
12-09 மாதங்களில் ஒன்று.
19-16 கவியில் சிறந்து விளங்குவோரை இப்படியும் அழைப்பார்கள்.
28-26 இலங்கை வடபகுதியில் விமான நிலையம் அமைந்துள்ள இடம்.
41-38 வாரத்தில் ஒரு நாள்.
கீ.மே
21-07 கணவனை இழந்த பெண்களை இப்படியும் அழைப்பார்கள்.
30-09 பறவை இனங்களில் பெரியது.
45-38 மதுபான வகைகளில் ஒன்று.
48-34 மனிதருக்கு எப்போதும் உதவியாக வாழும் மிருகம்.
மே-கீ
01-43 தாயகத்தில் ஒவ்வொருநாளும் இதனால் பலர் உயிரிழக்கிறார்கள்.
13-34 ஊட்டச்சத்துள்ள கீரை வகை இது.
28-49 பல் துலக்குவதற்குப் பயன்படுவது.
37-44 ஊர்வன இது பாம்புக்குப் பரம எதிரி.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# பிள்ளைக் கனியமுதே!..

ஆயிரமாய் கனவுகளும் அன்பு தோய்ந்த உணர்வுகளும்
ஆளாக நீ உருவாகும் அளவில்லாத ஆசையெனும்
போதையில் உருவெடுக்கும் பிள்ளைக் கனியமுது
பேதையிவள் உதிரத்தில் பிரசவிக்கும் சித்திரமாய்
இனிய தாய்மையின் இதயத்தில் சுரக்கும் தாகம்
தனிமை போக்கும் இல்லத்தில் தளிர்விடும் வரமாக
கள்ளமில்லா அன்பும் கருணை பாசமும் கொண்டு
தள்ளாத வயதினில் தாங்கிடுமே பிள்ளையாக
பெற்று வளர்த்தெடுத்து பெருமையாகப் பாலூட்டி
கற்று வல்லமை பெறக் காலத்தில் தமைக்குரைத்த
கண்மணியாய் முத்துகளாய் காதலுடன் பேணிக்காத்து
மண்ணில் தவளவிட்டு மாண்போடு கற்கையிலே
கூடாத சகவாசமும் கூடிவந்த நட்புக்களும்
கேடான பாதையிலே சொற்கேளா மந்தைகளாய்
புத்தியைக் கெடுக்கின்ற போதைக்கு அடிமையாகி
சததியம் தவறி நீ சதா மயக்கத்தில் உழலுவதோ?
பாதகராய் மாறிப் பல பாவங்கள் புரிவதுவோ ?
வேதனை சுமந்து வெந்து நொந்து உழலுவதோ ?
போதனையை வெறுத்து நீ போலிகளை அணைபப்தோ ?
சாதனைகள் படைக்கும் வயதில் சரிந்து நீ மடிவதோ ?
உண்மைநிலை மறந்து உணர்வுகள் மரத்துப்போய்
பெண்மையைச் சிதைப்பதோ? பெற்றவளை வதைப்பதா?
தன்மானம் இழந்து தடம்மாறியே போயின்று நீ
என்ன சுகம் கண்டாய் ? ஏனிந்த அரக்கத்தனமோ ?
குற்றங்கள் புரிவதோ குண நலங்களை இழப்பதுவோ ?
மாற்றமில்லா மனநிலையில் மானத்தை தொலைப்பதோ ?
கொலைகள் செய்வதுவோ கொடும்புணர்வு புரிவதுவோ ?
தலைகவிழ்ந்து மூலைக்குள் தவியாய் தவிப்பதுவோ ?..

**திருமதி கலைவாணி ஏகானந்தராசா - யேர்மனி**

## அன்னைதிரேசா!...

அல்பேனியாவில் மலர்ந்த மனிதம்
அன்பே உருவான கருணை வடிவம்
தாயிலும் மேலான தாய்மை உள்ளம்
தரணியில் தவமாய் வந்த வரம்
அழுத குழந்தையின் குரல்கேட்டு
அன்பு சுரந்தது அவள் மனதில்
சிறகு ஒடிந்த சிலருக்காய்
மனம் ஒடிந்து
உறவிழந்த பலருக்கு உறவானாள்
சாலையோரம் வாடிக்கிடந்த
மனிதர் கண்டு தேடிட யாரும்
இல்லை என்று கண்டு
வாடியது அவள் உளம்
சேத்தாள் தன் இல்லம்
ஏழைகளின் தாயானாள்
எழியோர் துயர் துடைத்தாள்
பாசம் பரிவு என்னும் அன்பானாள்
தொழுநோய்க்கு மருந்திட்டாள்
பசித்தோர்த்கு உணவிட்டாள்
கல்வி தந்து கருணை கொண்டாள்
இறைப் பணிக்கு அர்ப்பணித்தாள்
இதயங்களில் நிறைந்து நின்றாள்
அன்புக்கு குடையானாள்
அடைக்கலம் என்றானாள்
உறவுக்கு விழுதானாள்
உலகிற்கு ஒளியானாள்
வருதுகள் பல வென்றாள்
விடை பெற்றபோதுமவள்
விலகாமல் நிக்கிறாள்
கன்னித் தாயவள் அன்னை திரேசா
வழ்க அவள் புகழ்...

**சந்திரா...டென்மார்க்**

## புன்னகை!..

நெஞ்சம் மகிழும் நினைவின் சிரிப்பு
நேசக் காற்றின் புன்சிரிப்பு!
பஞ்சம் இல்லாப் பாச வலையின்
பள்ளி கொள்ளும் சுகச்சிரிப்பு!
வஞ்ச மகற்றும் வாழ்வே கொழிக்கும்
வண்ணந் தானே மென்சிரிப்பு!
தஞ்சம் நீயே தலைவன் விரும்பும்
தண்மை நல்கும் பெண்சிரிப்பு!

வண்ணச் முகிழ்ப்பின் வரமே செழுமை
வாசம் வீசும் தென்றற்பூ
எண்ணம் முழுக்க எழுத்தாய் ஓடும்
என்றும் இன்பச் சுடர்நீயே
கன்னம் சிவக்கும் கருணை புரியும்
காதல் கமழும் புன்சிரிப்பு
மென்மை தாங்கும் எழிலே புகழே
மேன்மை செழிக்கும் கொடைநீயே

துயர்கள் நீக்கும் தூக்கம் போக்கும்
துணிவே தருமே இவள் சிரிப்பே
அயர்வே யின்றி அகமே மகிழும்
அனைத்தும் மேன்மை கண்டிடுமே
உயர்வே உறுதி உலகே விரும்பும்
உணர்வே ஊட்டும் நன்மதியே
முயற்சி கொண்டே முயலும் எண்ணம்
முழுமை பெறுமே உன்சிரிப்பால்!

**நகுலா சிவநாதன் -யேர்மனி**

# ஊரும் உறவும்!

ஊரினையே நினைத்திட்டால் உணர்வெல்லாம் பொங்கும்
ஓடித்திரிந்த இடமெல்லாம் படமாகி மின்னும்!
வேரினிலே பழம்போலே விருந்தாகி யணைக்கும்
வீடுநோக்கி யோடிவிட உள்ளமதோ துடிக்கும்!
ஆரிடத்திற் சொல்லிடுவேன் அனுதினமு மேக்கம்
அலைபாயு முள்ளமதில் ஆயிரமாம் வண்ணம்!
போரினிலே பட்டபுண்ணின் பொழுதுகளும் முட்டும்
பொத்திவைச்ச மல்லிகையாய் சுகந்தமும் வீசும்!
சோதரராய்க் கூடிவாழ்ந்த சுகமான காலம்
சொந்தமுடன் அறுகாகப் படர்ந்திருந்த இறுக்கம்!
வாதம்வம்பே அறியாத வனப்பான தோப்பில்
வாட்டமின்றிச் சுற்றிவந்த வாழ்வியலின் பாகம்!
ஏதமின்றிச் சிரித்திருந்தோ மெல்லாமே களிப்பாய்
எழிலான சிட்டுக்களாய் ஒருகூட்டில் உறைந்தோம்!
பாதகரின் சூழ்ச்சியினால் படர்கொடிகள் அறுத்தே
பகலிரவு தேடுகிறோம் தாய்வீட்டின் மணத்தை!
எள்ளினையும் பிரித்துண்டோம் ஏழாக்கி நாளும்
எதனிலுமே கண்டதில்லை பிரிவினை பேதம்!
வள்ளலாகித் தந்ததுமே வற்றாத பாசம்
வரைமுறைகள் போட்டதில்லை உறவினிலே அப்போ!
மெள்ளவுமே கரைந்துபோச்சே மேன்மையெல்லா மின்றே
மேலாகிப் போனதிப்போ சொத்துப்பத்து மட்டும்!
வெள்ளந்தியாய்த் தவிக்கிறேனே வேடங்களைக் கண்டே
வேளையெல்லாம் துடிக்கிறேனே உறவுகளைத் தேடி!

**- கீத்தா பரமானந்தன் -யேர்மனி**

.................................................................................................

**பொன்மொழிகள்..**

- நம்பிக்கை செழிப்பைத் தராது ஆனால் எதையும் தாங்கி நிற்கும்..

- ஒரு நிமிடக் கோபம் ஓராயிரம் புகழை அழித்துவிடும்...

## சாதனை!...

சோதனை இல்லாமல் சாதனை இல்லை

போதனை பல கேட்டு வேதனை அடைவர் பலர்

போராடி சாதனை பெறுவோர் பலர்

பற்பல சாதனைகள் பெற்றோர் பலர்

சரித்திரம் படைத்த சாதனையாளர் பலர்

வலிகள் நிறைந்த போதை பாவிப்போர் பிள்ளைகள்

வேதனையில் கண்ணீரில் பெற்றோர்

சோதனையாம் எம் இளையோரின் வாழ்வில்

மன வேதனையாம் உறவுகள்

வரிசையில்

தட்டிப் பார்த்து முட்டிப் பார்த்து

சாதனை படைத்திட முயல்வோம் நாமும்...

**ஜெயா நடேசன்**

**ஜேர்மனி**

## அம்மா அப்பாவுடன்!...

இந்த வளவில் வீடுகட்டி வாழ்ந்தது
நமக்கு வரலாறு. தனது ஒவ்வொரு
திருமணநாளின் போதும் ஒவ்வொரு
மரமாய் நடுவாள்.

வாழை,அரிநெல்லி,ஒட்டுமாங்கன்று,
தோடை,எலுமிச்சை என விரிந்தன.
அம்மாவுக்காக அப்பா தண்ணீர்
ஊற்றுவார்.

நாம் வளர்ந்தபிறகும் அவைபற்றி
அலட்டிக்கொள்ளவில்லை.அம்மாவின்
நோய்கழிவுகளை மரங்களின் அருகிலே-
யே புதைப்பார்..

காலங்கள் வருடங்களை கூட்டி
அள்ளிச் சென்றுகொண்டிருந்தன...
முதியோர் இல்லத்திலிருந்து வந்த
நாளிலிருந்துஅப்பா மரங்களுடனேயே
காதலுடன் பேசுகிறார் என்று மனைவி
சொன்னாள்.

தன்னை இந்த மரங்களுடனேயே
புதைத்துவிடும்படி தன் பேரர்களுக்கு
கதையோடு கதையாக
சொல்லிக்கொண்டிருந்தார்.

கடனில் வீடும்,வளவும் போய்விட
அப்பாவின் உடலைப் புதைப்பதற்கு

ஒரு துண்டு நிலமின்றி

ஏனோ அலைகிறோம்!...

**முல்லை அமுதன் - லண்டன்.**

# வீரத் தியாகி தீபச் சுடர் திலீபன்!...

சைவத் தமிழ் வித்தியாசாலை
வீரத் தமிழ் பண்பாட்டுக்கே
ஊரெழுவில் உதித்த ராசையா
வாத்தியார்
வெள்ளை வேட்டியின் ஒரு மூலைத்
தலைப்பை ஒரு கை பிடிக்க
மறு கையை விசுக்கி ,விசுக்கி
விறுவிறு என நடக்க
அங்குமிங்கும் அசைந்தாடும்
மணிக்கூடும்
அங்கு படித்த மாணவர் கண்ணில்
இன்னும் நிழலாடும் அற்புத இனிய
ஆசிரியரின் பெரும் பாக்கியம்
நாலாவது மகன் பார்த்திபன்
அவன்தான் வீரத் தியாகி திலீபன்
பலசாலியாய்ப் பிறந்தவன்
துரதிஷ்டசாலியாய் பத்தாவது
மாதத்தில் அம்மாவை இழந்து
அன்னை அரவணைப்பின்றி
தாகந் தீர்க்க தாய்ப்பாலன்றி
தாகமுடன் உறவினர் அன்பில்
ஏக்கமுடன் தவழ்ந்து
வளர்ந்தவன் முதலாம் வகுப்பு
பாலருடன் மழலையாய்
உருண்டு பிரண்டு மகிழ்வு கொண்டான்
தந்தைக்குத் தொந்தரவு கொடாது
எம் அருகில் இருந்து ஏறி விழுந்து
சின்னச் சின்னக் குறும்புகள்
செய்து எம்மையும் சிரிக்க வைத்தான்

சாந்தமாய் இருந்தவன் சிந்தனையில்
வளர்ந்து மருத்துவ பீடம் தெரினதும்
தமிழன் சுமந்த கொடுமையைத் தன்
நெஞ்சில் பொறுக்க முடியாது
சுமந்தான்
கடுமையாகப் பாதிக்கவே
குதித்தான் களத்தில்
தன் கனவு இலட்சியமாக்க
தமிழீழ விடுதலைப் புலியின்
அரசியல் பிரிவுப் பொறுப்பாளன்
ஆனான்
பின் நேரடித் தாக்குதலில் குண்டு
பாய்ந்த வயிறு 14 அங்குலம் குடல்
வெட்டப்பட்ட போதும் நிமிர்ந்து
நின்றான்
களத்தில் பத்திரிகையால்
கவர்ந்தான் பலரையும்
5 கோரிககையுடன் நல்லூர்
முன்றலில் ஒரு சொட்டு நீர்
பருகாது 12 நாள் 265 மணித்தியாலம்
தீபச்சுடராய் உருக்கிய குலவிளக்கு

சொட்டு நீரும் விழுங்காத
தாயக தாபம்
காலன் விழுங்கிய தியாக பயணம்
சாப விடிவுக்கு சாட்சிகளாய்
விடியலைத் தேடும் நாளின்
நினைவு நிறைவேறுமா ?

**ராணி சம்பந்தன் -யேர்மனி**

# அகிம்சையின் ஆகுதியே!..


-வசந்தா ஜெகதீசன் -யேர்மனி

அன்னை தேசத்து அண்ணல் காந்தி
அகிம்சை வழியின் போரினவாதி
உண்ணா நோன்பின் உலகப்படிமம்
உயிரீர்ந்து மடிந்த உயிரின் இமயம்

பிரகாச ஒளியின் பிம்பச் சுடரே
எமக்கென ஏற்றிய தியாக தீபம்
மெழுகுவர்த்தியாய் உருகிய கோலம்
கண்ணின் திரையில் கடலெனப் பொங்கும்

மண்ணின் மைந்தா அகிம்சை வேந்தா
ஈரறு தினத்தின் ஈகைச்சுடரே
ஈழவேரின் வேட்கைத் தீயே
ஆகுதியானாய் அன்னை மண்ணில்
அகிம்சைப் போரில் உரிமை பூண்டாய்
அண்ணல் தீலிபன் ஆகுதி மைந்தா

வரைந்தகோலத்தின்வைகறைஒளியே
ஈழமண்ணின் விடியல் வேட்கை
இலக்கில் வென்றிட்ட அகிம்சை வாதி
ஈழத்தின் வேரிலே தீலிபனின் சுவாசம்




இரண்டறக்கலந்திட்டஈகையின் யாகம்
இன்னுயிர் ஈர்ந்த இளவலே நீவிர்
ஈழத்தின் விடியலில்கலங்கரை விளக்கு!
வாழ்கவே..மைந்தா!...

.............................................................................

## கடனாளி !..

ஓடி ஓடி எவ்வளவு கோடி
சேர்த்தாலும் சரி தாயின்
பாசக்கடனையும் தந்தையின்
வளர்த்த பெருங்கடனையும்
அடைக்கமுடியாத கடனாளிகள் நாம்!...

-சிவா-



# பெரியார்!.....

யாரிவர்
திராவிடக்குடிகளின்
அடிகளார்
சமத்துவம்
கற்பித்த வாத்தியார்
சாதியப்பேய்
விரட்டும் சாமியார்
மடமைக்கு மருந்து
சொன்ன சித்தர்
மத மார்க்கத்தை
மழுங்கடிக்க புத்தர் .

வெண்தாடி வேட்டியினில்
கரையும் இல்லை
தான்கொண்ட
கொள்கையிலும்
நடுக்கம்மில்லை
தள்ளாடும் வயதினிலும்
தளர்வு இல்லை
கொள்கை என்னும்
பிரம்பெடுத்து
சாதிப் பாம்படித்தார்
பொய் சாமியாரின்
தோல் உரித்து
செருப்பு தைத்தார் .
நீர் இழிவு
நோய் பிடிக்கும்
வாட்டினாலும்
பேச்சு மேடைகளில்
தூசி தட்ட தயங்கவில்லை.
பகுத்தறிவு சூரியனாய்
ஒளி கொடுத்தார்
வாய் சகட்டலாலே
தமிழை அன்று
கேலி செய்தார் .
புரட்சி என்று
திராவிடத்தின்
பெயராலே தமிழர்
எம்மை உளவு செய்தார்.
தமிழ்த்தாய் அவள்
பாரதிதாசன் வடிவில்
வந்து மீண்டும்
நடவு செய்தாள்.
அவர் கொள்கைகளோ
கோட்பாடோ
புரச்சித்தீதான்.
தமிழை இழிவு என்று
நினைத்ததினால் வீழ்ந்துவிட்டார் .
கடல் தாண்டிப்
போகவில்லை
அவர் பேச்சு
மாற்று மாநிலத்தார்
ஏற்கவில்லை அவர் பேச்சு
தமிழுக்கு
தொண்டுசெய்தால்
தமிழ் சுமக்கும் வள்ளுவன்போல்
காலம் எல்லாம் உனைநினைக்கும்
என்னும் எத்தனைநாள்
அவர் பேச்சு எடுபடுமோ காலமது
கணக்கெடுத்து காட்டும்மாது...

**வே.புவிராஜ் - நோர்வே**

## என் தேசம்!...

- சத்யா பிரான்சிஸ் -மலேசியா

காற்றின் மீது கல்லெறியும்
மூடர்கள் நிறைந்த
தேசம் என் தேசம்..

தன்மானத்தை ஜனநாயகத்தில்
அடமானம் வைத்த மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

சத்திய நீதி விற்று
வயிற்றுப் பசி நீக்கும் மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

அறிவுச் சுரங்கத்தை
மண்மூடி மறைத்த மக்களின்
தேசம் என் தேசம்..

ஊழல் ஆட்சிக்குப் பணிந்து
மது குடிக்கும் மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

குள்ளநரித்தனம்
ஏமாற்று வித்தை கற்ற மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

இறப்பின் நிழலைக்
கல்லறையில் உலர்த்தும் மக்கள்
தேசம் என் தேசம்..

வாழ்வின் நிர்வாணம் மறைக்க
கந்தல் ஆடை அணியும்
மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

புத்துலகப் பகுத்தறிவை
அடகுக்கடை வைத்த மக்களின்
தேசம் என் தேசம்..

தெய்வச் சிலைகளுக்குப்
பஞ்சாமிர்தம் ஊட்டும் மக்கள்நிறை
தேசம் என் தேசம்..

நச்சுப் பண்பாடுகளைப்
பிஞ்சு மனதில் தூவும் மக்களின்
தேசம் என் தேசம்!

................................................................................

## மனிதம் தின்னும் அறிவியல்..

இயற்கை தாய்மடி படுத்து
சலிப்படைந்தவன்
பால் வீதியில் படுத்துறங்க
பறக்கும் பாயைத் தேடுகிறான்..
எட்டு திசைகளையும்
அலசி ஆராய்ந்தவன்
கோளங்களின் திசையை
ஏழாம் அறிவின் தொலைநோக்கிக்
கருவியால் அலசுகிறான்..
பசிப் பட்டினியால் தினம்
லட்சக்கணக்கானோர் மடியும்
அவல நிலைக்கு வழி காணாதவன்
காற்றுக்கு வழியில்லாத நிலாவில்
சொகுசு மாளிகைக் கட்ட
தன் கால்களால் முதுகு சொரியும்
விஞ்ஞானத் திட்டத்தில் முதலீடு..
நிலாவில் தோசை சுடும் பாட்டிக்குச்
சட்னி அரைத்துக் கொடுக்கிறது
மனிதம் தின்னும் அறிவியல்...!

சத்யா பிரான்சிஸ்

# மகாத்மா காந்தி !..

- இரா . சம்பந்தன் - யேர்மனி -

அகிம்சையை உலகிற்கு
அறிமுகம் செய்த
அண்ணல் காந்தியை
அகிலமென்றும் போற்றும் .

அகல்விளக்காய் விழிகள் மிளிர
மூக்குக் கண்ணாடியில்
முகமது ஒளிர
கதராடை யணிந்து
கருணை நடந்து செல்லும்
கைத்தடி யூன்றி .

நிறவெறி கொண்ட வெள்ளையர்
அறவழி மறந்து
ஆபிரிக்க மக்களை வதைக்கையில்
அதற்கெதிராய் போராடியவர் !

இந்த அகிம்சா மூர்த்தியைக்
கையெடுத்து வணங்காத
நாடுகள் இல்லை யென்பேன் !
கையெடுத்து வணங்காதவர்-
மனிதர்களா ? இல்லை யென்பேன் .
அந்தி சாயும் பொழுதினிலும்
அத்தமன மாகாத
ஆதவனாய்த் தோன்றுபவர் !

இருள்கவிந்த பொழுதொன்று !
இந்தியப் பரப்பெங்கும்
எதிரியின் கூடாரம்
எதிரியை முறியடிக்க எழுந்தவர்
கையெடுத்த ஆயுதங்களிலும் ,
காந்தி கையெடுத்த ஆயுதமே
விடுதலையை விரைவாய் வழங்கியது !

பாரிய படையணியும்
பல்வகை ஆயுதமும்
அகிம்சைக்கு முன்னே
வலுவிழந்து போயின !

சுதந்திரம் பெற்றிடப் போராடிய
போராளிகளைச் சுட்டெரித்த
பீரங்கிகளும் துப்பாக்கிகளும்
அகிம்சை என்னுங் கவசத்தை
ஊடுருவ முடியாமல்
நிலைகுலைந்து போயின !

இந்தச் சுடர்மிகு
சூரிய விளக்கு
அணைந்து போனாலும்
அதன் கிரணங்கள்
திசையெங்கும் வியாபகம் .

வன்முறை யென்னும்
கூரிய ஆயுத முனையை
மணங்கமழ் பூவான அகிம்சையால்
மழுங்கடிக்கச் செய்ததால்
மங்காத புகழதனை
மாநிலத்தில் பெற்றார் .

கறுப்புச் சட்டம் போட்ட
வெள்ளையரை வெளியேற்றத்
தேசத்தின் புதல்வரை
ஒன்றாய்த் திரட்டிய
தேசபிதா காந்தி .

தேசத்தின் விடுதலைக்காய்
ஒவ்வொரு விடியலிலும்
குரல்கொடுத்து நின்றவர் !

குரல்கொடுத்த காந்தியின்
நெஞ்சுக்கு நேராய்
துப்பாக்கி நீட்ட
அந்நியன் துணியவில்லை
சொந்த தேசத்திலே
துரோகி ஒருவன் துணிந்தான்!.. .

# மண் இதழிலக்கம் 220க்கான அட்டைப்படக்கவிதை.




ஆதிக்கம் செலுத்தி நின்ற ஆங்கிலேய ஆட்சியர்கள்
அடிமைகளாய் அமர்த்தி அள்ளிகொடுத்த செல்வத்தை
நீதிக்கும் எந்தவிதமான நியாயத்துக்கும் இடமுமின்றி
நிரந்தர குடியுரியற்று நிற்கதியாய் நிற்கும்நிலையோ.?
சாதிக்கும் கரங்களினாலே சத்தியத்தை மீட்பதற்கும்
சந்தர்ப்பம் வழங்கிடாது சதிவலைக்குள் சிக்கவைக்க
போதித்த மனுதர்மத்தை புத்தரின் புத்திரர்களினால்
புதைகின்ற வாழ்வினையெவர் பூத்திடச் செய்வரோ..?

உள்ளத்தின் நம்பிக்கையில் உணர்ந்து நிதமுழைத்து
ஓடாகிப்போய் உயிர்வற்றி உதிர்ந்திடுகின்ற வரலாறாய்
பள்ளத்தில் வாழ்ந்துகொண்டு பணிகளினால் தேசமுயர
பாடுபடும் மக்களின்கூட்டம் படும்பாட்டினை யாரறிவார்.?
கள்ளத்தை விலக்கியவரில் கரிசனத்தைக் காட்டியினி
காலமுருட்டிய இருநூறாண்டைக் கருத்தினி லேற்றியே
வெள்ளமாய் ஓடி உறைந்திடும் விழிநீரைத் துடைத்து
வேதனையை களைந்தவர் விடுவிக்கயார் வருவாரோ..?

விலையில் உலகிலுயர்ந்த விளைபொருளை ஈட்டுகின்ற
வேதனத்தில் ஏற்றமின்றி வேதனைகள் தினமுயர்ந்தாலும்
மலையேறி கொளுந்தெடுத்து மாலையாகி லயன்திரும்பி
மனம்சோராது காத்திருக்கும் மக்களின் பசிபோக்குவரோ.?
உலையிட அரசியுமின்றி ஒருநேரக் கஞ்சியைக்காய்ச்சி
ஒவ்வொருநொடியும் நரகமாகி ஓடிகின்ற வாழ்வுநதியில்
மலையகமினி விடிவைக்காண மனமிரங்கி எவர்வந்து
மறுவாழ்வைச் சமைத்திட மாற்றத்தை நிகழ்த்துவாரோ..?

**-அம்பலவன்புவனேந்திரன்..**



# மாவோ சேதுங் எனுமொரு மாமனிதன்.

மக்கள் சீனத்தைச் செதுக்கிய மாவோ எனும் சிற்பி
மாக்ஷிய சித்தாந்தத்தையே மலர்த்திய பெரும் சக்தி
பக்கசார்பிலா சமத்துவத்தைப் படித்து இறுகப் பற்றி
பாதுகாப்புச் செஞ்சேனையால் பரந்ததேசீனத்து வெற்றி

விவசாய வித்தாய்விளைந்து வியர்வை சிந்தியபொழுது
விளைநிலத்துப் பணியால் வெந்த இளமையும் பழுது
நவசீன ஆட்சியர்களால் நசுக்கப்பட்ட உழவர் அழுது
நண்பர்களாய் இணைத்து நட்டதருவின் பெரும் விழுது

முதலாளித்துவத்துக் கெதிராய் முகிழ்ந்ததே தர்மப்போர்
மூண்டபுரட்சிவித்திலிருந்து முளைத்ததிந்த ஆணிவேர்
உதவாத கொள்கையிதுவென உதறினரே பல்லாயிரம்பேர்
உயர்பீடத்தைப் பீக்கிங்கிலமைத்து உலவியதிந்தத் தேர்

உழுதவர்க்கே நிலம்சொந்தமாய் ஓங்கியதே மக்கள் மீட்சி
உதிர்ந்தது தேசியஆட்சி ஓங்கியதே பொதுவுடமைக் கட்சி
பழுதுகள் களையப்பட்ட பாய்ச்சலுக்கு பாடைகளே காட்சி
பல்வலிமைச் சீனத்திலின்று படிந்ததே மாவோவின் மாட்சி

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# கவிதை என்றால் என்ன ? அதன் விளக்கம் என்ன ?

கவிமாமணி சரஸ்வதி பாஸ்கரன் - தமிழ்நாடு

கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய, ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசை பண்புச் சொற்களால் கோர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம் ஆகும் . மேலும், மொழியில் உள்ள ஒலியன் அழகியல், ஒலிக் குறியீடுகள், மற்றும் சந்தம் ஆகியவற்றுடன் இடம், இயல்பான பொருள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுவதாகக் கவிதை உள்ளது. உணர்ச்சி, கற்பனை, கருத்துக்களை வெளிப்படுத்தவும் தூண்டவும் கவிதை உதவுகின்றது. கவிதை என்பது ஒரு வகை இலக்கியமாகும், இது அதன் பொருள், ஒலி மற்றும் தாளத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட மொழியின் மூலம் வாசகரிடம் உணர்ச்சிபூர்வமான பதிலைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. என் பார்வையில் கவிதை என்பது படிப்போர் மனத்தினில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி சமுதாயத்திற்குத் தேவையான மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும் .

கவிதைகளில் எத்தனை வகை உண்டு ?
கவிதைகளில் பற்பல வகைகள் உண்டு . மரபுக்கவிதை , புதுக்கவிதை , குறுங்கவிதை , ஹைக்கூ கவிதை , தன்முனைக் கவிதை , வசனக்கவிதை , நவீனக்கவிதை என பலவகைப்படும் .

**புதுக்கவிதை - சான்று பாடல்**

இனியது இன்னாது இயல்

இன்பமும் துன்பமும் நிறைந்ததே
வாழ்வு .இன்பத்தைக் கண்டதும்
மகிழும் மனதுதுன்பத்தைக்
கண்டதும்
துவளுதல் வேண்டா .
காயும் கனியும் மரத்தின் தன்மை .

மண்ணில் பிறக்கும் உயிர்கள் யாவும்
மகிழ்ச்சி தன்னை அடைதல் உண்டு
.மண்ணில் புதையும் காலமும் உண்டு
.விண்ணும் மண்ணும் சேர்ந்ததே
வாழ்வு .
விந்தை யேதும் இதனில் இல்லை .
பிறப்பும் இறப்பும் அறிந்ததே வாழ்வு
.பிறப்பில் இன்பம் காணுதல் போலே
இறப்பில் அமைதி காணுதல் நன்றே
கருவறைகல்லறை இரண்டும் உண்டு

மகிழ்ச்சியும்துயரமும் வாழ்வில் ஒன்றென
மனமும் நினைத்தால் துயரம் இல்லை .
துயரம் வாழ்வில் நிரந்தரம் இல்லை .
காலம் மாறக் காட்சியும் மாறும் .

பிணியும் மூப்பும் பிறப்பினில் உண்டு .
அணியும் அணிகலன் அழகு சேர்க்கா .
மூப்பினில் முதுமை முகவரி ஆகும் .
முற்றும் துறந்த முனிவர்க்கும் இதுவே

இளமை என்பது இருக்கும் வரைதான்.
இன்பம் என்பதும் இருக்கும் வரைதான் .
இனிமை என்பதும் இருக்கும் வரைதான்
.இச்சக வாழ்வு நிச்சியம் இல்லை .

இனியது இன்னாது இயல்பின் நியதி .
இனியதை ஏற்போம் இன்னாததைக் கடப்போம் .
வெற்றியும் தோல்வியும் வேறுவேறு இல்லை .
கற்றவர் அறிவர் காரணம் தன்னை .

பிறப்பின் காரணம் பிறர்க்கு உதவுதல்
இறப்பின் காரணம் இம்மைப் பலனே .
மறதியும் மறுப்பும் மண்ணில் இயற்கை .
சிறப்போம் நாமும் சீர்மை வாழ்விலே .



**மரபுக்கவிதை - சான்று பாடல்**

ஆயுதம் தரிப்பதா !! அன்பை அறிவதா !!

**சரஸ்வதி பாஸ்கரன்**
**தமிழ்நாடு**

இச்சகத்தே வாழ்கின்ற மக்களுடைக் கூட்டம்
------- இகல்பெருக்கி வருவதனை நாளும்நாம் காண்போம -
எச்சிலிலைச் சோற்றுக்கே ஏறியுமே பாய்ந்தே
------- எதிர்கூச்சல் போடுகிற நாய்களையும் பார்த்தே
இச்சையினை நிறைவேற்றும் முயற்சியினால் என்றும்
------- இழக்கின்றார் தன்மானம் , தகைமையினை நாளும்
பிச்சையினைப் போக்குதற்குப் பெரிதாக நம்மைப்
------- பிடித்தபடி நழுவாமல் போகின்ற போக்கே .

தன்வயிறு , தன்வாழ்வு , தன்குடும்பம் என்றே
-------- தனக்கென்று நிறைவேற்ற துடிக்கின்ற போக்கில்
வன்செயல்கள் புரிந்திடவும் தயக்கமின்றி என்றும்
-------- வரம்பிழந்துத் தடுமாறித் திரிகின்றார் எங்கும்
அன்பென்ப தெள்ளளவும் காட்டாத வண்ணம்
-------- ஆயுதத்தால் தீநெறியை நோக்கியுமே செல்வார் .
துன்பங்கள் எவர்பெறினும் கருத்தின்றி உண்மைத்
--------தூய்மையிலா வாழ்வுமுறை தோய்ந்திடவே நிற்பார் .

பணநோக்கம் பெரிதாக வாழுகின்ற மாந்தர்
------- பண்புகுணம் இவைபற்றிக் கருதவுமே மாட்டார் .
நிணங்கொத்தித் திரிகின்ற காக்கையினைப் போலே
-------- நிற்காமல் திரிந்திடுவார் நிதியமுமே கூட்ட .
மனமில்லா வாழ்வதனால் மனிதனுமே தேடும்
-------- “மகத்தான “ சிறப்பெதுவோ தெரியவில்லை ஏனோ
கணமேனும் நல்லெண்ணம் இல்லாது வீணர்
-------- காசொன்றே குறியாகக் கொள்வாரே அந்தோ .

இத்தனையும் ஆடியபின் நிகழ்வதுவோ என்ன ?
-------- இவ்வுலகில் நிலையாக இருப்பீரா நீவீர் ?
செத்தொழியும் நாள்தன்னில் சிதைக்குத்தான் போவீர் .
-------- சேர்த்துவைத்த ஆயுதத்தால் என்னவரும் ? சொல்வீர் .
பத்துவிரல் மோதிரமும் பறந்திடுதல் காண்பீர்
------- பார்த்தவர்கள் “சவ“மென்று சொல்லுவரே அந்தோ .
சுத்தமிலா வாழ்வுதனைத் தரித்தீரே நீவீர்.
-------- சுகமெங்கே உமைவந்து நாடிடுமா ? சொல்வீர் .

ஏசுபிரான் எடுத்துரைத்த அன்பான நேயம்
------- எத்தனையோ இடர்களுக்கோர் மருந்தாக மாறும் .
கூசாமல் மாடுகளின் தொழுவமதில் அன்று
------- கூடியதோர் பிறப்பெடுத்தார் என்றதொரு செய்தி
நேசத்தை விலங்கிடத்தும் காட்டுகின்றப் பாங்கை
------- நிலைநாட்ட வந்தசெய்தி ` அறிதலுமே வேண்டும் .
பாசத்தை , நேசத்தை , அன்புதனை பெற்றுப்
------- பக்குவமாய் அனைத்துயிரும் பரிமாறிக் கொள்வோம் .

இசுலாத்தின் அல்லாதான் சொன்னதென்ன ? சொல்வீர் .
------- இவ்வுலகோர் அனைவருமே உடன்பிறந்தோர் “ தானே .
நேசத்தால் ஒன்றுபட்டோர் நினைவிலுமே கொள்க .
-------- நேயமென்றல் இதுதானே ` அன்பொன்றே தானே .
பாசமுடன் உயிர்களிடம் பழகுதலே வேண்டும்
------- பக்குவத்தின் உயிர்நிலையில் அன்பொன்றே நிற்கும் .
வாசமுடன் மலர்கின்ற பூவிடத்தும் என்றும்
------- வகையான அன்பினையே காட்டுதலே வேண்டும் .

வள்ளலாரும் வடிவாக்கி நமக்குந்தான் தந்த
------- வாய்ப்பான சொற்றொடர்தான் “அன்பொன்றே “என்பேன் .
தள்ளரிய இக்கருத்தை வளர்க்கவல்ல என்றும்
------- தரமான சக்திகளே மந்திரங்கள் ஓர்க.
உள்ளுதொறும் இனிக்கின்ற “ மந்திரங்கள் “ உண்மை ,
-------- உயர்வதுவும் வளர்வதுவும் அன்பொன்றால் தானே .
தெள்ளுதமிழ்ச் சொல்லெடுத்து மீண்டும்நான் சொல்வேன் .
-------- தெளிவான்ம நேயத்தை அன்பாலே காண்க .

மந்திரமாய் ஆளுகின்ற அன்பிற்கோர் ஈடும்
------- மண்ணுலகில் எடுத்துரைக்க இல்லையினி ஏடும்

உந்துதலாய் கொடைகுணத்தை வலியுறுத்தும் அன்பை
------- உறவாகக் கொண்டிடுதல் சிறப்பன்றோ உண்மை .
நொந்தமனம் நோய்நொடிக்கும் மருந்தாகும் அன்பே .
------- நொடிப்பொழுதும் மறவாது கைக்கொள்வோம் இன்றே.
வந்தவினைத் தீர்க்கின்ற அருமருந்தாம் அன்பை
-------- வகையுடனே பண்பாகப் பற்றிடுவோம் வாரீர் .

அன்பொன்றே ஆளுகின்ற மந்திரமாய் வேண்டும் .
------- ஆதியாக அந்தமாக அன்பொன்றே வேண்டும் .
துன்பங்கள் நீக்குகின்ற அன்பொன்றே வேண்டும் .
------- தூய்மையான நெஞ்சத்தால் அன்பொன்றே வேண்டும் .
வன்முறைகள் மாற்றுகின்ற அன்பொன்றே வேண்டும்
------- வளமையான வாழ்க்கைக்கே அன்பொன்றே வேண்டும்
பன்மடங்கு காசினியில் அன்பொன்றே வேண்டும் .
------- பரிசுத்த அன்பொன்றே ஆளுதலும் வேண்டும் .

**குறுங்கவிதை - சான்று பாடல்**

சேற்றில் இறங்கிட
செந்நெல் விளைந்திடும் .
சோற்றுப் பஞ்சம்
சோகமும் இல்லை .
காற்றும் மழையும்
கருணை மேகமும்
ஊற்றாய் உதவிட
உழவே தங்கும் .

தன்முனைக் கவிதை

என்னிதயம் துடிக்கின்றது ∴
ஏதிலிகளை எண்ணியெண்ணி ∴
பன்மடங்கு பெருகியுள்ள∴
பாரதத்தின் மக்களினம் ∴

நன்றெனவே வாழ்வதற்கு ∴
நலம்பேண மனிதரில்லை ..∴
மன்றினிலே ஏழையென்றே ∴
மனிதநேயம் காட்டவில்லை . ∴

காண்பீரோ அவலநிலை∴
கண்ணீரும் கவிசொல்லும் ∴
மாண்புடைய மக்களினம் ∴
மங்கியதோ மனிதநேயம் ∴

ஆண்டவனும் தந்திட்ட ∴
அன்பான உயிர்களெல்லாம் ∴
தீண்டுவாரும் ஏதுமில்லை∴
தீர்ப்புகளில் திருத்தமில்லை . ∴

தீர்ப்புகளும் வழங்குகின்ற∴
திறமையான நீதிமன்றம் ∴
பார்ப்பாரோ ஏழையரைப் ∴
பாரினிலே மிகக்கொடுமை ∴

வார்ப்புகளும் கொண்டுள்ள ∴
வகையான உருவங்கள் ∴
தேர்கொண்டு போகிறதோ ∴
தேடுகின்றார் மனிதத்தை . ∴

தேடுகின்றேன் எதிர்காலம்
தேகமுமே வாடிடவும்
பாடுகின்றேன் மௌனராகம்
பலர்நோக்கப் பார்க்கின்றேன்

ஓடுகின்றேன் இவ்வுலகில்
ஓய்ந்திடவும் மனமில்லை
வாடுகின்றேன் வாசமிலா
வாழ்வாலே இவ்வுலகில்

வாழ்வினிலே சுகமில்லை
வருத்தமுடன் சொல்லுகின்றேன்
ஏழ்மையாகப் பிறந்ததுவே
என்குற்றம் என்பதுபோல்

கீழ்நோக்கிப் பார்க்கின்றார்
கீழ்சாதி என்கின்றார்
பாழ்பட்ட ஏதிலிகள்
பாருங்கள் மானிடரே !

**ஹைக்கூ கவிதை ஶ்ரீ சான்று பாடல்**

கிணற்று நீர்
அதிகரித்துக்கொண்டே செல்கிறது
ஐப்பசி மாதம்

**தமிழன்புடன்**
**கவிமாமணி . சரஸ்வதி பாஸ்கரன்**
**தமிழ்நாடு**

# இதுதான வாழ்க்கை!..

வந்தது தனியே போவதும் தனியே
எல்லாம் கொஞ்சக் காலமே
அன்னை வயிற்றில் கொஞ்சக் காலம்
அன்னை மடியிலும் கொஞ்சக் காலம்
தாய் தந்தை உறவு கூட கொஞ்சக் காலம்...

பள்ளி பருவம் கொஞ்ச காலம்
பாவாடை தாவணியில்
கொஞ்ச காலம்
காதல் வந்து கொஞ்ச காலம்
சில காலம் போக காதல்
கை காட்டி போகும்
காமமும் கொஞ்சக் காலம்
முதுமை எட்டிப் பார்க்கையில்
கைகால் நடுக்கம் பிடிக்க
காமமும் பின்னாலே ஓடி போகும்...

வாழ்க்கையும் கொஞ்சக் காலம்
அதில் வந்து போகும் உறவுகளும்
நிலைத்து நிற்பது கொஞ்சக் காலம்
பிள்ளைகள் உறவுகளும்
சிலகாலம் மட்டுமே...

பிள்ளைகளும் துணையைத் தேடி
பறந்து போகுமே
உறவென்று நினைப்பதெல்லாம்
உறவாடி போகும்

இளமை காலம் ஓடி போகும்
இனிய நினைவுகள் ஓடி போகும்
தனிமையும் முதுமையும்
தள்ளாடும் போது
நிலைப்பது எது என எண்ணத் தோணும்
இத்தனை காலம் சொல்லாமல் போனது
என்னைக் கேட்காமலே ஓடிப் போனது
மிச்சக் காலம் கொஞ்சக் காலம்
அதுவும் கட கட என ஓடிப் போகும்
இதுதான வாழ்க்கை!

**-கவி மீனா - யேர்மனி-**

# புதிய தலைமுறையில்.....

(கலைவாணி.ஏகானந்தராஜா)

## தாலி, கூறை சென்டிமென்றை உடைக்கும் புதிய தலைமுறை...

தாய் நாட்டிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வந்த தமிழர் அண்ணளவாக 40 ஆண்டுகள் வாழ்ந்துவிட்ட நிலையில், அடுத்த தலைமுறை உருவாகிக்கொண்டு வருகிறது. எண்பதுகளில் புலம்பெயர்ந்து யேர்மனி வந்தவர்களின் பிள்ளைகள் இன்று திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்கிறார்கள். இவர்களில் ஒருசிலர் நாம் நாட்டிலிருந்து வரும்போது மூட்டையாக கட்டி சுமந்துவந்த மூட நம்பிக்கைகள்,வேறுபாடுகள், கலாச்சாரம் என்ற போர்வையில் பின்பற்றும் சில தேவையற்ற சடங்குகளை எல்லாம் இன்னமும் பின்பற்றி வருகிறார்கள். முன்னைய தலைமுறையினர் திருமணத்தின் போது கட்டிய தாலியை கணவர் இறக்கும் வரை கழட்டமாட்டார்கள். கணவர் இறப்பின்போது தாலி கழட்டும் நிகழ்வு ஒரு ஒத்திகை பார்க்கப்படாத நாடகம் போல நடைபெறும்.

திருமணத்தின்போது பெண் அணியும் விலையுயர்ந்த கூறைச் சேலையை பெண்ணின் இறப்பின்போது பெண்ணுக்கு உடுத்தி எரித்துவிடுவார்கள். இன்றைய தலைமுறையினர் தாலி, கூறை என்பவற்றை பெற்றோரின் விருப்பத்தின் பெயரில் வாங்கி, திருமணத்தின் பின்னர் இவற்றை பயன்படுத்துவதே இல்லை. அவர்களுக்கு தாலி, கூறை மீது மேலீடான உணச்சிகள் (sentiment) எதுவும் இல்லை. இவை ஏன் வீணாக அலுமாரிகளில் தேவையில்லாமல் இருக்கவேண்டும்? இவற்றை யாருக்காவது பயன்படுத்துவது மனிதாபிமானம் அல்லவா? என்று நினைக்கிறார்கள்.

உண்மை சம்பவம் ஒன்றை தருகிறேன்.

யேர்மனியில் திருமணம் செய்த ஒரு பெண்ணுக்கு 11 பவுணில் தாலிக்கொடி, 1.200 யூரோவுக்கு கூரைச்சேலை, மாலை வரவேற்பு நிகழ்ச்சிக்காக 1.500 யூரோவுக்கு வெள்ளை சட்டை(Bride frock) வாங்கி கொடுத்து சிறப்பாக திருமணம் நிறைவேறியது. சில வருடங்களில் இருவரிடையே மணமுறிவு ஏற்பட்டு வேறு திருமணம் செய்து கொண்டனர். பெண் தனது தாலியை விற்று ஒரு வறிய குடுப்பத்தில் நடைபெற்ற திருமணத்திற்கு தாலி வாங்கிக்கொடுத்து உதவினார்.


கூறைச்சேலையை தாயகத்தில் வறிய சிறார்களுக்கு பாவாடை சட்டை தைத்துக் கொடுத்தார். 1.500 யூரோ பெறுமதியான வெள்ளைச் சட்டைக்கு என்ன நடந்தது தெரியுமா?யேர்மனியில் இறந்து பிறந்த குழந்தைகளுக்கும், பிறந்து சில மாதங்களில் இறந்த குழந்தைகளுக்குமான சிறிய சட்டைகளையும், அடக்கம் செய்வதற்கான சிறிய பெட்டிகளையும் இனாமாக தயாரித்து வழங்கினார்கள். (Nähen för sternenkinder)விலை கொடுத்து வாங்கும் இந்த ஆடைகளை சிலர் ஞாபகமாக வைத்திருப்பதாக சென்டிமென்ட் பேசி அலுமாரிகளில் ஆண்டுகள் பலவாக தொங்கவிட்டிருப்பார்கள். இந்தப்பெண் தனது (Brautkleid) திருமணப்பெண்ணுக்கான ஆடையை சுத்தம் செய்து (Brautkleidspender für Sternenkinder ) ( English - Star Children ) நட்சத்திரமான குழந்தைகளுக்கு சட்டை தைப்பதற்கு இனாமாக வழங்கினார்.

எம்மவர்களின் மட்டமான உணர்வுகளின் முன் இந்தப் பெண்ணின் மேலுயர்வான உணர்வு என் மனதை தொட்டது. " நாம் இறந்த பின் எதையும் கொண்டு செல்வதில்லையே" மட்டமான மன உணர்வுகளைத் தூக்கி எறிந்துவிட்டு இனிமேலாவது மனிதநேயத்துடன் வாழ்வோமாக.!..

**கணக்குப் புதிர் விடைகள்..**



| | | | | |
|---|---|---|---|---|
| 41 | 28 | 45 | 32 | 49 |
| 48 | 40 | 27 | 44 | 36 |
| 35 | 47 | 39 | 31 | 43 |
| 42 | 34 | 51 | 38 | 30 |
| 29 | 46 | 33 | 50 | 37 |






## தென்னிந்தியாவின் பணக்கார நடிகர் யார் தெரியுமா?.. ரஜினி, விஜய் இல்லை...

தென்னிந்திய நடிகர்களில் அதிக சொத்து யார் வைத்திருக்கிறார்கள் என்று ஒரு பட்டியல் வெளியாகியிருக்கிறது.தென்னிந்திய திரைத்துறையில் முன்னணி நடிகர்களாக இருக்கும் ரஜினி, கமல், விஜய், அஜித், சிரஞ்சீவி, மோகன்லால், மம்மூட்டி போன்றோர் பல கோடிகளில் சம்பளம் பெற்று சொத்து சேர்த்து வைத்திருக்கிறார்களாம்.

**டாப்பில் இருக்கும் நடிகர்..**

ஆனால் இவர்களை எல்லாம் விட நடிகர் நாகர்ஜுனா அதிக சொத்துகளை வைத்திருக்கிறார். அவரின் சொத்து மதிப்பானது கிட்டத்தட்ட 3000 கோடிக்கு இருக்குமாம்.

மேலும், அவர் ஒரு படத்திற்கு மாத்திரம் 9 கோடியிலிருந்து 20 கோடி வரைக்கும் சம்பளம் வாங்குகிறாராம். விளம்பரங்களில் நடிப்பதற்கு தனியாக 2 கோடி வாங்குகிறார். இது தவிர இன்னும் ஏனைய பல வழிகளில் சம்பாதிக்கிறார்கள்.

சம்பள விபரம்

1. நடிகர் நாகர்ஜுனா - சொத்துமதிப்பு 3000 கோடி
2. நடிகர் வெங்கடேஷ் - சொத்துமதிப்பு 2200 கோடி
3. நடிகர் சிரஞ்சீவி - சொத்து மதிப்பு 1650 கோடி
4. நடிகர் ராம்சரண் - சொத்துமதிப்பு 1370 கோடி
5. ஜுனியர் என்.டி.ஆர் - சொத்து மதிப்பு 450 கோடி
6. நடிகர் விஜய் - சொத்து மதிப்பு 445 கோடி
7. நடிகர் ரஜினிகாந்த் - சொத்து மதிப்பு 430 கோடி
8. நடிகர் கமல்ஹாசன் - சொத்துமதிப்பு 388 கோடி
9. நடிகர் மோகன்லால் - சொத்து மதிப்பு 376 கோடி

ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளதாகக் வட இந்திய சேனலான ஜும் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

## நடிகர் கமல்ஹாசன்...

பிக்பாஸ் 7வது சீசனிற்காக நடிகர் கமல்ஹாசனுக்கு ரூ. 100 கோடிக்கு மேல் சம்பளமா?- மொத்தமாக இத்தனை கோடியா?

பிக்பாஸ்

விஜய் தொலைக்காட்சி ஏன் தமிழ் சின்னத்திரையில் படு பிரம்மாண்ட சில வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி தான் பிக்பாஸ்.

முதல் சீசன் என்ன என்று ஐடியா இல்லாமல் இருந்த மக்கள் இப்போது நிகழ்ச்சி குறித்து நன்றாக புரிந்துகொண்டுள்ளனர்.

ஆரம்ப நிகழ்ச்சிக்கு கிடைத்த வரவேற்பால் பிக்பாஸ் குழுவினர் அடுத்தடுத்து 6 சீசன்கள் வரை ஒளிபரப்பிவிட்டார்கள், இடையில் பிக்பாஸ் அல்டிமேட் என்ற நிகழ்ச்சியும் ஒளிபரப்பானது, அதற்கு நடிகர் சிம்பு தான் தொகுப்பாளராக இருந்தார்

**கமல்ஹாசன் சம்பளம்...**

தற்போது 7வது சீசன் விரைவில் தொடங்க இருக்கிறது, அதற்கான பேச்சுகளும் சமூக வலைதளங்களில் எழுந்துவிட்டது. போட்டியாளர்கள் இவர்கள் தான் என நிறைய லிஸ்ட் வலம் வருகிறது.

தற்போது இந்த 7வது சீசனை தொகுத்து வழங்க நடிகர் கமல்ஹாசனுக்கு ரூ. 130 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கியது மறக்கமுடியாத கவலைதான் பாருங்கோ. இப்ப மீண்டும் வேற வடிவில் கொரோனா உலாவுவதாக உலகம் எல்லாம் பேசப்படுகிறது. எல்லாரும் கொஞ்சம் கவனமாக இருங்கோ..

கவலை. . உங்களில் எத்தனைபேருக்கு இந்தக்கவலை வந்ததோ யான் அறியேன் பலருக்கு கவலை வராது ஏனென்றால் இந்த அழிவு எங்கட நாட்டில பெரிதளவு வரவில்லைத்தானே?.. .

நம்மட நாட்டில அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சிமன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ. அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இதுகிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைகிழப்பி அரசைக் கலைக்கலாம் என கங்கணம் கட்டினாலும் ஒன்றுமே முடியாது தாம் நினைத்தபடிதான் நடக்கும் என அரசதரப்பு தெரிவித்தவண்ணமே உள்ளது. இப்படியாக ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் அழகான நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதுாக்கி ஆடும்வரை ஒருவரும் ஒன்றுமே செய்யமுடியாது. புத்தர் உயிருடன் மீண்டு வந்தாலும் அதே கதிதான் பாருங்கோ..

சரி..சரி..அது அப்படிப் போக நம்மட பிரச்சனைகளும் கொரோனாவைப்போல பல..பல வடிவங்களில் இந்த மயிலனின் காதில் விழுந்தவண்ணமே உள்ளன பாருங்கோ. தாயகத்தின் பின்தங்கியகுடும்பம். எழைக்குடும்பங்களில்தான் அதிக பிள்ளைகள் என்று கூறுவார்கள் உண்மைதான். கடவுளை சாட்டுக்கு இழுத்து அன்பளிப்பு என்றும் கூறிக்கொள்வது வழக்கம்தானே. இந்தக் குடும்பத்தில் முதலாவதாக வெளிநாடு வெளிக்கிட்டவர்தான் ஒருவர். 1983ம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற இனப்படுகொலையோடு தாயின்ற தாலிக்கொடியை விற்று, கிடந்த காணியை அடகுவைத்து அங்க இங்க மாறி ஒருவாறு யோர்மனிக்கு அகதியாக வந்தவர்தான். இவரின் கதையை நீங்களும் கொஞ்சம் படியுங்கோ...

தம்பி யேர்மனிக்கு வந்து பனி, குளிர்க் கொடுமை, நல்ல உணவு, தூக்கமில்லை, மொழியும் தெரியாது அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டு பெட்டிச் சாப்பாடு. அதுவும் நேரம் தவறினால் சாப்பாடும் இல்லை பட்டினியோட தேநீர் குடித்து வயிற்றுப் பசியாறிய சம்பவங்கள் பல நாட்கள் ஓடி..வருடமும் ஒன்றாகியது. சிற்றியும் மாற்றி விட்டார்கள்.

புதிய இடம், புதிய மக்கள், புதிய மொழி, புதிய உணவு, புதிய கலாச்சாரம் எல்லாம் அனுபவமாகிவிட்டன. சும்மா வீட்டுக்க கிடப்பதைவிட பல நாட்களாக வீதிகளில் காலாற நடந்து திரிய ஒரு இத்தாலி றெஸ்ரோரண்ட் கண்ணில் பட அங்கு நுழைந்து சும்மா ஒருக்கா வேலை ("ஆர்பைட்" (Arbeit) என்று கேட்க முதலாளியும் சிரித்துவிட்டு ஒரு குறைந்த கூலிக்கார வெளிநாட்டவன் கிடைத்துவிட்டான் என எண்ணி உனக்கு என்ன வேலை தெரியும் என்று கேட்க தம்பி கூலி வேலை தெரியும் என்று கூற முதலாளி நாளைக்கு வா உனக்கு இங்க வேலை என்று சொல்லி அனுப்பி விட்டான்..

அடுத்தநாள் வேலை தொடங்கியது..தம்பி புதிசுதானே முறிந்து விழுந்தடித்து எல்லா வேலைகளையும் விரைவாகவும் ஒழுங்காகவும் செய்ய முதலாளிக்கு நன்றாகவே அவனைப் பிடித்துவிட வேலை தொடர்ந்தது. களவாக வேலை, சோசல்காசும் கிடைக்க தம்பியின் வாழ்வு மலர்ச்சி பெற்றது. வேலை தொடர்ந்தது. காசும் கொட்டியது. குறிப்பிட்ட 5 வருடத்திற்குள் தனது தம்பிமார் 3பேரையும் தங்கைகள் இருவரையும் யேர்மனிக்கு அழைத்து தங்கைமாரை சுவீசிலும் யேர்மனியலும் திருமணமும் செய்து வைத்துவிட்டான் தம்பிமாரும் சிறிது காலம் உழைத்து தமக்கு ஏற்ற மனைவிமாரையும் ஊரிலிருந்து அழைக்க இவனது பணமே பெரிய உதவி செய்தது.

குடும்பத்தில் மூத்தவனாகப் பிறந்தால் பெரும் சுமை என்று சொல்வது உண்மைதான். இவன் தனது சகோதரங்களையும் கூப்பிட்டதோடு ஊரிலும் நல்ல வீடு ஒன்றைக் கட்டி தாய் தந்தையை நல்லபடி கவனித்துவந்தான். ஆனால் வெளிநாட்டுக்கு வந்த சகோதரங்களோ பெற்ற தாய் தந்தைக்கு ஒரு சதம்கூட அனுப்பாமல் இங்கு சொகுசு வாழ்வு.

தங்களைக்கூட்பிட்டு வாழ வழிவகுத்த தமது மூத்த சகோதரனுக்கு ஒரு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற சிந்தனை அறவே இவர்களுக்குக் கிடையாது அவர்கள் வெறும் சுய வாழ்வுதான் பாருங்கோ...ஊரில் வாழ்ந்த தாயும் தந்தையும் திருமணம் பார்த்து ஒரு ஏழைப் பெண்ணை இவனுக்குத் திருமணத்திற்காக அனுப்பி வைத்தார்கள்.

காலம் ஓடிடவே அவனுக்கும் 3 பிள்ளைகள்..அண்ணனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணிய ஏனைய ஐந்து சகோதரங்களும் அண்ணனின் தொடர்பைத் துண்டித்துக் கொண்டனர். அண்ணனிடம் காரும் இல்லை. மன உறுதியும் உடற்பலமும் இருந்தபடியால் மேலும் ஓடி..ஓடி உழைத்தான். பிள்ளைகளும் வளர.. வளர செலவுகள் அதிகரித்தன.கார் விபத்து ஒன்றில் அகப்பட்டு உயிர் தப்பினாலும் வேலை செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டான். அப்போது கூட தனதுசகோதரர்கள் எட்டிப்பார்க்கவில்லை. அந்தளவுக்குச் சுயநலமும் பண வெறியும் அவர்களிடம் காணப்பட்டன பாருங்கோ..

இவன் கவலைப்படவில்லை. தனது பிள்ளைகள் மூவரையும் நல்ல பாடசாலைகளில் சேர்த்து

கல்விபெறவைத்து மூவரையும் பட்டதாரி ஆக்கிவிட்டான். நல்ல தொழில் பெற்று இன்று நல்லபடியாக அவன் வாழ்வு மலர்ந்தது. ஆனால் இவனின் சகோதரங்களின் பிள்ளைகள் ஒருவர்கூட பட்டதாரியாக முடியாமல் போனது அவனுக்குச் செய்த துரோகம் என்று பலரும் பேசிக்கொண்டனர்.

பசி பட்டினியுடனும், தொழிலில்லாமலும், நாட்டின் நிலைமையில் சிக்குண்டு போகாமல் உயிர்ப்பிச்சை கொடுத்து வெளிநாட்டுக்குக் கூப்பிட்டு வாழ வைத்த அந்த மனித தெய்வத்துக்குச் சகோதரங்கள் செய்த துரோகம் யாரால்தான் பொறுக்க முடீயும் மறக்கவும் முடியும்.

சகோதரங்களோடும் அவர்களின் பிள்ளைகளோடும் தொடர்பில்லாமல் சில காலம் வாழ்வு ஓடியது. வருடாவருடம் பிள்ளைகளோடு தாயகம் சென்று தாய் தந்தையரையும் கவனித்து வந்ததுடன் ஊரிலும் பல சமூக நலத்தொண்டுகளைச் செய்து வந்தான். அப்போதெல்லாம் எண்ணினான். தனது சகோதரங்களை வெளிநாட்டுக்குக் கூப்பிடாமல் ஊரில் கஸ்டப்பட்ட குடும்பப் பிள்ளைகளைக் கூப்பிட்டிருந்தால் அவர்களாவது பிறருக்கு உதவியாக இருந்திருப்பார்கள் என எண்ணியதும் உண்டு பாருங்கோ...

இப்படி எத்தனைபேர் இந்த வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். காசு, பணம், பொருள், கார், வீடு என இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்கிறார்கள். கூடிப்பிறந்த சகோதரர்களுடன்கூட ஒற்றுமையாக வாழ முடிவதில்லை. விட்டுக்கொடுப்பு இல்லை. மரியாதை இல்லை எல்லாரும் பணத்துக்கு அடிமையாய்ப் போனார்கள் என்றுதான் இந்த மயிலன் சொல்வான். வாழ்க்கைக்குப் பணம் தேவைதான் அதற்காக உடன்பிறப்புகள், உறவுகள் நண்பர்களை இழந்து வாழமுடியுமா?.. எத்தனை நாட்களுக்கு இப்படி வாழ்வது. வெறுமையாக வந்தோம் வெறுமையுடன்தான் போவோம் என்பதை பிரிந்துகொள்கிறார்களில்லை இந்த மனிதப் பிறவிகள் பாருங்கோவன்.

புலம் பெயர் நாடுகளில் இப்படி எத்தனை அவலங்களோடு தமிழர் வாழ்வு ஆனால் நம் பிறந்த தேசத்திலும் இவைகளைவிட இன்னும் மோசம். காணி, வீடு பறிப்பதும், பணத்தால் ஏமாற்றப்படுவதும், ஆடம்பர வாழ்க்கையும், போதாக்குறைக்கு போதைபொருள், களவு, திருட்டு, கொள்ளை, பாலியல் துஸ்பிரயோகம் என அடுக்கிக்கொண்டே போகலாம். நண்பன் ஒருவன் சொன்னான் இந்த மயிலனுக்கு ”எதிரி எங்கும் இல்லை எனது வீட்டில்தான் எதிரி இருக்கிறான்...இருக்கிறாள்” இதுதான் உண்மையும் நிஜமும் ஆகும்.

ஆகவே இது மயிலனின் அறிவுரை அல்ல..அனுபவங்கள்தான். நீங்கள் இன்னும் எத்தனை ஆண்டுகள் வாழப்போகிறீர்கள். இப்பூமியில் வருவதும் போவதும் நிட்சயிக்கப்பட்ட உண்மை. அதற்கிடையில் வாழும் சொற்ப காலத்திலாவது எல்லோரிடமும் அன்பாக, ஆதரவாக, பிறர்ருக்கு உதவும் நோக்கோடு வாழுங்கள். அன்பைத்தவிர பிறருக்குக் கொடுக்கும் உன்னத சக்தி இந்த உலகில் வேறு ஒன்றும் கிடையாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என இந்த மயிலன் கூறி.. அடுத்து ஒரு விடையத்தோடு மீண்டும் இந்த மயிலன் வருவான்..அப்ப வாறன்..எல்லோரும் நல்லபடி வாழ்ந்தால் இந்த மயிலனுக்குப் பெரும் சந்தோசம்!...சந்தோசம்!...

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| தீ | பா | வ | ளி |
| க் | ம் | ர | வா |
| கோ | யி | ல் | ச |
| ழி | வி | பா | னை |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| போ | தை | ப் | பொ | ரு | ள் | வை |
| க் | ழி | க | ர் | மா | வ | த |
| கு | கோ | க் | வி | க | ல் | வி |
| வ | க் | வி | ல் | லி | லா | ப |
| ர | தீ | பா | வ | ளி | ரை | ற் |
| த் | கீ | ள் | க | ங் | தி | பொ |
| து | ரி | க | தி | க் | கு | டி |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 3 | 8 | 6 | 5 | 2 | 9 | 7 |
| 9 | 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 | 5 | 4 |
| 3 | 4 | 1 | 5 | 8 | 6 | 9 | 7 | 2 |
| 7 | 9 | 5 | 1 | 4 | 2 | 3 | 6 | 8 |
| 1 | 3 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 7 | 1 | 8 | 6 | 4 | 3 |
| 6 | 7 | 4 | 3 | 2 | 9 | 8 | 1 | 5 |

# சாதனைகள் பலவிதம்!...

(1) 3வது தமிழ்ச் சிறுமி பவுஷ்ணாவின் உலகசாதனை..



நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டகலைப் பிரதேசத்தில் வசிக்கும் செந்தில்குமார் - ரேவதி தம்பதிகளின் புதல்வியான பவிஷ்ணா தனது 3 வயதில் உலக நாடுகளின் 40 தலைவர்களின் புகைப்படங்களைப் பார்த்து அவர்களின் பெயர்களை ஒரு நிமிடத்தில் மிக வேகமாகக்கூறி உலகசாதனைப் புத்தகத்தில் (Internatinal book of World record ) தனது பெயரைப் பதிவுசெய்து சேர்த்துள்ளார்.

உலக சாதனைப் புத்தக நிறுவனமானது இச்சிறுமியின் திறமையையும் அதீத நினைவாற்ற லையும் பரிசீலனை செய்து உலக சாதனைப் புத்தகத்தில் பதிவுசெய்து சாதனைச் சிறுமியாக தமது இணை யத்தில் வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். வாழ்த்துவோம் சிறுமியையும் பெற்றோரையும்!...

(2) சர்வதேச திருமதிகள் போட்டியில் இலங்கைப்பெண் வெற்றி..



( Mrs Earth International ) 2023 சர்வதேச திருமதிகள் அழகு ராணிப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த சிங்களப் பெண் வெற்றிபெற்றார். 45 நாடுகளின் அழகிய திருமதிகள் போட்டியானது கடந்த 17.07.23 தொடக்கம் 22.7.2023 வரை பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்றது.

45 நாடுகளைச் சேர்ந்த 60 போட்டியாளர்கள் கலந்துகொண்ட இப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 21 வயதான திருமதி சஸ்மி திசநாயக்கா என்ற இலங்கைப் பெண்மணி ”மிஸ் ஏர்த” பட்டத்தையும் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டார். இலங்கைப் பெண்மணி வெற்றி பெற்றது மகிழ்வு..வாழ்த்துக்கள்!..

(3) தாடியால் சாதனை படைத்த இலங்கைத் தமிழர்




ஆண்களுக்கு இயற்கையாகக் காணப்படும் மீசை, தாடி இவைகளாலும் சாதனை படைக்க முடியுமா?..என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழலாம். அதை நிரூபித்துச் சாதனை படைத்திருக்கிறார் இலங்கைத் தமிழர். சாவகச்சேரி - மட்டுவிலைச் சேர்ந்த 59 வயதுடைய திருச்செல்வம் என்பவர் கடந்த 09.07.2023 அன்று இச்சாதனையைப் படைத்திருக்கிறார்.

1.550 கிலோ எடையுடைய ஊர்தி வண்டியை 400 மீட்டர் தூரத்துக்கு தனது தாடியால் கட்டி இழுத்து சாதனை படைத்திருக்கிறார். 7நிமிடம் 48 செக்கனில் இச்சாதனையைப் படைத்திருப்பது தமிழர்களுக்குப் பெருமைதான். மேற்படி நிகழ்வு ""சோழன்"" உலகசாதனைப் புத்தக நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று உலகசாதனைப் புத்தகத்தில் பதிவுக்குள்ளானது சிறப்பு. சாதனைத் தமிழனை வாழ்த்துவோம்.

(4) சாதனைப் பெண்மணியாக உயர்ந்த அமெரிக்கப் பெண்...



அமெரிக்க கடற்படையில் மிக உயர்ந்ததாகவும் பெருமைக் குரியதாகவும் கருதப்படும் கப்பற்படை நடவடிக்கைகளின் தலைவர் ( Chief of Noval Operations ) பதவிக்கு இதுவரை அமெரிக்க வரலாற்றில் இல்லாத ஒரு நிகழ்வாக லிஸ ா பிரான்செடி என்னும் பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதன் மூலம் அமெரிக்க கூட்டுப்படைத் தலைவர்களில் ( Joint Chiefs of Staffs ) இடம்பெறும் முதல் பெண்மணி. தற்போது அமெரிக்க கடற்படையில் துணைத்தலைவராகப் பணியாற்றும் லிஸா தனது பணிக்காலத்தில் பெருமை வாய்ந்த 4 நட்சத்திர விருதுகளையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். வளர்ந்துவரும் உலகில் பெண்களாலும் எப்படிப்பட்ட பதவிகளையும் பொறுப்பேற்று திறமையாகச் செய்யமுடியும் என்பது நிரூபணமாகின்றது. வாழ்த்துக்கள்!..

# முருங்கை கீரையின் மருத்துவ குணங்கள்!..



- முருங்கை மரத்தை பொறுத்த வரை முருங்கைக்காய், முருங்கைப் பூ, முருங்கைக்கீரை இவை அற்புதமான மருந்துப் பொருளாகும். இதில் விட்டமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன.
- முருங்கைக்கீரையோடு, பூண்டு, மஞ்சள், உப்பு, மிளகு சேர்த்து அரைத்து உண்டால் நாய்க்கடி குணமாகும். முருங்கைக்கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும்.
- வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மலசிக்கல் நீங்கும். முருங்கை இலையை எடுத்துவிட்டு காம்புகளை நறுக்கி மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும்.
- முருங்கை இலைகளில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றது.
- முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டியாகும். முடி நீண்டு வளரும். நரை முடி குறையும். தோல் வியாதிகள் நீங்கும்.
- முருங்கைக்கீரை மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.
- வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்கீரையை உணவாக உபயோகித்தால் ரத்தமும், சிறுநீரும் சுத்தம் அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது.
- முருங்கைக்கீரை சூப் மூட்டு வலியையும் போக்க வல்லது. கர்ப்பப்பையின் குறைகளை போக்கி கருத்தரிப்பதை ஊக்குவித்து பிரசவத்தை துரிதப்படுத்தும்.
- முருங்கை இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும்.



# எடையைக் குறைக்க உதவும் புளி

நமது பாரம்பரிய சமையலில் “புளி“ முக்கிய பங்கு வகிக்கிறது. அறுசுவைகளில் முக்கியமானது புளிப்பு சுவை. அன்றாட உணவில் புளியை சேர்த்துக்கொண்டால் ஜீரண சக்தி அதிகரிக்கும் என்பதால் ரசம் இல்லாத விருந்தை நமது கலாசாரத்தில் பார்ப்பது அரிது. புளி உடல் எடையை குறைத்து, சீராக பராமரிக்க உதவும் என்பது நம்மில் பலர் அறிந்திராத அறிவியல் பூர்வ உண்மை.

புளியில் நார்ச்சத்து அதிகமாகவும், கொழுப்புச்சத்து குறைவாகவும் இருக்கும். இது உடல் எடையை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. தினமும் புளியை உணவில் சேர்த்துக்கொள்வதால், வயிற்று உபாதைகள் சீராகி வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது.

உடல் எடையை புளி எவ்வாறு குறைக்கிறது என்பதற்கான சில அறிவியல் காரணங்கள்:

புளியில் இருக்கும் “ஹைட்ராக்ஸிசிட்ரிக் அமிலம்“, கொழுப்பை எரித்து சக்தியாக மாற்றி பசியை அடக்குகிறது. கொழுப்பை உருவாக்கும் “சிட்ரேட் லைஸ்“ என்ற நொதியின் உற்பத்தியை தடுக்கிறது.இதிலுள்ள பிளேவனாய்டு மற்றும் பாலிபினால், உடல் செயல்பாடுகளைத் தூண்டி அதிக எடையை குறைக்க உதவுகிறது. நார்ச்சத்து பசியை குறைத்து, ஆரோக்கியமற்ற உணவுகள் மீதான ஈர்ப்பைக் குறைக்கிறது. தேவையற்ற கழிவுகளை அவ்வப்போது உடலில் இருந்து வெளியேற்றி, ஆரோக்கியத்தை அதிகரிக்கிறது. பிளேவனாய்டு கெட்டக் கொழுப்பைக் குறைத்து, நல்ல கொழுப்பின் அளவை அதிகரிக்க உதவுகிறது. புளியை உணவில் சேர்த்துக்கொள்வது, உடல் எடையைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், இன்சுலின் அளவைக் குறைத்து இரத்த சர்க்கரையை கட்டுப்படுத்தவும், செரிமான செயல்முறையை அதிகரிக்கவும், வயிற்றுப் புண்களை ஆற்றவும், கொழுப்பைக் கரைக்கவும், இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தி ஆற்றலை அதிகரிக்கவும், உடலில் உள்ள நச்சுகளை நீக்கவும், எலும்புகளை வலுப்படுத்தவும், தூக்கத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

புளியில் உள்ள வைட்டமின் சி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இதன் ஆண்டிசெப்டிக் பண்புகள் தொற்று நோயை குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது. புளி வகைகளில் கலப்பு இனத்தை சேர்க்காமல், நாட்டு வகை புளியை சேர்த்துக்கொள்வதன் மூலம் சிறப்பாக எடையை குறைத்து பலன்களை பெறலாம்.






## நீரிழிவு நோயாளிகள் கிரீன் டீ குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பார்க்கலாம்.

கிரீன் டீ முற்றிலும் ஆரோக்கியமான பானமாகும். நீரிழிவு நோயின் அறிகுறிகளை நிர்வகிப்பதில் அவற்றின் செயல்திறனுக்காக அறிவியலால் கூட ஆதரிக்கப்படுகிறது. டைப் 2 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிரீன் டீயின் தாக்கத்தைப் புரிந்துகொள்ள பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலோர் நேர்மறையான முடிவைக் காட்டியதை அறிந்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கிரீன் டீ, நீரிழிவு நோயை உருவாக்கும் அபாயத்தைக் குறைக்கும் மற்றும் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தவும் உதவும் என்பதற்கு இது சாட்சியாக உள்ளது.

இரத்த குளுக்கோஸ் அளவை எவ்வாறு கட்டுப்படுத்துகிறது? கிரீன் டீ தவறாமல் உட்கொள்வது உண்ணாவிரத குளுக்கோஸ் அளவையும் உண்ணாவிரதம் இன்சுலின் அளவையும் குறைக்கிறது. அவை நீரிழிவு ஆரோக்கியத்தை அளவிட பயன்படும் இரண்டு அடிப்படை அளவுருக்கள்.கிரீன் டீயின் நன்மைகள் முக்கியமாக பாலிபினால்கள் மற்றும் பாலிசாக்கரைடுகளின் ஆக்ஸிஜனேற்ற செயல்பாடு காரணமாகும்.இந்த இரண்டு ஆக்ஸிஜனேற்றங்களும் இரத்த அழுத்த அளவை நிர்வகிப்பதிலும், உடலில் உள்ள கெட்ட கொழுப்பின் அளவைக் குறைப்பதிலும் பயனுள்ளதாக இருக்கும்.

க்ரீன் டீயினால் கிடைக்கும் பிரபலமான நன்மைகளுள் ஒன்று தான் எடை குறைய உதவும் என்பது. இது உங்கள் வளர்ச்சிதை மாற்றத்தை தூண்டி, எடை இழப்புக்கு உதவுகிறது. இதில் உள்ள பாலீ:.பீனால் என்னும் சத்து தான் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது. மேலும் மற்ற டீக்களை விட க்ரீன் டீயில் தான் ஏராளமான கேட்டசின்கள் உள்ளன.

நீரிழிவு நோயாளி ஒரு நாளில் நீங்கள் எவ்வளவு கிரீன் டீ சாப்பிடலாம் கிரீன் டீ ஆரோக்கியமானது மற்றும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு எந்தவிதமான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது என்று ஆய்வு கூறுகிறது. ஆனால் உங்கள் உட்கொள்ளல் குறித்து நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அதில் ஒரு சிறிய அளவு கா:.பின் உள்ளது. நீங்கள் ஒரு நாளைக்கு 2-3 முறை கிரீன் டீ அருந்தலாம்..




# உணவே மருந்து!..

வெந்தயக்கீரை, வெந்தயம் இரண்டுமே அதிகப்படியான நற்பலன்கள்கொண்டவை..வீட்டில் சிறிய தொட்டியில்கூட இந்தக் கீரையை வளர்க்கலாம்.நோய் தீர்க்கும் மூலிகையாகவும் உணவாகவும் சிறப்பாகச் செயல்படக்கூடியது.தற்போது, சர்வதேச அளவில் வெந்தயக் கீரை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது தாவரவியல் வல்லுநர்களால் மிகப் பழமையான மருத்துவ தாவரங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது வெந்தயக் கீரை.

வெந்தயக் கீரை நோய் தடுப்பு மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கிறது. ஆயுர்வேதத்திலும் பாரம்பரிய சீன மருத்துவத்திலும் இது குறித்த மேற்கோள்கள் உள்ளன. வெந்தயக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவந்தால், மலம் இளகும். வெயில் காலத்தில் பலருக்கும் உடல் சூடு ஏற்படும். உஷ்ணத்தை தணித்து, உடலை குளிர்ச்சியடையச் செய்யும்.வயிற்றுப் பிரச்சனைகள், உப்புசம், மந்தத்தன்மை, வாயுத்தொல்லை, இருமல், சுவையின்மை பிரச்னைகளைச் சரிசெய்யும். தயமின்கள், ஃபோலிக் அமிலம், ரிபோஃப்ளேவின், நியாசின், வைட்டமின் ஏ, பி6, கே மற்றும் சி போன்ற வைட்டமின்கள், செம்பு, பொட்டாசியம், கால்சியம், இரும்பு, செலினியம், துத்தநாகம், மாங்கனீஸ் போன்ற பல தாதுப்பொருட்கள் நிறைந்த அமுதமாக வெந்தயக்கீரை இருக்கிறது.

வெந்தயக்கீரையில் உள்ள பல்வேறு பைட்டோ நியூட்ரியன்டுகள் அதன் ஆரோக்கிய நன்மைகளுக்கு அடிப்படைக் காரணம். ஸ்டீராய்டுகள், அல்கலாய்டுகள், சபோனின், பாலிபினால்கள், ப்ளேவனாய்டுகள் போன்ற பைட்டோகெமிக்கல்கள் வெந்தயக் கீரையில் அதிகளவில் உள்ளன. உடல் உறுப்புகளில் ஏற்படும் உள்வீக்கம், வெளிவீக்கத்தைப் போக்கும். வெந்தயக்கீரையை அரைத்துக் வீக்கத்தின் மீது தடவினால், விரைந்து குணமாகும்.

தீப்புண்கள் மீது வைத்துக்கட்ட, காயம் ஆறும்.வெந்தயக்கீரையை வேகவைத்துத் தேன் விட்டுக் கலந்து, அளவாகச் சாப்பிட்டுவந்தால், மலம் எளிதாக வெளியேறும் நெஞ்சு வலி, இருமல், மூலம் மற்றும் செரிமானப் பாதையில் இருக்கும் புண்கள் குணமாகும். வெந்தயக்கீரையுடன் அத்திபழத்தைச் சேர்த்து அரைத்து, கட்டிகளின் மீது பற்றுப் போட, கட்டிகள் விரைவில் பழுத்து உடையும். படை மீது பூசினால், விரைவில் சரியாகும்.இந்தக் கீரையுடன், பாதாம் பருப்பு, கசகசா, கோதுமை நெய், பசு நெய், பால், சர்க்கரை சேர்த்து, களிபோல கிண்டி சாப்பிட்டுவந்தால், உடல் வலுவடையும். இடுப்பு வலி நீங்கும் வைட்டமின்கள், கால்சியம், இரும்புச்சத்து நிறைந்தது.

சர்க்கரை நோயாளிகள் இந்தக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிடுவது நல்லது. நீண்ட நேரம் அமர்ந்திருந்து வேலை செய்ய முடியாமல் இடுப்பு வலிப்பவர்கள் வெந்தயக் கீரையுடன் நாட்டுக்கோழி முட்டை, தேங்காய்ப்பால் சேர்த்து நெய்யில் வேக வைத்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டு வர, இடுப்பு வலி நீங்கும்.இப்படி பல்வேறு இயற்கை மருத்துவ நோய் நிவாரணியாக வெந்தயக் கீரை தொழிற்படுகிறது.

# தாயகச்செய்திகள் சில...

01.07.23- நாட்டின் பொருளாதார, சமூக நெருக்கடியால் மாணவர்கள் பாடசாலையைவிட்டு விலகி கூலித்தொழிலாளர்களாக மாறிவரும் அவல நிலை தோன்றியிருப்பதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.
05.07.23- மாணவர்கள் நகரப்புறம் நோக்கி நகர்வதாலும் பிறப்புவீதம் குறைவடைவதாலும் வடமாகாணத்தில் 194 பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதாக வடமாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.
08.07.23- 01.01.2022 - 31.05.2023 வரை 16 மாதங்களில் பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் 70 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். சகல பல்கலைக் கழகங்களையும் சேர்த்து 600 பேர் வெளியேறியுள்ளனர்.
10.07.23- சென்ற ஆண்டில் 3.11.000 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றிருக்கிறார்கள்.
15.11.23- வருடந்தோறும் 900 சிறுவர்கள் புற்றுநோயாலும் 100 சிறுவர்கள் நீரழிவுநோயாலும் பாதிக்கப்படுகிறார்கள் என சுகாதார அமைச்சு தெரிவிப்பு.
2021ம் ஆண்டில் 15.599 பேரும் 2022ம் ஆண்டில் 37.649 பேரும் புற்றுநோயால் பாதிப்பு என சுகாதார அமைச்சு அறிவிப்பு.
19.07.23- யாழ் பல்கலைக் கழகத்தின் 37வது ஆண்டு பட்டமளிப்பு 19, 20, 21 திகதிகளில் நடைபெற்றது. 2.278 மாணவர்கள் பட்டம் பெற்றனர்.
22.07.23- கடந்த வருடத்தில் 463 யானைகள் உயிரிழந்துள்ளன. இந்த வருடம் 14.07.23வரை 94 மனிதரும் 238 யானைகளும் பலியாகியுள்ளன.
23.07.23- 2020, 2021, 2022 ஆண்டுகளில் விபத்துக்களால்7.142பேர் பலி. 67.687 வீதி விபத்துக்கள் இடம்பெற்றன. உலகியே தலைநகரங்களில் அதிகமாக வீதி விபத்துக்கள் இடம்பெறும் 4வது நகரமாக கொழும்பு விளங்குகின்றது.
24.07.23- போதைப்பொருள் குற்றச்சாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் 1.50.000 மேற்பட்டோர் கைது 20.015 சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டதாக பொலிசார் அறிவிப்பு.
01.08.23- இவ்வருடம் 31.07.2023வரை 56.000பேர் டெங்கு நோயால் பாதிப்பு 37 பேர் இறப்பு சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு.
02.08.23- கடந்த 7 மாதங்களில் 7.5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்குள் வந்துள்ளனர் என சுற்றுலாத்துறையினர் அறிவிப்பு.
04.08.23- கிளிநொச்சி - பளைப் பிரதேசத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 2.000 பனைமரங்கள் எரிந்து நாசம்.
05.08.23- இலங்கயில் கள்ளக்காதல்கள் அதிகரிப்பு. திருமணத்திற்குப் பிறம்பான உறவுகளால் 2021ல் 1.05.469 முறைப்பாடுகளும் 2022ல் 1.11.709 முறைப்பாடுகளும் கிடைத்ததாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.
06.08.23- 2010ம் ஆண்டுமுதல் இற்றைவரை வடகிழக்கில் 83 இடங்களில் விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாக சிறீதரன் எம் பி தெரிவித்துள்ளார்.
07.08.23- வடகிழக்கு உட்பட 12 மாவட்டங்களில் கடும் வறட்சியால் 52.000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2.5 லட்சம் பேர்வரை பாதிப்பு.
07.08.23- இலங்கையின் பிரபல தமிழ்த்தினசரியான வீரகேசரி 93வது வருட நிறைவைக் கொண்டாடியது

09.08.23- நாடுமுழுவதும் சுமார் 40.000 போலி வைத்தியர்கள் உள்ளனர் என அரச வைத்தியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.
15.08.23- பல்வேறு குற்றச்சாட்டுகளில் கைதுசெய்யப்பட்ட 56 மதகுருமார் ( 48 பேர் பிக்குகள்) தற்போது சிறைகளில் உள்ளனர் என அரசு அறிவித்துள்ளது.
18.08.23- கடந்த ஓராண்டில் சுமார் 1.100 வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியெறியிருப்பதாக அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது. மருத்துவத்துறை செயலிழக்கும் நிலை தோன்றியுள்ளது.
20.08.23- மலையக மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு 200 வருடங்கள் நிறைவுகண்டுள்ளது. இத்தினத்தையொட்டி 28.யூலை தலைமன்னாரில் ஆரம்பிக்கப்பட்டு 18 ஆகஸ்ட்மாதம் மாத்தளையில் நிறைவுகண்டது பேரணி.
25.08.23- நாட்டில் தற்போது 2.9 மில்லியன் சிறுவர்களுக்கு அத்தியாவசிய தேவைகள் அதிகமாகக் காணப்படுவதாக இலங்கைக்கான ஐ.நா.சபையின் சிறுவர் அமைப்பு தெரிவித்துள்ளது.
28.08.23- இலங்கையில் நாள்தோறும் 9பேர் தற்கொலை செய்கிறார்கள். கடந்த ஆண்டு 9.700 பேர் தற்கொலை. கூடுதலாக 83வீதம்பேர் ஆண்களாவர். கடந்த வருடத்தைவிட 3.404 பேர் கூடுதல். கல்வியில் தோல்வி, மனஅழுத்தம்,, வேலையின்மை, வறுமை, குடும்பப்பிரச்சனை, காதல்விவகாரம், பொருளாதார நெருக்கடி போன்ற பலகாரணங்கள் காணப்படுவதாக பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வு குறிப்பிட்டுள்ளது.
31.08.23- இவ்வருடம் 8 மாதங்களில் 1427 வாகன விபத்துக்கள் இடம்பெற்றதாகவும் 1.500 பேர்வரை இறந்ததாகவும் பொலிசார் தெரித்துள்ளனர்.

## உலகச்செய்திகள் சில...

01.07.23- உலகம் முழுவதும் ஒவ்வொருநாளும் சராசரியாக 16 லட்சம்பேர் ”உண்டபின் நஞ்சாக மாறும்” உணவினால் பாதிப்பு. 5 வயதிற்குட்பட்ட வர்கள் தினமும் 340 பிள்ளைகள் இறப்பதாகவும் உலக சுகாதார தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.
05.07.23- உலகில் தற்போது 160 மில்லியன் சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக ஐ.நா. அறிவித்துள்ளது.
10.07.23- 1703 - 2023 வரை 320 ஆண்டுகள் வெளிவந்த உலகின் பழமைவாய்ந்த ஒஸ்திரியா நாட்டுப் பத்திரிகையான யோமன் மொழிப்பத்திரிகை ”வீனர் சைற்றுங்” (Wiener Zeitung) தனது வெளியீட்டை நிறுத்தியுள்ளது.
20.07.23- 2019 - 2021 கால 3ஆண்டுகளில் இந்தியாவில் 10 லட்சம்பேர் காணாமல் போயுள்ளனர். 18 வயதுக்குக்கீழ் 4லட்சம் பெண்கள் என இந்திய தேசிய ஆவணக்காப்பகம் தெரிவித்துள்ளது.
02.08.23- யேர்மனி பிறீமகாவன் என்ற இடத்திலிருந்து எகிப்துக்குப்புறப்பட்ட சரக்குக் கப்பலில் தீ விபத்து .3.783 புதியகார்கள் எரிந்து சேதம்.
06.08.23- பாக்கிஸ்தான் முன்னாள் பிரதர் இம்ரான்கானுக்கு ஊழல் குற்றச்சாட்டு காரணமாக 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
07.8.23- அமெரிக்காவில் இந்த வருடம் கடும் வெப்பத்தால் 150 பேர்வரை பலி. ஹவாய் தீவில் எற்பட்ட தீ விபத்தில் 100 பேர்வரை பலி. பலர் காணாமல் போயுள்ளனர்.

08.08.23-அரசியல் நெருக்கடி, வெள்ளம், பஞ்சம் காரணமாக ஆப்கானிஸ்தானில் 3 கோடி மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா.அகதிகள் சபை குறிப்பிட்டுள்ளது.
09.08.23- யப்பானின் சனத்தொகை வீழ்ச்சி கண்டுள்ளது. 12 கோடியாக இருந்த தொகையில் 8 லட்சம்பேர் குறைவடைந்துள்ளதாம்.
10.08.23- பிரிட்டனில் பொருளாதாரம் உலகில் 6வது இடத்தில் இருந்த போதிலும் 7 பேரில் ஒருவர் உணவு வேண்டுவதற்குப் போதிய பணம் இல்லாமல் தவித்து வருவதாக தொண்டு நிறுவனம் ஒன்றின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
11.08.23- இந்தியா சீக்கிம் அமிர்தசரஸ் கோவிலில் தினமும் 1 லட்சம்பேருக்கு உணவு வழங்கப்படுகின்றதாம். இந்த நகரம் பட்டினி இல்லாத நகரமாம். இந்த நகரத்தின் சனத்தொகை 20 லட்சம் பேராகும்.
14.08.23- மெக்ஸிக்கோவில் போதைப்பொருள் கும்பல் ஒன்று 300 சடலங்களை அமிலத்தில் கரைத்த சம்பவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
20.08.23- உலக மக்கள் தொகை 2037ம் ஆண்டளவில் 900 கோடியை எட்டும் எனவும் 2057ம் ஆண்டில் 1.000 கோடியை எட்டும் என ஐ.நா. சபையின் புள்ளி விபரம் அறிவித்துள்ளது.
09.09.23- ஜி-20 நாடுகளின் தலைவர்கள் உச்சி மகாநாடு செப்டெம்பர் 9, 10 திகதிகளில் இந்தியாவில் நடைபெற்றது.
10.09.23- சூடானில் இராணுவம் - துணைப்படையினர் கடந்த 6 மாதங்களாக நீடித்த யுத்தத்தால் 3.000 பேர் பலி. 6.000 பேர் படுகாயம். 48 லட்சம்பேர் அகதிகளாகியுள்ளனர்.
11.09.23- உலகில் மது அருந்துவோர் தொகையில் பெலாரஸ்நாடுதான் முதலாவதாகத் திகழ்கின்றது. ஒருவர் ஒருவருடத்தில் சராசரியாக17.5 லீட்டர் மதுவை அருந்துகிறார். அடுத்த இடத்தில் ரஷ்ஷியா, லத்வியா, லிதுவேனியா, அயர்லாந்து, மோல்டோவா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன.
12.09.23- வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் 6.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம். 3.000 பேர்வரை இறப்பு.2.500 பேர்வரை காயம், 1.500 பேர் கவலைக்கிடம், 8.00.000 பேர்வரை பாதிப்பு. அவசரமா 75 மில்லியன் டொலர் நிதி உதவி அவசர தேவை என அறிவிக்கப்பட்டுள்ளது.
13.09.23- லிபயா நாட்டில் கடும் மழைவெள்ளம் புயல் 20.000 பேர்வரை பலி. 10.000 பேர்வரை காணாமல் போயுள்ளனர். 7.000 பேர்வரை காயம், 25 லட்சம்பேர் இடம்பெயர்வு.
15.09.23- உலகின் காலநிலை மாற்றத்தால் 45 மில்லியன் மக்கள் பசி, பட்டினியை எதிர்கொண்டுள்ளனர். 920 மில்லியன் குழந்தைகள், சிறுவர்கள் குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிப்பு உலகசுற்றாடல் அமைப்பு தெரிவிப்பு.
18.09.23- தமிழகத்தில்வாழும் இலங்கைத் தமிழர்களுக்காக 1.591 வீடுகள் கட்டப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.. இதற்கு சுமார் 80 கோடி இந்திய ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
20.09.23- தற்பொது யப்பானின் சனத்தொகை 125 மில்லியனாகும். இதில் 29 வீதமானோர் 65 வயதிற்கு மேற்பட்டவர்களாவர்.பத்துப்பேருக்கு ஒருவர் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாழ்கிறார்களாம். உலகில் அதிகவயதானோர் வாழும் நாடுகள் வரிசையில் யப்பான் முதலிடம் வகிக்கின்றது. அவர்களின் உணவுப்பழக்கம், கடும் உழைப்பு, சுற்றடால் சூழல்களே காரணமாகும்.





# ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம்...

**- ஜெயா நடேசன் ஜேர்மனி -**

ஐக்கிய நாடுகள்அமைப்பு அல்லது அதிகார பூர்வமாக ஐக்கிய நாடுகள் United Nations U(N) என்பது உலக அமைப்பு மற்றும் பாதுகாப்பினைப் பேணுதல் நாடுகளுக்குடையே நட்புறவு உறவுகளை வளர்த்தல்,பன்னாட்டு ஒத்துழைப்பைப் பேணுதல் நாடுகளின் நடவடிக்கைகளை ஒத்துழைக்கும் மையமாக இருத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட அரசுகளுக்கிடையேயான ஓர் அமைப்பாகும்

ஐக்கிய நாடுகள் சபை உலகிலுள்ள பல நாடுகளை உறுப்பினராக கொண்ட ஒரு பன்னாட்டு அமைப்பாகும்.முதலாம் உலகப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டுக் கழகமான தேசங்களின் அணி என்னும் அமைப்பானது உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்டாத காரணத்தினால் இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டது. கி.பி 1939-1945 வரை இடம் பெற்ற இரண்டாம் உலகப்போர் முடிவில் ஏற்பட்ட அழிவானது முதலாம் உலகப் போரை விட அதிகமாகும்.அதாவது ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் தங்கள் உயிரினை இழந்தனர்.

எனவே அமெரிக்கா,சோவியத் ரஷ்யா,இங்கிலாந்து ஆகிய நாடுகள் உலகத்தில் உடனடியாக நிரந்தரமான அமைதி ஏற்படுத்த ஒரு புதிய அமைப்பு தேவை என உணர்ந்தன. அதன் விளைவாக ஐக்கிய நாடுகள் சபை உருவானது. உலகில் 195 க்கும் மேற்பட்ட நாடுகள் உள்ளன. பல்ஸ்தீனம்,வத்திக்கான் ஆகிய இரு நாடுகள் உலக நாடுகளால் அங்கீகரிக்காமல் இருக்கிறது.193 வது உறுப்பு நாடாக தெற்கு சூடான் சேர்ந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையாக நியுயோர்க் நகரத்தில் அமைந்துள்ளது. ஐக்கிய நாட்டின் சாசனம் 26.06.1945 அன்று 50 நாடுகளின் பிரதிநிதிகள் கையெழுத்திடப்பட்டது. ஐ.நா சபையின் செயலாளர் நாயகமாக அன்டோனியோ குட்டரெஸ் பதவியில் இருக்கிறார். 17 டிசம்பரில் ஐ.நாடு தினமாகக் கொண்டாடுகிறார்கள்..

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 27



### பெயர் திருமதி விக்னேஸ்வரி பாக்கியநாதன்

| | | |
|---|---|---|
| பெயர் | - | திருமதி விக்னேஸ்வரி பாக்கியநாதன் (விக்னா) |
| பிறப்பு | - | வேலணை கிழக்கு, 09.12.1953 |
| தந்தை தாய் | - | திரு திருமதி விஸ்வலிங்கம் நல்லம்மா |
| கல்வி | - | ஆரம்பக்கல்வி - வேலணை அம்பிகை மகளீர் வித்தியாலயம் |
| உயர்கல்வி | - | வேலணை மத்திய மகா வித்தியாலயம் (தற்போதைய மத்திய கல்லூரி ) |
| பட்டப்படிப்பு | - | யாழ் பல்கலைக்கழகம் ( 1975 - 1978 ) |
| தொழில் | - | ஆசிரியர் -வேலணை மத்திய மகாவித்தியாலயம். (19791981) |
| புலம் பெயர்வு | - | 1981 |
| வசிப்பிடம் | - | டோர்முண்ட் |
| துணைவர் | - | திரு சுப்பிரமணியம் பாக்கியநாதன் B.A (கலைவிளக்கு பத்திரிகை ஆசிரியர் ) |
| எழுத்துத்துறை | - | கட்டுரை, இலக்கியம், தமிழ்பாட நூல்கள் |

**இவரது படைப்பிலக்கியங்கள்**

| | | |
|---|---|---|
| சிந்திக்கத் தூண்டிய யேர்மனிய கலாச்சாரம் (கட்டுரைகள்) | - | 1984 |
| குறளின் நிழல்கள் ( நவீன குறள் வடிவம் ) | - | 1996 |
| குறுகிய காலத்தில் தமிழை எப்படிக் கற்பிக்கலாம் (கட்டுரைகள் ) | - | 1997 |
| சிறுவர்களுக்கான சிறு நாடகங்கள் (நாடகங்கள் ) | - | 1997 |
| உறவுக்குப் போராட்டம் (சிறுகதைகள் ) | - | 1997 |
| இன்றை சமுதாயத்தில் பெண்களின் நிலை (கட்டுரைகள் ) | - | 2000 |
| இதயச்சிறை (சிறுகதைத்தொகுப்பு ) | - | 2000 |
| பணம் பந்தியிலே (கட்டுரைகள் ) | - | 2000 |
| ”ஆரோக்கிய வழிகாட்டி” துணையாசிரியை (மருத்துவம் ) | - | 2003 |
| கலைவிளக்கு துணையாசிரியை | - | 1986 |

**கவிதை நூல்கள்**

| | | |
|---|---|---|
| ஆதங்கம் ( புதுக்கவிதைத் தொகுப்பு ) | - | 1990 |
| தூரத்து விடியல் ( புதுக்கவிதைகள்) | - | 2000 |
| கவிதைச்சோலை ( மரபுக்கவிதைகள் ) | - | 2000 |
| எண்ணத்தில் பூத்த வண்ணங்கள் ( மரபுக்கவிதைகள் ) | - | 2003 |
| கடுகு வயல் ( ஹைக்கூ கவிதைகள் ) | - | 2003 |
| அம்மா என் கைக்கூ (ஹைக்கூ கவிதைகள் ) | - | 2007 |
| கலைவிளக்கு (உலக கவிஞர்களின் கவிதைகளை தாங்கிய கவிதை தொகுப்பு வெளியீடு ) | - | 2004 |

**பாடநூல்கள்**

| | | |
|---|---|---|
| பாலர்பாடல் ( பாடல்கள் ) | - | 1989 |
| இலக்கணம் கற்போம் | - | 1992 |
| தமிழ் ஆண்டு 3 செயல்நூல (சிறுவர் பயிற்சி நூல் ) | - | 1994 |
| மாணவர் கட்டுரைகள் (பாட நூல்) | - | 1995 |
| சிறுவர் களஞ்சியம் | - | 1998 |
| அடிப்படை இலக்கணம் | - | 2009 |

-ஈழத்தில் வாழும் காலத்திலே அங்கு வெளியான புதிய உலகம், சிரித்திரன், வீரசேகரி போன்றவற்றில் தன் எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வந்தவர்.
-1969ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக கொழும்பு விவேகானந்த சபையால் நடாத்தப்படும் ஆறுமுக நாவலர் கட்டுரைப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர்.
-யாழ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் தமிழ்மன்ற கவியரங்குகளில் பங்குபற்றியிருந்தமையும் இவரின் திறமையை எடுத்துக்காட்டுகின்றது.- 1981 ஆம் ஆண்டு யேர்மன் நாட்டிற்கு புலம்பெயந்தார். தாய்நாட்டில் தான்பெற்றவற்றவற்றை மற்றவர்களுக்கு கொடுத்து வாழ விரும்பினார்
- 1983 - 1995 தம் வீட்டில் தமிழ் பாட வகுப்புகளை ஆரம்பித்து நடாத்திவந்தார்.

- 1986 - 2003 டோட்மூண்ட், லூனென், வேர்னே ஆகிய இடங்களில் கரிதாஸ் என்ற உதவி அமைப்பின் மூலம் தமிழ்பாடசாலை நடாத்தி வந்தார்.

- 1986 - 1992 கணவன் திரு பாக்கியநாதன் அவர்களின் தலைமையில் தொடங்கி நடாத்திவந்த கலைவிளக்கு சஞ்சிகையின் இணையாசிரியராக செயலாற்றினார்.

- 1989 ம் ஆண்டு யேர்மன் தமிழ்க்கல்விச்சேவையின் ஆரம்ப ஸ்தாபகர்களுள் ஒருவராக இருந்து பரீட்சை வினாத்தாள் தயாரித்து உதவிபுரிந்துள்ளார்.

- 2003 உலகத்தமிழ்க் கவிஞர்களை ஒன்றிணைக்கும் கவிதைக்கையேடாக கலைவிளக்கு கவிதையிதழ் ஒன்றையும் வெளியிட்டார்


- 2003 - 2011 டோட்மூண்ட் , சுவெற்ரா, விற்ரன் போன்ற இடங்களில் தமிழாலயங்களில் கற்பித்து வந்தார்.

- 2004 -2014 சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியத்தின் உபதலை-வராக விளங்கினார்.

- 2007 - 2008 தமிழர்கல்வி மேம்பாட்டுப் பேரவை என்ற அமைப்பின் கீழ் தமிழ்ப்பாடநூல் ஆக்கக் குழுவினர்களுள் ஒருவராக செயலாற்றினார்.

- பல ஐரோப்பிய நாடுகளில் தமிழ்மொழி ஆசிரிய பயிற்சிப்பட்டறைகளில் பங்கேற்று பயிற்சிகள் கொடுத்து வந்தார்.

- 2007 இந்தியா தமிழ் எழுத்தாளர்களால் உருவாக்கப்பட்ட உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் ஆயுட்கால உறுப்பினராக விளங்கினார்.


The International Tamil University

Maryland, USA
P.O. Box 1549
12865 H.G. Trueman Road
Lusby, Maryland 20657
Tel. 410-231-1507/410-326-8080
e-mail: tamiluniversity@hotmail.com
www.tamiluniversityusa.org
www.mkudeusa.com

The Honorable Chancellor, President, and the Academic Associates are hereby pleased to confer the title of

Doctor of Letters

ON THIS DAY OF JUNE 2ND, 2008

To

VIGNESWARY PACKIYANATHAN

FOR HER DEVOTED CONTRIBUTIONS TO THE TAMIL LITERATURE AND SERVICE TO THE TAMILS OF EUROPE

Dr. Richard L. Fisher D.D., Ed.D., Chancellor

Dr. Selvin Kumar M.A., Ph.D., Founder/President




## கிடைக்கப்பெற்ற பட்டங்கள், கௌரவிப்பு.

- 1975 -1978 ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணி ( B:A ) பட்டம் பெற்றவர்.

- 2008 ம் ஆண்டு தொலைதூரக்கல்வி பிரான்ஸ் கிளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடாத்ததுகின்ற பட்டப்படிப்பு பரீட்சைகளில் முதுகலைமாணி ( M.A ) பட்டப்படிப்பை நிறைவு செய்து பட்டம் பெற்றார்.

- தமிழ் இலக்கிய, எழுத்துப் பணிகள் போன்றவற்றை கௌரவிக்கும் விதமாக அமெரிக்கா உலகத் தமிழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்தது.

இதுவரையும் நாம் அறிந்தவர்களுள் அதிக நூல்களை படைத்தவர் திருமதி விக்னா பாக்கியநாதன் என்பது வெள்ளிடைமலையாகும். இவர் தன் கணவருடன் இணைந்து கலைவிளக்கு சஞ்சிகைகள் கையெழுத்து பிரதியாக வெளிவந்தமை தொடக்கம் சஞ்சிகைகளின் ஆக்கங்கள், ஒப்பு நோக்குதல் என பக்கபலமாக நின்று செயற்பட்டவர். ஆரம்ப காலங்களில் ஆர்வத்துடன் தன் படைப்புகளை தந்துவிட்டு தற்போது ஓய்வு எடுக்கின்றமை எமக்கு கவலையாகவே உள்ளது. அண்மையில் வெளிவந்த படைப்பாளர்கள் என்ற நூலாக்கத்தில் திரு பாக்கியநாதன் அவர்களுடன் இணைந்து தன் பங்களிப்புகளை செய்த ஆசிரியைக்கு எம் நன்றி கலந்த பாராட்டுகள்.

தற்காலங்களில் தனக்கு ஏற்படுகின்ற அனுபவங்களையும் எழுத்துருவில் கொண்டு வர வேண்டும் எம் ஆவலையும் இந்நேரத்தில் பதிவு செய்து ஆயுள் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்...

# காலத்தின் கோலம்!...

30 - 40 வருடங்களுக்கு முன்னால ஒரு கல்யாணவீட்டுக்கு போயிருந்தோம் என்றால்.....

ஆண்கள் அமர்வதற்கு இரும்பு கதிரை அல்லது மரக்கதிரை போடப்பட்டிருக்கும். பெண்கள் அமர கலர் கலரா பாய்களும் விரிக்கப்பட்டிருக்கும். சின்ன சின்ன பிள்ளைகள் எல்லாம் ஓடியாடி விளையாடி கொண்டிருப்பார்கள். இளைஞர் யுவதிகள் கற்பனைக் கனவுகளில் மிதந்துகொண்டிருப்பர்.

பெரியவர்கள் தாம்பூலம் நிறைந்த வாயோடு அரசியல் முதல் அகில உலகக் கதை வரை பேசிக்கொண்டு இருப்பார்கள். மண்டபத்தில் ஒரு ஓரமா முடி நரைத்த பெருசுகள் எல்லாம் வெற்றிலை சப்பி ஆங்காங்கே துப்பியபடி பழைய நினைவுகளை மீட்டிக்கொண்டிருப்பார்கள்.

வயதான குடும்பப் பெண்கள் எல்லாம் சாறி, நகை, அவள் இப்படி இவள் அப்படி என்று சுற்றிச்சுற்றிப் பெண்களைப்பற்றிய கதையாகத்தான் இருக்கும்.அங்கேயும் இங்கேயும் திரியும் மைக்செட் காரரை ஏதோ விஞ்ஞானி மாதிரி பார்ப்பார்கள். விஷேஷத்துக்கு வாகனங்களை இயக்கும் ஓட்டுனர்களை பைலட் ரேஞ்சுக்கு மதித்து அவர்களை உபசரிப்பார்கள்.

வழ வழப்பான சில்க்துணியில் பெரிய கொலரோடு சட்டை அணிந்து ,தலை முடியை வித்தியாசமாக சீவியிருக்கும் இளைஞர்களை ஹீரோ போல பார்ப்பார்கள்.விஷேஷத்துக்கு நான்கு சக்கர வாகனங்களில் வந்தாலே தனிமதிப்புண்டு. அதிலும் " ஏ போட்டி", " சோம செட்", " ஒஸ்ரின் " போன்ற வாகனங்களில் வருவோருக்கு சிறப்பு மரியாதை நிச்சயம் உண்டு.

சாப்பாட்டு பந்தியில் நிச்சயம் ஒரு சண்டையும் நடக்கும். சிலர் கோபித்து கொண்டு அடம்பிடிக்கும் நிகழ்வும் நடக்கும். மொய் எழுதிப் பணம்கொடுப்போர் வரிசையில் நின்றாலும் யார்? கூடக் கொடுக்கிறார்கள் என்று அறிவதற்கு ஒரு அங்கலாய்ப்பு. ஒரு சில பணக்கார திமிர்பிடித்தோர் தாம் கூடக்கொடுத்து சாதனைபடைத்துப் பெயரும் புகழும் ஈட்ட இன்னொரு அஞ்கலாய்ப்பு.

சிறிது நாகரீக உடைகளுடன் வெளி ஊர்களிலிருந்து சிலர் வந்தால் அவர்களைக் கவனித்து உபசரிக்க வீட்டுக்காரார் முண்டியடிப்பு. சாப்பாடு சமைத்தோர் தமது சாப்பாடு ருசி என்று யாராவது சொல்வார்களா? என்று ஒருவித எதிர்பார்ப்பு.சிறுவர்களோ இரண்டு மூன்றுமுறை முடித்து நான்காவது முறையும் யூஸ் போன்ற குளிர்பானங்களைக் குடித்துவிட முண்டியடிப்பு.

இப்படியாக.. ஒரு விஷேஷத்துக்கு போயிட்டு வந்தோம் என்றால் அங்கு நடந்த நிகழ்வுகளின் நினைவு சுவடுகள் மறைய மாதங்களோ வருடங்களோ ஆகும்.எப்ப இந்த பாழாய்போன "செல்போன்" வந்துச்சோ...குறிப்பா

இணைய வசதியோட கைப்பேசிகள் வந்துச்சோ... அப்போ மறைந்து போனது மனித நேயமும் சக மனித நட்பு பாராட்டலும்.

இப்போ எல்லாம்....பஸ்சுல ,ட்ரையின்ல ,கல்யாண வீடு, இழவு வீட்டுல, பார்க்கில, பீச்சில, தியேட்டரில....இப்படி எங்கெங்கு போனாலும் குனிந்த தலை நிமிராம பக்கத்துல என்ன நடக்குதென்றுகூடத் தெரியாமல் கைப்பேசியே கதி என்று கிடக்கிறோம்.

காக்கா கத்துது...மாமாவும் அத்தையும் வரப்போறாங்கள் என்று ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கி அந்த உறவுகளின் வருகைக்காக ஏங்க வைத்த தாய்மார்களின் குரல்கள் மழுங்கடிக்கபட்டு... வாட்சப் வீடியோ கோல்களின் சத்தங்கள் சகல வீடுகளிலும் ஒலிக்க தொடங்கிவிட்டது.

விஞ்ஞான வளர்ச்சி அவசியம்தான். அதுவே நம் மெய்ஞானத்தை அழிக்கிற காரணியாக மாறிவிடக்கூடாது.

(படித்ததில் பிடித்தது)

## இலங்கையில் அதிகரிக்கும் சிங்களவர்கள் - குறையும் தமிழர்கள் வெளியான புள்ளி விவரம்!

இலங்கையில் அதிகரிக்கும் சிங்களர்கள் - குறையும் தமிழர்கள் வெளியான புள்ளி விவரம்!

இலங்கையில் பூர்விகமாக வாழ கூடிய இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்து கொண்டே வருவதாக புள்ளி விவர தகவல்கள் தெரிவிக்கின்றன.இலங்கையில் பூர்விக தமிழர்கள், மலையக தமிழர்கள், தமிழ் பேசும் இஸ்லாமியர்கள் உள்ளிட்ட 3 வகையான தமிழர்கள் இருந்து வருகின்றனர்.இலங்கையில் உள்ள திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்கள் சிறுபான்மையினராகிவிட்டது புள்ளிவிவரங்களில் அம்பலமாகியுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் முடிவடைந்து கிட்டதட்ட 14 ஆண்டுகள் ஆகின்றது. 14 ஆண்டுகளில் தமிழர்களுக்கான உரிமை அவர்களது மறுவாழ்வு இவையெல்லாம் கேள்வி குறியாக இருக்கும் சூழ்நிலையில் தமிழர்களின் எண்ணிக்கை அந்த நாட்டில் தொடர்ந்து குறைந்து கொண்டே வருகிறது. இலங்கையில் அதிகரிக்கும் சிங்களர்கள் - குறையும் தமிழர்கள் வெளியான புள்ளி விவரம்! ’ Sinhalese Increase In Sri Lanka Tamils Statistics

குறிப்பாக இனப்பிரச்சனையால் நேரிட்ட போர், உயிரிழப்புகள், இடம்பெயர்தல், அகதிகளாக வெளியேறுதல் உள்ளிட்டவற்றால் தமிழர்களின் எண்ணிக்கை சரிந்துள்ளது. மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் எண்ணிக்கையானது வெகுவாக குறைந்துள்ளது.கிழக்கு மாகாணத்தில் சிங்களர், இஸ்லாமியர்களுக்கு அடுத்தப்படியாக 3வது இடத்துக்கு சென்றுள்ளது தமிழக மக்கள் தொகை என தெரியவந்துள்ளது.

புள்ளி விவரங்கள் மூலம் அம்பலம்

இலங்கை அரசு வெளியிட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளி விவரங்கள் மூலம் இத்தகைய தகவல் தெரியவந்துள்ளது.

1881 ஆம் ஆண்டு 24.9 சதவீதமாக இருந்த இலங்கை தமிழர்கள் எண்ணிக்கை 2012 ல் 11.2 சதவீதமாக சரிந்துள்ளது. 1881 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தமிழர்களின் எண்ணிக்கை பாதியாக குறைந்துவிட்டது.

இலங்கையில் அதிகரிக்கும் சிங்களர்கள் - குறையும் தமிழர்கள் வெளியான புள்ளி விவரம்! ’ Sinhalese Increase In Sri Lanka Tamils Statistics
திருகோணமலையில் 1881 ஆம் ஆண்டு 64.8 சதவீதமாக இருந்த தமிழர்கள் எண்ணிக்கை 2012ல் 32.3 சதவீதமாக குறைந்துள்ளது.
அம்பாறை மாவட்டத்தில் 1963 ஆம் ஆண்டு 28.8 சதவீதமாக இருந்த தமிழர்களின் எண்ணிக்கை 2012ல் 17.4 சதவீதமாக சரிந்துள்ளது.

1981 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 74 சதவீதமாக இருந்த நிலையில் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை 12.6 சதவீதமாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 74.9 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை 11.2 சதவீதமாக குறைந்துள்ளது.கிழக்கு மாகாணத்தில் 1981 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 24.9 சதவீதமாக இருந்த நிலையில் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை 42.1 சதவீதமாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 23.1 சதவீதமாக இருக்கும் நிலையில், இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை 39.8 சதவீதமாக குறைந்துள்ளது.
இலங்கையில் அதிகரிக்கும் சிங்களர்கள் - குறையும் தமிழர்கள் வெளியான புள்ளி விவரம்! ’ Sinhalese Increase In Sri Lanka Tamils Statistics
திருகோணமலை மாவட்டத்தில் சிங்களர் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டு 33.6 சதவீதமாக இருந்த நிலையில் இலங்கை தமிழிர்களின் எண்ணிக்கை 36.4 சதவீதமாக இருந்தது.
2012 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 27 சதவீதமாக இருந்த நிலையில், இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை 32.3 சதவீதமாக உள்ளது.
அம்பாறை மாவட்டத்தில் 1981 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 37.8 சதவீதமாக இருந்த நிலையில், தமிழர்களின் எண்ணிக்கை 20.4 சதவீதமாக இருந்தது.
2012 ஆம் ஆண்டு சிங்களர் எண்ணிக்கை 38.7 சதவீதமாக இருந்த நிலையில், தமிழர்களின் எண்ணிக்கை 17.4 சதவீதமாக குறைந்துள்ளது

## குறைவடையும் இலங்கை மக்களின் ஆயுட்காலம்..!

ஆயுட்காலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

இலங்கை வாழ் மக்களின் ஆயுட்காலம் குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு பொருளியல் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் சிசு மரண வீதமும் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை, ஸம்பியா, கானா போன்ற நாடுகளில் சிசு மரண வீங்கள் உயர்வாக காணப்படுவதாகவும் அந்தப் பட்டியலில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றம் சுமத்தியுள்ள மேற்குலக நாடுகள்

குறைவடையும் இலங்கை மக்களின் ஆயுட்காலம்..! ’ Decreasing Sri Lankan Life Expectancy இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படாவிட்டால் அந்த நாடுகள் நெருக்கடி நிலைமைகளை எதிர் நோக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## யேர்மனி "மண்" சஞ்சிகை ஆசிரியரின் 70வது பிறந்தநாள் விழா..03.09.2023

பிரபல எழுத்தாளரும் கவிஞரும் " மண் "கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் , ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், ஜேர்மனி தமிழ்க் கல்வி சேவையின் நிர்வாக குழு உறுப்பினருமான திரு: வைரமுத்து சிவராசா அவர்களின் 70 ஆவது பிறந்த நாள் விழாவானது, கடந்த 03.9.2023 ஞாயிறு அன்று யேர்மனியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. .

இந்நிகழ்வில் திரு. வ. சிவராசா அவர்களால் எழுதி வெளியிட்ட " இருமலர்கள்" என்ற தொகுப்பு நூலினை ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் ஜேர்மனி தமிழ்க் கல்விச் சேவையின் அதிபருமான "தமிழ்மணி" திரு: பொன். சிறிஜீவகன் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார். சொந்தங்கள், உறவினர், நண்பர்களின் வாழ்த்துரைகளுடன் பல சுவாரஸ்யமான நிகழ்வுகளும் இடம்பெற்றன. பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த ஏராளமான நட்புகளும் கவிஞர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் பங்கேற்றனர். அவ்விழாவினை, ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் " நுண்ணறிவாளன்"திரு: சி. சிவவினோபன் அவர்கள் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் எனது சிறிய கவியுரையையும் வாழ்த்தாகப் பதிவுசெய்தேன்.

## இருமலர்கள் ஈந்த பெருவிருச்சத்துக்கு!....

இரட்டைமலர்களைப் பூத்தின்று
கற்பக தருவாய்க்
காட்சி தருகின்ற
மகா விருட்சத்துக்கு
கானமிசைக்கும் இந்தக்
காட்டுக்குயிலின் பாட்டு
பட்டாடை போர்த்திடுமா.?
ஞானத்தைப் போதிக்கும்
போதிமரத்துக்கு
நானுரைக்கும் வரிகள்
புகழாரமாய் ஆகிடுமா.?
சொற்களைக் கூட்டியொரு
சுந்தர வாழ்த்தினைச்
சுவையோடு இசைத்தல்
எங்ஙனம் ஏற்புடயதாகுமோ..?
கிளைகளில் அமர்ந்து
இளைப்பாறிக் கொண்டு
விளைந்த கனிகளை
சுவைப்பதே என்வேலை..
வானுயர வளர்ந்து -
விரிந்த விருட்சத்துக்கென
வார்த்தைகளை வரிசைப்படுத்தி
வாழ்த்துப்பாடுதல் சாத்தியமாகுமா.?
எழுபது என்பது
எண்ணிக்கையில் உயர்ச்சி
எழுவதும் நிமிர்வதும்
எழுச்சியின் முயற்சி
பழுதில்லா வாழ்வளிக்கப்
பாருக்காய் உழைப்பது
பண்பட்ட ஞானத்தால்
பதித்திட்ட வளர்ச்சி..
வழுவிடாத் திறனும்
நழுவிடா உரமும்
வாழ்கின்ற காலத்தை
வரி வரியாய் நீட்டும்..
ஊன்றிய வேர்களும்
தோன்றிய விழுதுகளும்
ஆன்றோரின் ஆசிகளாய்- உரத்தினை
அள்ளியே இறைக்கும் ..

நீ ,
கல்லடிகள் பட்டாலும்
காய்ப்பதை நிறுத்தவில்லை
சொல்லடிகள் விழுந்தாலும்
சோர்வென்பது உனக்கில்லை
வல்லமை தருகின்ற -வளங்களை
இயற்கையே வழங்கிட
மண்ணினைப் பற்றிப்பிடித்து
வானத்தை எட்டித் தொடுகின்றாய் ..
எண்ணிலா உயிர்களின்
ஏற்றத்துக்கும் மாற்றத்துக்கும்
ஏணிப்படியாய் ஆகிநிற்கின்றாய் ..
தங்கிச் செல்லவும்
தாங்கிக் கொள்ளவும்
வெயிலில் வெந்து
பலருக்குக் குடையாகிறாய் ..!
ஆனால் ,
வானமே உனது குடை
மண்தான் உனது இருப்பு
எழுத்தே உனது தவம்
எழுதுவதே உனக்கு வரம் ..
வெழுத்த ஞாயிறாய்
உதித்திட்ட ஐம்பதகவை
பழுத்திட்ட உன்படையல்களைப்
பாரெங்கும் பதியமிடும்..
அழுத்திடும் அறத்தினை
ஆங்காங்கே நீஉழுதிவிதைத்ததால்
ஆறிடாத மனங்களுக்கவை
ஔடதமாய் ஆகிவிடும்.!
பூக்களை புஸ்ப்பித்தாய்
கனிகளைக் காசினிக்குக்
காணிக்கையாய்த் தருகின்கிறாய்
நீ ஓய மாட்டாய்
உலரவே மாட்டாய் .!
ஏனென்றால்,
நீர் போகும் திசையெங்கும்
வேர் விரித்து நிமிருகின்றாய்
மனிதநேயம் என்னும்
மகரந்த மணிகளை அல்லவா
மண்ணெங்கும் தூவுகின்றாய்-.
அவை,
இந்தப் புவனம் எங்கும்
உன் பெயரை உச்சரிக்கும்
பூட்டிக் கிடக்கும் மனங்களைச்
சற்றே எச்சரிக்கும்..!
நச்சரிக்கும் நிமிடங்கள்- எனை
நாவடக்கச் சொல்லுவதால்
சச்சரவு தொடங்கும் முன்
இந்த சபைக்கு என் நன்றிகள்..
அச்சரங்கள் பிசிகிடாத
அழகிய நம் தமிழாக
உச்சங்களைத் தொட்டு
உயர்ந்து நின்று வாழ்ந்திடுக.!
மிச்ச சொச்ச மகிழ்ச்சியெல்லாம்
மீதமுள்ள காலம் வரைத்
திகட்டத் திகட்ட நுகர்ந்து
தித்திப்பாய் வாழ்ந்திடுக..!
அச்சுப்பிசகாது சுழலுகின்ற
அகிலத்தின் தடம்போல
மெச்சுகின்ற ஆயுளோடு
மிகவுயர்ந்து வாழ்ந்திடு..!
வாழ்க பல்லாண்டு.!
நன்றி

**கவிச்சுடர்**
**அம்பலவன் புவனேந்திரன்**



## பிறந்தநாள் வாழ்த்து மடல்

இத்தரையின் துயர்துடைக்க உழைப்பவர்கள்
இப்புவியில் காலமெல்லாம் பிறக்கின்றார் !
அத்தகையோர் வரிசையிலே சிவராசா
அவனியிலே வந்துதித்த நன்னாளில் ,
சித்தத்தில் தேனூற வாழ்த்துகின்றோம் .
செழுஞ்சுடராய் விரியட்டும் நற்பணிகள் !
முத்தெனவே ஒளிரட்டும் நல்வாழ்க்கை
முத்துநகை இதழோரம் மலரட்டும் .
கார்மேகம் பொழியாமல் போய்விட்டால்
காசினிதான் செழிப்புற்றுத் துலங்கிடுமா ?
நீர்மேகம் உலவுகின்ற தன்மையதாய்
நீணிலத்தின் பக்கமெலாம் நடப்பவர்தான் !
சீர்மேவும் பணிகளையே செய்வதனால்
செழிப்புற்று விளங்குகின்ற தேசங்கள் !
வேராக நிற்பவரை வாழ்த்துகின்றோம் .
விருதுகளைப் பெற்றவரைப் போற்றுகிறோம் .
எழுத்துலக சாதனைகள் எத்தனையோ
எழிலார்ந்த எழுத்தாளர் சங்கமொன்று !
பழுதிலாத வகையினிலே பயணிக்கப்
பகலிரவு பாராமல் முயன்றவர்தான் !
விழுதுகளா யவர்பின்னே பலருண்டு !
விழுமியங்கள் தழைப்பதற்குப் பணிசெய்வார் .
அழுதவரின் கண்ணீரைத் துடைப்பவர்க்கு
அணிகளெனப் பாமாலை சூட்டுகின்றோம் .
அயராது பணிசெய்து நடப்பவரால்
அல்லலுற்று வாடுவோரு மயர்வுநீங்கி
துயரின்றி வாழ்கின்றார் நிலமெங்கும்
தூயபணி செய்பவரால் தானென்போம் !
உயர்வான பணிசெய்து நிற்பவரை
உலகமென்றும் வாழ்த்திடுமே யெந்நாளும் !
பயிர்வளர நீர்வார்த்துச் செல்பவர்போல்
பயனளித்து நிற்பவரை வாழ்த்துகின்றோம் .
மண்ணென்னும் சஞ்சிகையைப் பதியமிட்டு
மக்களுக்காய் சேவைசெய்யும் நாயகனும் ,
பொன்னான நன்னாளிற் களிக்கையிலே
புவிமக்கள் வாழ்த்துகின்ற வேளையிலே ,
கண்ணான துணைவியாரும் வீற்றிருக்க
கனிவுடனே வாழ்த்துமலர் தூவுகின்றோம் .
மண்ணதிலே செல்வமெல்லாம் பெற்றென்றும்
மகிழ்வுடனே வாழியவே பல்லாண்டு .

அன்புடன் வாழ்த்துவது - திரு . திருமதி . சம்பந்தன் குடும்பம்
இராட்டிங்கன் - ஜேர்மனி



# புலம்பெயர் நாட்டில் முதலாவது அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி - கனடா

**கனடாவின் அமைச்சரவை அமைச்சராக முதல் தடவையாக இலங்கைத் தமிழர்!**

கனடாவில் ஆளும் லிபர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரி (Gary Anandasangaree) கனடாவின் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். கனேடிய அமைச்சரவையில் இலங்கைத் தமிழர் ஒருவர் அமைச்சராக முதல் தடவையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கனடாவின் அமைச்சரவை அமைச்சராக முதல் தடவையாக இலங்கைத் தமிழர்! ’ (Canada Minister Srilanka Tamil Gary Anandasangaree) கனடாவின் அரசு பழங்குடியின உறவுகளுக்கான அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். கனடா-ஸ்காப்ரோ தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்றி வரும் ஹரி ஆனந்தசங்கரி, கடந்த 2015ம் ஆண்டு முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் குடியரசு - முதல் குடியினர் உடனான உறவுகள் அமைச்சராக பதவியேற்றுள்ளார் ஹரி ஆனந்தசங்கரி. இவர் நீண்ட காலமாக மனித உரிமைகள் பிரச்சினைகளை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வாதிட்டு வருகிறார் என்பதோடு பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை உட்பட பல்வேறு மன்றங்களில் கனடிய தமிழர் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இவர் முதன்முதலில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படும் வரை சட்ட ஆலோசகராகவும் செயற்பட்டார். சிறிதுகாலம் அயர்லாந்தில் வாழ்ந்ததுடன் 1983ம் ஆண்டுதான் இவர் கனடாவில் குடியேறினார். அங்கு பட்டப்படிப்பை மேற்கொண்டு 1996ம் ஆண்டு B.A பட்டம் பெற்றார். 1996 - 2006 வரை (Real State) காணி, வீடு விற்பனையில் தொழில் புரிந்தார். Carleton, York பல்கலைக்கழகங்களில் படித்து சட்டத்தரணியாகத் தொழில் புரிந்தார்.

லிபரல் கட்சியில் சேர்ந்து 2015ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று (Scarborough) ஸ்காபறோ தொகுதியில் வெற்றி பெற்று எம் பியாகத் தெரிவானார். அடுத்த தேர்தல் 2021ம் ஆண்டில் நடைபெற்றபோது அதிலும் வெற்றிபெற்றார். பாராளுமன்றத்தில் பொதுச்சட்டத்துறை அமைச்சின் விவகாரங்களுக்குச் சட்ட ஆலோசகராகவும் பணிபுரிந்து வந்தார்.

கனடிய மந்திரி சபை மாற்றி அமைத்தபோது கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் மந்திரி சபையில் இவர் கனடாவின் பூர்வீக குடிமக்கள் நலன் காக்கும் ( Minister of Crown - Indigenous )அமைச்சராக 26.07.2023 அன்று தெரிவு செய்யப்பட்டார்.

கனடாவில் அமைச்சரகியிருக்கும் இவர் திருக்குறள்மீது கைவைத்து சத்தியப்பிரமாணம் செய்திருக்கிறார். கனடாவின் பூர்வீக குடியின மக்கள் ஒரே வகையானவர்களல்ல. பல்வேறு குழுமங்கள் அவர்களிடையே உண்டு. ஒவ்வொரு குழுவினரும் தனித்துவமான வரலாறு, மொழி, கலாச்சாரம், பணபாடு, ஆன்மீக வேற்பாடுகள் உண்டு. பூர்வீககுடி மக்களில் மூன்று இனக்குழுமங்களை கனேடிய அரசு அங்கீகரித்துள்ளது.

பூர்வீக குடிமக்களுடன் இணைந்து கனடாவின் தேசியம் சார்ந்த ஒருமைப்பாடு, இணக்கப்பாடு, உறவு மேம்பாடுகளைக் கவனித்தலே இவரின் பிரதான செயற்பாடாக இருக்கும். புத்தம் புதிய அமைச்சரான இவரின் பணிகள் எந்த அளவிற்கு முன்னேற்றம் நன்மதிப்பு காணும் என்பதை எதிர்காலத்தில் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இலங்கையின் மூத்த அரசியல் வாதியும் சாணக்கியருமான திரு வீ ஆனந்தசங்கரியின் மகனான இவர் தனது பொறுப்புக்களை உணர்ந்து எதிர்காலத்தில் திறம்படச் செயலாற்றுவார் என எதிர்பார்க்கலாம்.

தமிழர்கள் புலம்பெயர் நாடு ஒன்றில் வரலாற்றின் முதலாவது அமைச்சர் பதவியை பெற்றுருக்கும் திரு ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்குப் பாராட்டுகளைதெரிவிப்போம்!.. எதிர்காலப் பணிகள் சிறக்க வாழ்த்துவோம்!..

# மூத்த ஊடகவியலாளர் விமல் சொக்கநாதன் மறைந்தார்!..

உலகத் தமிழ் ஊடகப் பரப்பில் பேரிழப்பு !..
அவரோடு நான் கொண்டிருந்த தொடர்பு !..

மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் தனது 75ஆவது வயதில் காலமானார். இலண்டனில் செவ்வாய்க்கிழமை (01-08-2023) அன்று மாலை நடை பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது விபத்தொன்றில் விமல் சொக்கநாதன் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

விமல் சொக்கநாதன் ஒரு வானொலிக் கலைஞரும், ஒலிபரப்பாளரும் ஆவார். ஒரு கலைக்குடும்பத்தின் ஊடாக இளம் வயதிலேயே கலைத்துறைக்கு வந்தவர். சிறுவர் மலர் நாடகங்களில் ஆரம்பித்து, மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். இலங்கை வானொலியில் நீண்ட காலம் அறிவிப்பாளராக பணியாற்றியவர்.

அவரோடு நான்...

சுமார் 25 வருடங்களின் முன் யோர்மனியில் நடைபெற்ற அரங்கேற்றம் ஒன்றிற்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்தபோதுதான் எனது முதல் தொடர்பு ஏற்பட்டது.



பின்னர் லண்டனில் விழா ஒன்றில் கலந்துரையாடினேன். இதற்குப் பின்பு பல தடவைகள் தொலைபேசித் தொடர்பு இருந்து வந்தது. இறுதியாக அவருடன் சந்தித்து கலந்துரையாடியது 2019ம் ஆண்டு ஐப்பசிமாதம். யேர்மனி - முன்சன் நகரில் இடம்பெற்ற நண்பர் அன்ரனின் பழைய தேடல்களின் பொருட்காட்சி விழாவில்தான். அவருடனும் நோர்வே முன்னாள் அமைச்சரும் மற்றும் இலங்கை அமைதிப் பேச்சாளருமான எரிக் சொல்கைம் அவர்களோடு கலந்துரையாடி எனது வெளியீடுகளையும் அவர்கள் இருவருக்கும் கொடுத்த நிகழ்வு மறக்கமுடியாத நாளாக இருந்தது. (இதில் காணப்படும் படத்தில் காணலாம்.)

1978 ஆம் ஆண்டு வெளிவந்த ஈழத்து தமிழ்த் திரைப்படமான நான் உங்கள் தோழன் என்ற திரைப்படத்திலும் நடித்தவர்.வானொலிக் கலை, விமலின் பக்கங்கள், இலண்டனில் இருந்து விமல் அவர்கள் சிலபுத்தகங்களை எழுதியிருந்தார்.



இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த பின்னர் பிபிசி தமிழோசையில் அறிவிப்பாளராகப் பணியாற்றியவர் இதேநேரம் இவரது குரல் உலகத் தமிழ் வானொலிகளில் ஒலித்தது. இவர் சட்டம் படித்து லண்டனில் வழக்கறிஞர் நிறுவனம் நடத்திவந்தார். ஜி.ரிவி, ஐ.பிசி வானொலி, ஐ.பி.தொலைக்காட்சி, மெய்வெளி நியூஸ், வீரகேசரி பத்திரிகையிலும் ஆக்கங்களை எழுதிவந்தவர்.

ஏற்கனவே ”வானொலிக்கலை” என்னும் நூலை எழுதியிருந்த இவர் தான் எழுதிய ”லண்டனிலிருந்து விமல் ” என்னும் நூலையும் அண்மையில் எழுதி வெளிட்டார். இந்நூலை இந்த வருடம் வைகாசி மாதம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் அறிமுக விழாவில் வெளியிட்டார்.

இந்த ஆண்டு மே மாதம் உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதின் “வானலைகளில் ஒரு வழிப்போக்கன்“



அமரர் விமலுடன் நான் - யேர்மனி முன்சன் நகரில் 2019

நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெற்றபோது, அந்நிகழ்வினை விமல் சொக்கநாதன் தலைமையேற்று நடத்தியதோடு, நூல் வெளியீட்டிலும் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைபெற்று முடிந்த போர்க்காலங்களில் வட கிழக்கு உள்ளிட்ட பல பாகங்களின் நிலைமைகளையும் செய்திகளையும் உடனுக்குடன் பி.பி.சி வானொலி தொலைக்காட்சிமூலம் வெளிப் படுத்தி தனது கடமைகளைச் சிறப்பாகச் செய்தபெருமையும் இவருக்கு உண்டு.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்கள் கலை உலக ஊடக நட்புகள்அனை வருக்கும் ஆறுதல் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் - "மண்" சஞ்சிகை**

**-**

# அமெரிக்கா பகிரங்க ரெனிஸ் போட்டி - 2023

மீண்டும் உலகசாதனை நொவாக் டியோக்கோவிச்..
ரெனிஸ் வரலாற்றில் அனைத்திலும் முதலிடம் பிடித்தார்..
ரெனிஸ் விளையாட்டின் சர்வதேச வரலாற்றில் மீண்டும் சேர்பியா நாட்டு வீரர் நோவாக் டியோக்கோவிச் சாதனைபடைத்துள்ளார். அமெரிக்க ரெனிஸ் வரலாறு 1881 ஆம் ஆரம்பிக்கப்பட்டாலும் (142 வருடங்கள்) கிறாண்ட் ஸ்லாம் (Grand Slam) என்று அழைக்கப்படும் (Australian Open, Frence Open, Wimbledon, US Open) போட்டியானது 1938ம் ஆண்டுதான் தொடங்கியது. இந்த நான்கு போட்டிகளுக்கும்தான் வெற்றியாளர்களுக்கு அதிகூடிய பணப்பரிசும் அதிகூடிய புள்ளிகளும் வழங்கப்படும்.

**ஆண்கள்...**
2023 ஆண்டிற்கான கிராண்ட் ஸ்லாம் அமெரிக்க பகிரங்கப் போட்டியானது 28.08.2023 ஆரம்பமாகி 10.09.2023 முடிவடைந்தது. ஆண்களுக்கான இறுதிப் போட்டியில உலக தரவரிசையில் 3வது இடத்திலுள்ள ரஷ்ஷிய வீரர் மெட்வீடெவ் டானியல் ( Medwedew - Danial) என்பவரும் உலகின் தரவரிசையில் 2வது இடத்தில் இருக்கும் 36 வயதான சேர்பியநாட்டு வீரர் நோவாக் டியாகோவிச்சும் (Novak Djokovic) மோதிக்கொண்டதில் சேர்பியவீரர் 6-3, 7-6, 6-3 என்ற செட்கணக்கில் வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசான 30 லட்சம் டொலரையும் அள்ளிச் சென்றார். இவர் அமெரிக்க பகிரங்கப் போட்டியில் 4 தடவைகள் வெற்றி பெற்றிருக்கின்றார். (2011, 2015, 2018, 2023)

**பெண்கள்...**
2023 அமெரிக்கா பகிரங்க ரெனிஸ் போட்டியின் பெண்கள் பிரிவில் அமெரிக்காவைச் சேர்ந்த 19 வயது இளமங்கையான கோகோ கௌவ் (Coco Gauff) முதற்தடவையாக வெற்றிக்கிண்ணத்தையும் 30 லட்சம் டொலரையும் அள்ளியிருக்கின்றார். பெலாருஸ் நாட்டைச்சேர்ந்த அரனா சபலென்காவுடன் இறுதிப்போட்டியில் மோதியதில் 2 - 6, 6 - 3, 6 - 2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார். அமெரிக்க இளம் வீராங்கனை ஒருவர் ( 19 வயதில் ) அமெரிக்க ரெனிஸில் பட்டம் வென்றது இதுவே முதல் முறையாகும்.
அமெரிக்க ரெனிஸ் வரலாற்றில் கறுப்பின அமெரிக்கரான கோகோ சம்பியன் பட்டம் வென்றது உலகெங்கும் புகழ்ந்துபேசப்படுவது குறிப்பிடத்தக்க விடையமாகும்.





# சிங்கப்பூரின் ஜனாதிபதியானார் இலங்கைத் தமிழர்!..

தர்மன் சண்முகரத்தினம் யாழ்ப்பாணத்தமிழ் வழ்சாவளி!..
சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்வம்சாவளியான தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற்று நாட்டின் 9வது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு நேற்றையதினம் (14.09.2023) பதவி ஏற்றார். 01.09.2023 அன்று நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இவரை எதிர்த்து மூவர் போட்டியிட்டதில் இவர் 70 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டினார். இதையடுத்து நாட்டின் ஜனாதிபதவியாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.
ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு இவர் சிங்கப்பூரில் வகித்த பதவிகள்..
-2019 - 2023 வரை சிங்கப்பூரின் மூத்த அமைச்சர்களில் ஒருவராகப் பதவி வகித்தார்.
-2015 - 2023 சமூகக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு மந்திரி பதவி.
-2011 - 2023 சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் தலைவர் பதவி.
-2011 - 2019 சிங்கப்பூரின் துணைப் பிரதமர் பதவி.
இவர் உலகப் பொருளாதார மன்றத்தின் அறங்காவல் குழுவில் உறுப்பினராகவும் உள்ளார். 2024ம் ஆண்டு ஐ.நா. சபையின் உச்சி மகாநாட்டிற்கு பரிந்துரைகளை வழங்கும் ஐ.நா.சபையின் பொதுச்செயளாளரின் உயர்மட்டக்குழு உறுப்பினராகவும் உள்ளார்.
இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் ஒரு பொருளாதார வல்லுநர். லண்டன் கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தில் படித்து பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டம் பெற்றவர். ஜப்பான்-சீனா வழ்சாவழிப் பெண்ணை திருமணம் செய்திருக்கிறார்.
2006, 2011, 2015, 2020 தேர்தல்களில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்துள்ளார். நீண்ட காலம் அரசியலில் .ருந்துவரும் இவர் இன்று சிங்கப்பூரின் ஜனாதிபதியாகப் பதவி உயர்ந்துள்ளார். எதிர்காலத்தில் சிங்கப்பூரின் அதிகாரம் மிக்க பதவியான பிரதமராவும் வருவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகப் பேசப்பட்டுள்ளது. தமிழர் என்ற ரீதியில் நாமும் மகிழ்ந்து வாழ்த்துவோம்!..

# Yaazhl Association For The Visually Handicapped

## யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்

Reg. No. MSS/NSPD/R/195
28, 1st Lane, Temple Road,
Jaffna.
T.Phone No. 021 222 7336
Fax No: 021 222 7336
Mobile: 0773741201
Viber/Whatsapp/IMO: 0768296180
E.Mail: voiceofvis@gmail.com / Facebook:- Yaazhl Visually
Web: www.voiceofvis.org

Bank Account No. 104-2-001-5-0011261
People's Bank, No.104, Main Street, Jaffna.
Bank Account No. 8060054235
Commercial Bank, Hospital Road, Jaffna.

பதிவு இல. MSS/NSPD/R/195
28, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 7336
தொலை நகல்: 021 222 7336
தொ.பே: 0773741201
மின்னஞ்சல்: voiceofvis@gmail.com
இணையத்தளம்: www.voiceofvis.org

**Patron**
Prof. R. Sivachandran
Professor in Geography (Retd)
University of Jaffna.

Dr. M. Malaravan. MBBS MD
Fellowship in Anterior Segment
Consultant Ophthalmologist
Teaching Hospital, Jaffna.

Fr. T. E. Thevarajan
St. Antony's Church,
Urany, K. K. S.

**President:**
Mr. Y. Suthakaran

**Vice President:**
Mr. S. Rubaraja

**Secretary**
Mr. V. Kanagasabai

**Vice Secretary**
Mr. A. Krishanth

**Treasurer:**
Mrs. S. Mariya Thushsanthy

**Committee Members:**
Mr. K. Pratheepan
Mr. R. Sivakumaran
Mrs. K. Scolastica Regina
Mr. C. Sivakanistan
Mr. G. Mathan
Mr. V. Rekncraj

இக் காணியில் வீட்டினை அமைத்து எஞ்சிய நிலத்தில் கால்நடை வளர்ப்பு, பயிர்செய்கை என்பன மேற்கொண்டு வருவாய் ஈட்டும் வகையிலேயே ஒரு அங்கத்தவர்க்கு 2 ¾ பரப்பு வீதம் காணி பகிரத் தீர்மானித்துள்ளோம். இக் காணிகள் அங்கத்தவருக்கு எழுதும் போது எமது அங்கத்தவரின் பரம்பரை சந்திர சூரியர் உள்ள வரை பரம்பரை பரம்பரையாக வாழ உரித்துடையதோடு இதனை கைமாற்றவோ, விற்கவோ, குத்தகைக்கு விடவோ, வரதட்சணையாக வழங்கவோ உரித்துடையது அல்ல என்றும் எமது அங்கத்தவரை கடைசி வரை யார் பராமரிக்கிறார்களோ அவர்களுக்கே இவ் ஆதனம் சொந்தமாகும் என்பன விதிகளாக ஒப்பந்தம் செய்யப்பட்டே இவ் ஆதனம் எழுதப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம். எனவே விழிகள் இழந்து வலிகள் சுமந்து முகவரியின்றி வாழத்துடிக்கும் எம்மவர்க்கு காணி வழங்க காணிக்கை தந்துதவுமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். தொடர்புகளுக்கு – 0771496392

நன்றி

செயலாளர்

செயலாளர்
யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்
இல.28, 1ம் ஒழுங்கை கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

# Yaazhl Association For The Visually Handicapped

## யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்

Reg. No. MSS/NSPD/R/195
28, 1st Lane, Temple Road,
Jaffna.
T.Phone No. 021 222 7336
Fax No: 021 222 7336
Mobile: 0773741201
Viber/Whatsapp/IMO: 0768296180
E.Mail: voiceofvis@gmail.com / Facebook:- Yaazhl Visually
Web: www.voiceofvis.org

Bank Account No. 104-2-001-5-0011261
People's Bank, No.104, Main Street, Jaffna.
Bank Account No. 8060054235
Commercial Bank, Hospital Road, Jaffna.

பதிவு இல. MSS/NSPD/R/195
28, முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 7336
தொலை நகல்: 021 222 7336
தொ.பே: 0773741201
மின்னஞ்சல்:voiceofvis@gmail.com
இணையத்தளம்: www.voiceofvis.org

Patron
Prof. R. Sivachandran
Professor in Geography (Retd)
University of Jaffna.

Dr. M. Malaravan. MBBS MD
Fellowship in Anterior Segment
Consultant Ophthalmologist
Teaching Hospital, Jaffna.

Fr. T. E.Thevarajan
St. Antony's Church,
Urany, K. K. S.

President:
Mr. Y. Suthakaran

Vice President:
Mr. S. Rubaraja

Secretary
Mr. V. Kanagasabai

Vice Secretary
Mr. A. Krishanth

Treasurer:
Mrs. S. Mariya Thushsanthy

Committee Members:
Mr. K. Pratheepan
Mr. R. Sivakumaran
Mrs. K. Scolastica Regina
Mr. C. Sivakanistan
Mr. G. Mathan
Mr. V. Reknoraj

திரு. வைரமுத்து சிவராஜா
உரிமையாளர்
மண்சஞ்சிகை ஜேர்மன்

MY NO : YAVIS/AD/23/511

02.08.2023

### உதவி கோரல்

எமது நிறுவனமானது மேற்படி முகவரியில் பார்வையற்றவர்களின் சுயவாழ்வு விருத்திக்காக இற்றைக்கு 47 ஆண்டுகளாக இயங்கி வரும் எமது நிறுவனமானது கல்வி, மருத்துவம், வறுமையொழிப்பு, வாழ்வாதாரம், வறியோர்பராமரிப்பு முதலான பணிகளை பொதுமக்களின் நிதி உதவியோடு ஆற்றி வருகிறது தாங்களும் கடல் கடந்து வாழ்ந்தாலும் மண் என்ற சஞ்சிகை மூலம் புண்பட்டுக் கிடக்கின்ற மனித மனங்களை எழுத்துக்களால் பண்படுத்தி வருவதை அறிந்து மன மகிழ்ச்சி அடைகிறோம். எமது நிறுவனத்தின் 18 பார்வையற்றவர்கள் காணியின்றி வீடின்றி கண்ணீரிலும் மழைத் தண்ணீரிலும் அவதிப்பட்டு வந்தார்கள் இவர்களில் 7 அங்கத்தவர்களுக்கான நிலங்களை புலம் பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்போடு கொள்வனவு செய்து வழங்கியதோடு அதில் 5 அங்கத்தவர்களுக்கான வீட்டினையும் கிணற்றினையும் அமைத்துக் கொடுத்துள்ளோம் எனினும் 11 பார்வையற்றவர்களுக்கான காணிகளை வழங்குவதற்கு எம்மிடம் நிதிப் பற்றாக்குறையாக உள்ளது இவர்களில் 06 அங்கத்தவர்களுக்கு 2 ¾ பரப்பு வீதம் காணியினை வழங்க ரூபா இருபத்து இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் (ரூ2,260,000/=) தேவைப்படுகிறது இவர்களுக்காக இனம் காணப்பட்ட காணியானது போக்குவரத்து சாலையில் இருந்து (கொடிகாமம் பருத்தித்துறை சாலையில் இருந்து) ½ Km தொலைவில் உள்ளதோடு அரை மணிக்கு ஒரு தடவை பயணம் செய்யக்கூடிய பஸ் போக்குவரத்து சாலையாகவும் காணப்படுகிறது. இக் காணிக்கு அண்மையில் சந்தை, வரணி மகாவித்தியாலயம் காணப்படுவதோடு 3 Km தொலைவில் கொடிகாமச் சந்தியில் வைத்தியசாலையும் அமையப்பெற்றிருப்பதால் எமது பார்வையற்ற அங்கத்தவரின் பயன்பாட்டிற்கு இக் காணி பொருத்தமுடையது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தெரியப்படுத்துகிறோம்.

விழி இழந்தோருக்கு வழி காட்டுங்கள்: வெள்ளைப் பிரம்புக்கு மதிப்பளியுங்கள்.
Guide to Visually Handicapped; Respect to White Cane.

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

.......................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

.......................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

.......................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

.......................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி ”அருளகம்” - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

.......................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)

9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---



# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 23-06-2023 + 311-68

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

+ 580-00
......................

அன்பளிப்புகள்... + 891-68

08. திரு வைரமுத்து சிவராசா - Duisburg + 216-88
( 70வது பிறந்தநாள் அன்பளிப்பு )(122.81 + 94.07)
09. திருமதி இராஜேஸ்வரி சிவராசா - Duisburg + 100-35
(தந்தையாரின் 28 வது வருட நினைவு அன்பளிப்பு)
09. திரு வல்லிபுரம் சபாரத்தினம் - Denmark + 58-10
(தந்தையாரின் 28 வது வருட நினைவு அன்பளிப்பு)
10. பரமானந்தம் பிரபாகரன் - Oberhausen + 150-00
(தாயாரின் முதலாவது வருட நினைவு அன்பளிப்பு)
11. திரு,திருமதி வசந்தா-சண்முகநாதன் - London + 144-36
(மகன் அமரர் காந்தசீலன் அவர்களின் பிறந்தநாள்அன்பளிப்பு)

+ 669-69 + 669-69
........................

+ 1561-37

| | | | |
|---|---|---|---|
| முற்பக்கப்படி | | | + 1561-37 |
| அன்பளிப்புகள்:- | | | |
| 12. ஹரிதாஸ்-தமிழ்ப் பெண்கள் அமைப்பு | - Hamm | + 240-00 | |
| 13. திருமதி மேரி விஜயகுமார் | - Bietingheim | + 200-00 | |
| 14. திரு சி சிவஞானம் | - London | + 100-00 | |
| 15. ஓர் அன்பர் | - Germany | + 100-00 | |
| | | ............................................ | |
| | | + 640-00 | + 640-00 |
| | | | + 2201-37 |

அனுப்பியது...

| | | | |
|---|---|---|---|
| (1) ”ஒளிரும் வாழ்வகம்” - துணுக்காய் | | | |
| 06.07.2023 ( ரூபா 50.000 சதம் 00 ) | 158-45 | | |
| 14.07.2023 ( ரூபா 50.825 சதம் 48 ) | 150-00 | | |
| 12.08.2023 ( ரூபா 40.000 சதம் 00 ) | 122-81 | | |
| 18.09.2023 ( ரூபா1.50.000 சதம் 00 ) | 446-76 | | |
| (2) ”விழிப்புலனற்றோர் இல்லம்” - கைதடி | | | |
| 12.08.2023 ( ரூபா 30.000 சதம் 00 ) | 94-07 | | |
| (3) ”நல்லாயன் சிறுவர் இல்லம்” - மாங்குளம் | | | |
| 28.08.2023 ( ரூபா 47,438 சதம் 41 ) | 144-36 | | |
| 18.09.2023 ( ரூபா 65.758 சதம் 00 ) | 200.00 | | |
| | -------------- | | |
| | 1.316-45 | | |

| | | | |
|---|---|---|---|
| மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி | | | |
| 01.07.2023 - 31.07.2023 - 17-69 | | | |
| 01.08.2023 - 31.08.2023 - 20-49 | | | |
| ........... | | | |
| 38-18 | 38-18 | | |
| | .................. | | |
| | - 1.354-63 | - 1354-63 | |
| | | -------------------- | |
| மீதி கையிருப்பு 31.08.2023 | | + 846-74 | |
| | | -------------------- | |

# Good Shepherd Children Home

Mullaitivu Road,
Mankulam.
T.P.No : 0213208007

Date : 06.07.2023

எம் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய மண் வாசகர் சஞ்சிகை அமைப்பின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் இறையாசீர் கூறி நன்றியுடன் வரைவது

மாங்குளம் நல்லாயன் இல்லத்தினால் அரவணைக்கப்படும் சிறார்களின் நலனிலே அக்கறை கொண்டு கடல் கடந்து வாழ்ந்தாலும் தாய் மண்ணில் வாழும் உறவுகளுக்கு தாராள உள்ளத்தினால் சேமித்து எமது சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி வைக்கின்றமைக்காக உங்களது தாராள உள்ளத்தை பாராட்டுவதுடன் நன்றி கூறுகின்றோம். நீங்கள் ஒவ்வொருவரும் செய்து வருகின்ற இரக்கத்தின் அன்பு செயல் பலருக்கு மகிழ்வையும் அர்த்தமுள்ள வாழ்வினை வாழ வழி சமைத்துள்ளது என்பதை எமது உளக்கண்களால் காண முடியும்.

தற்பொழுது எமது இல்லத்தில் 33 பெண்பிள்ளைகள் இருந்து கல்வியை தொடர்கின்றார்கள். எமது இல்லத்தின் அரவணைப்பை நாடி வரும் பிள்ளைகள் பல பின்தங்கிய கிராமங்களில் இருந்து தரம் குறைந்த பாடசாலைகளில் அடிப்படை கல்வியை மேற்கொண்டதினால் அவர்கள் இங்குள்ள பாடசாலைகளின் கல்வி நிலைக்கு உயர்த்தப்பட வேண்டியவர்களாக உள்ளார்கள். இந்நிலைக்கு உயர்த்த மேலதிக ஆசிரியர்களை அழைத்து தனிப்பட்ட முறையில் இவர்களை ஊக்கப்படுத்த வேண்டியுள்ளது. இவர்கள் சிறுவர் நன்னடத்தை அலுவலகத்தினாலும் நீதிமன்றங்களினாலும் எம்மிடம் ஒப்படைக்கப் பட்டவர்கள் என்பதால் வெளியில் பெண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பு அற்ற காரணத்தினாலும் வெளியில் நடக்கும் வகுப்புகளுக்கு அனுப்புவது சிரமமாக உள்ளது.

தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்கள் உள்ளனர். வெளி மாணவர்கள் போன்று இவர்களுக்கு மேலதிக வகுப்புகளை மேற்கொள்ள குறைந்தது 5 அல்லது 6 ஆசிரியர்கள் தேவை. இதற்கான நிதி அனுசரணை அற்றதினால் பல இன்னல்களையும் பின்னடைவையும் எம்பிள்ளைகள் சந்திக்கின்றார்கள். தற்போது இல்லத்திற்கு கிடைக்கும் நிதியானது இவர்களின் அடிப்படை தேவைகளையும் இவர்களுக்கான உணவு மருந்து மற்றும் பாடசாலை உபகரணங்களை கொடுப்பதற்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய மட்டுமே போதுமானதாக உள்ளது. இவர்களின் கல்வி நிலையை உயர்த்த ஆங்கிலம் கணிதம் விஞ்ஞானம் தமிழ் வரலாறு புவியியல் போன்ற முக்கியமான பாடங்களில் தேர்ச்சி பெற வேண்டியவர்களாக உள்ளார்கள்.

ஆகவே இவ்வருடம் எமது இல்லத்தின் பராமரிப்பில் கல்வி பயிலும் மாணவர்களின் மேலதிக வகுப்புகளை ஏற்படுத்தி கொடுக்க தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டு நிற்கின்றோம். ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்த வர வேண்டி உள்ளதால் அவர்களுக்கு போக்குவரத்து செலவோடு சேர்த்து ஒரு ஆசிரியருக்கு ஒரு பாடத்திற்கு ஒரு மாதத்திற்கு 20000.00 ரூபா தேவையாக உள்ளது. இரண்டு ஆசிரியர்களுக்குரிய கொடுப்பனவை மாதாந்தம் தந்துதவினால் அது எமக்கு பெரும் உதவியாக இருக்கும்.

உங்களின் அரவணைக்கும் கரமும் தாராள உள்ளத்தின் பகிர்வும் தேவையில் இருக்கும் இம்மாணவ செல்வங்களின் வாழ்வை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. எனவே எமது தாழ்மையான வேண்டுகோளை ஏற்பீர்கள் என்று எதிர்பார்த்து இறையாசீர் கூறி விடைபெறுகின்றோம்.

நன்றி.

இப்படிக்கு
என்றும் உங்கள் அன்பு சேவையை மறவாத
அருட்சகோதரிகள் மற்றும் பிள்ளைகள்

S. Sumithra,
Sister In C[illegible]
Good Shepherd C[illegible] Home
Mankulam.

1

**Good Shepherd Child Development center,**
**Mullaithivu Road, Mankulam,**
**Srilanka.**

E-mail – mankulamcdc@gmail.com
Tel. No: 021 2060077/ +940775924582
Date : 28.08.2023

அன்பின் மண் சஞ்சிகையின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் நன்றியுடன் இறையாசீர் கூறி வரைவது,

உங்களின் தாராள உள்ளத்தின் உதவிக்கரத்தினால் 28.08.2023 அன்று அமரர் சன்முகநாதன் காந்தசீலன் அவர்களின் பிறந்த தினத்தில் மண் சஞ்சிகை அமைப்பினூடாக எம் இல்லத்தின் சிறுவர்களுக்கு சுவையான மதிய உணவளித்து சிறுவர்களை மகிழ்வித்தமைக்காக நன்றி கூறுகின்றோம். இந்நாளில் விண்ணகத்தில் தன்னை படைத்தவருடன் இணைந்திருந்து பிறந்த நாளை நினைவு கூரும் அமரர் சன்முகநாதன் காந்தசீலன் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை பிராத்திப்பதுடன் இவரின் பிரிவால் வாடும் குடும்பத்தை இறைவன் தேற்றிடவும் இறைவரம் வேண்டி நிற்கின்றோம். மேலும் திரு திருமதி சன்முகநாதன் வசந்தா குடும்பத்தினர் தமது மகனின் பிறந்த நாள் நினைவாக எமது இல்லத்திற்கு மதிய உணவிற்கும் பரிசுப் பொருட்களை வாங்குவதற்கும் இனுப்பிவைத்த ரூபா 47438.41 சதம் (144-36 யூரோ) எம் கரம் கிடைத்தது. அதற்காகவும் எமது நன்றிகளை கூறி நிற்பதுடன் மண் சஞ்சிகை அமைப்பின் குழுவினரின் பிறர் நலப் பணியை பாராட்டுகின்றோம். உங்களின் மக்கள் பணி மென்மேலும் சிறந்திடவும் அனைவரும் நலமாக நிறைவோடு வாழ ஆசித்து நிற்கின்றோம்.

இப்படிக்கு,
பிள்ளைகள் மற்றும் அருட்சகோதரிகள்

S. Sumithra

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212060620 Farm No:-0213204790 Mobile:-0774868085
Fax:-0774868085 Viber:-0774868085

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015

திகதி:-13/09/2023.

திரு வைரமுத்து சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

உதவி கோரல்

எமது அமைப்பானது மாற்றுத்திறனாளிகளின் நலன் சார்ந்து பல்வேறு உதவி திட்டங்களை ஆற்றி வருகின்றது. எமது அங்கத்தவர்களாக உள்ள மாற்று திறனாளிகள் பலர், ஊன்று கோல் மற்றும் சக்கர நாற்காலி பாவிப்பவர்களாக உள்ளனர். இருந்தபோதும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி திட்டங்கள் தற்போது குறைவடைந்து உள்ளமையினால் மிகுந்த சிரமத்துடன் எமது மாற்றுத்திறனாளிகள் வாழ்கின்றனர். இதனால் தமது அன்றாட செயற்பாடுகளை மேற் கொள்வதில் மிகுந்த கஸ்டத்தினை எதிர் கொள்கின்றனர்.

எமது மாற்றுத்திறனாளிகளான சிவர்சன் சுபிதா, கந்தசாமி இந்துமதி, துரைராசா சசிதரன், தியாகராசா விஜிதரன், துரைராசா சுபருபன், சத்தியானந்தம் சோபனா, சத்தியசீலன் ஜெனனி, செல்லப்பா அற்புதராசா ஆகிய பெயர் விபரத்தினை உடைய 08 நபர்களுக்கு ஊன்று கோலும் செல்வரூபன் மேனகா, சந்திரலிங்கம் கலைச்சனா, நடராசா துஸ்யந்தினி, ஆகியோருக்கு 03 சக்கர நாற்காலியும் தேவைப்படுகின்றது. இவற்றினைக் கொள்வனவு செய்வதற்கு தங்களால் ஆன உதவியினை நல்குமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.

03 விசேடதேவையுடைய நபர்களுக்கான சக்கர நாற்காலி =61580×3

184,740.00

08 விசேடதேவையுடைய நபர்களுக்கான ஊன்று கோல் =15300× 08

122,400.00

மொத்தம் =184740+ 122,400

=307,140.00

சி.சிவன்

தலைவர்

ஒளிரும் வாழ்வு அமைப்பு

துணுக்காய்

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

# மண் சஞ்சிகை ஆசிரியரின் 70வது பிறந்தநாள் படங்கள்..(03.09.2023)























## இலவசம்!..

யேர்மனி "மண்" சஞ்சிகையின் ஆசிரியரான எனது 70 பிறந்தநாள் மற்றும் தமிழ் ஊடகப் பணியில் 50 ஆண்டுகள் நிறைவையொட்டி "இருமலர்கள்" என்னும் நூல் ஒன்றை 03.09.2023 அன்று எனது பிறந்தநாள் விழாவில் வெளியீடு செய்துள்ளேன்.

எனவே இம்மலரைப் பெற விரும்பு பவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். தபால் 1.60 Euro முத்திரைகளைமட்டும் எமக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்..

**- ஆசிரியர் -**


## மண்சஞ்சிகை ஆசிரியருக்கு வாழ்த்துகள்!..

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட பணியினை மிக்க உன்னதமான பாங்காக 33 வருடங்களாக பலதரப்பட்ட சிறப்பு அம்சங்களுடன் மண் சஞ்சிகையை வாசகர்களை ஆவலுடன் காத்திருந்து வாசிக்கும் விதமாக பிரசுரிக்கும் ஆளுமை போற்றத்தக்கது.. ஒவ்வொரு பக்கமும் ரசனையை ஊக்குவிக்கும் விதமாக உணர்வுகளின் தேடலுக்கும் உள்ளங்கையில் உலகத்தை அறியும் விதமாக பிரசுரமாகும் ஒவ்வொரு ஆக்கமும் உடம்புக்கு தேவையான சத்துக்கள் போன்று மனதிற்கு தரும் ஊட்டச் சத்துக்கள் போன்றே உள்ளது .

உங்கள் பக்கம் மலையகம் பற்றிய உணர்வின் வெளிப்பாடாக வந்ததை உணரமுடிந்தது .வாசிக்கும் பத்தரிகைகளில் இவர்களின் வாழ்வின் சீரிய மாற்றம் எப்போ.... என்ற ஆதங்கத்திற்கு பதில் உள்ளதா... என்ற தேடலுடந்தான் எல்லோரும் ....நல்லவைக்கு ஒன்றிணைவு அவசியம் .இதனை மன வேதனையுடன் சித்தரித்துள்ள ராஜேஸ்வரியின் கவிதை அருமை .

ஒவ்வொரு படைப்புகளின் கிடைத்த ரசனையை விமர்சிக்கவே அதிவிருப்பம்...அடுத்த மன்சஞ்சிகையின் பிரதியின் ஆக்கங்களை நுகரும் ஆவலுடன் ........அகவை எழுபதின் மகிழ்ச்சி பலமடங்கு உத்வேகம் தந்திடட்டும் ....வாழ்த்துக்கள் ..உங்கள் தொடர்பணிக்கு இறைவனின் ஆசிகள் நிறைந்திருக்கும் நன்றியுடன்

**சர்வேஸ்வரி... யேர்மனி..(மண்ணின் வாசகர்)**













உரும்பராயில் வசித்த தந்தையார் மறைந்து 28வது ஆண்டு நினைவாக துணுக்காயில் அமைந்துள்ள ஒளிரும் இல்ல மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோருக்கு 10.07.2023 அன்று உணவு வழங்கப்பட்டது. நிதி அனுசரணை மகள் திருமதி இராஜேஸ்வரி சிவராசா - யேர்மனி.









ஏழாலையில் வசித்த தாயார் மறைந்து 1வது ஆண்டு நினைவாக துணுக்காயில் அமைந்துள்ள ஒளிரும் இல்ல மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோருக்கு 20.07.2023 அன்று உணவு வழங்கப்பட்டது. நிதி அனுசரணை மகன் திரு ப. பிரபாகரன் - யேர்மனி.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 221



Mr. Gary Ananthasangaree / திரு ஹரி ஆனந்தசங்கரி

புலம்பெயர் தமிழ் உலகின் முதலாவது மந்திரி. கனடா பாராளுமன்றத்தில் முதலாவது தமிழ் அமைச்சர்.

வாழ்த்துகள்!...



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |